இப்பொழுது தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது




அபிமன்யு

ஜூபிடர் தயாரிப்பு

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா & புதுக்கோட்டை சமஸ்தானம்:

ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், மதுரை

மலபார் உரிமைகள்: வர்மா பிக்சர்ஸ், திருப்பணித்துறை
[illegible]: சந்துரு பிலிம்ஸ், எர்ணாகுளம்
ஆந்திராவுக்கு: பூர்ணா பிக்சர்ஸ், பெஜவாடா



உங்கள் பள்ளிக்கூடம் வெகு சமீபத்தில் இருக்கிறது...
எங்கள் எல்லா ஸ்டாக்கிஸ்ட்களிடமும் எப்பொழுதும் விற்பனைக்குக் கிடைக்கும்
HIND CYCLE
THE TOUGH CYCLE
FOR THE ROUGH ROAD



வாழ்க்கையில் புதிய ஒளி
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 | இதழ் 45 — ஜூன் 6 — சர்வதாரி வைகாசி 24

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

'மாடு பிடிச்சண்டை' என்று நேயர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். முற்காலத்தில் ராஜாக்களுக்குள் மாடுகள் மூலமாகத்தான் சாதாரணமாகச் சண்டை ஆரம்பமாகும். ஒரு தேசத்து ராஜாவுடன் இன்னொரு தேசத்து ராஜா ஏதோ காரணத்தினால் கோபங்கொண்டு யுத்தம் தொடங்க விரும்பினால் அந்த தேசத்தைச் சேர்ந்த மாட்டு மந்தைகளைப் பலாத்காரமாக ஓட்டிக்கொண்டுவரப் படைகளை ஏவுவான். இதுதான் அந்தக்காலத்து 'யுத்த அறிவிப்பு' முறை (Declaration of War). பாரதம் விராடபர்வத்தில் இந்த விவரத்தைக் காணலாம்.



முற்காலத்தில் போலவே இந்தக் காலத்திலும் ஒரு நாட்டின் செல்வத்தில் கால்நடைச் செல்வம் மிக முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறது. மாடுகள் நிலத்தை உழுது பண்படுத்துகின்றன; நீர் இறைக்க உதவுகின்றன; நிலவளத்துக்கு இன்றியமையாத உரத்தைக் கொடுக்கின்றன. மாடுகளின் எலும்புகளும் தோலுங்கூட மனிதருக்குப் பயன்படுகின்றன. பசுவோ காமதேனுவாக விளங்குகிறது. குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் பெரியவர்களின் உடல் நலத்துக்கும் பசும்பாலைப்போல் சிறந்தபொருள் வேறொன்றுமில்லை.

அடிமை இந்தியாவில் எல்லாத் துறைகளிலும் நாம் தாழ்வடைந்திருந்தது போல் கால்நடை வளர்ப்பதிலும் பின்வாங்கி யிருந்தோம். ஆயினும் இந்திய தேசத்தில் கால்நடை அபிவிருத்தி எவ்வளவு ஏற்படக்கூடும் என்பதற்கு ஆங்காங்கே சில இடங்கள் உதாரணமா யிருந்தன. அவற்றில் கோயமுத்தூர் ஜில்லா ஒன்று. கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த காங்கேயம் காளைகள்,—முக்கியமாக, பழைய கோட்டைக் காளைகள்,—இந்தியாவிலேயே மிகப் பிரசித்தமானவை.

சமீபத்தில் திருப்பூரில் நடந்த அகில இந்திய கால்நடைக் காட்சிக்கு விஜயம் செய்திருந்த சில ரிஷபங்களை நமது அட்டைப்படத்தில் காணலாம். "போட்டோவுக்கு நிற்கிறோம்; கல்கி அட்டைப் படத்தில் போடப்போகிறார்கள்" என்று தெரிந்தே கம்பீரமாக நிற்பனபோல் காட்சி தருகின்றன.

மேற்படி கால்நடைக் கண்காட்சியைப் பற்றி விவரமான கட்டுரையும் இன்னும் சில அருமையான படங்களும் அடுத்த "கல்கி" இதழில் வெளியாகும்.

—போட்டோ: எம். டி. கணேசன்.

யாரும் பிரமிக்கிறார்கள்

"அதைவிட விலை அதிகமல்லவா"

என்கிறார்கள்



உண்மையில் அப்படியில்லை. இது வரை உற்பத்தி செய்யப்பட்ட பௌண்டன் பேனாக்களுள் மதிப்பிற் சிறந்தது புதிய கோல்டன் ப்ளாட்டினம் பேனாதான். என் இரேல் செய்த மூடி - பல்வேறு வர்ணக் கவர்ச்சி - இயாதி வாய்ந்த ப்ளாட்டினம் மூள், ஆகியவைகளுடன் கூடிய இந்த நவநாகரிகப் பேனாவை உபயோகித்தால்தான் நம்ப முடியும்.

புதிய கோல்டன்

ரூ. 5/-

Platignum

REGD

பௌண்டன் பேனா

இங்கிலாந்தில் செய்யப்பட்டது

வர்த்தக விசாரணைகளுக்கு முழு உரிமை பெற்ற வினியோகஸ்தர்கள் :

மூல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்

15, கச்சூராம செட்டி தெரு, மதராஸ்

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 45

என்ன சேதி?

பலன் ஒன்றுதான்

எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி? தென்னாப்பிரிக்கா பார்லிமெண்டுக்கு நடந்த தேர்தலில் நாஷனலிஸ்டு கட்சித் தலைவர் டாக்டர் மாலன் வெற்றிபெற்றுள்ளார். யுனைடெட் கட்சித் தலைவரும் தென்னாப்பிரிக்கா பிரதம மந்திரியுமான ஜெனரல் ஸ்மட்ஸ் தோல்வியடைந்தார். தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் சம்பந்தப்பட்ட வரையில் மாலனின் வெற்றியோ அல்லது ஸ்மட்ஸின் தோல்வியோ அதிக மாறுதலை உண்டு பண்ணிவிடப் போவதில்லை. டாக்டர் மாலன் அதி தீவிர நிற வெறியர் என்றும் ஜெனரல் ஸ்மட்ஸ் அவ்வளவு வெறி பிடித்த நிறத்துவேஷி அல்ல என்றும் சில பத்திரிகைகள் வர்ணிக்கின்றன. தென்னாப்பிரிக்காவில் நிற வெறியை அடியோடு ஒழிக்கவும், அவ்வாறு ஒழிக்க முடியாவிடில் அந்த உத்தமமான முயற்சியில் தோல்வியுற்று உலக மக்களின் நன் மதிப்புக்குப் பாத்திரம் ஆகவும் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை ஸ்மட்ஸ் இழந்து விட்டார். அவரது ஆட்சி காலத்தில் தென்னாப்பிரிக்காவில் நிறத் துவேஷத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய புதிய சட்டங்கள் முளைத்தன. அந்தச் சட்டங்களின் கீழ் இன்றும் இந்தியர்கள் சிறை சென்று வருகிறார்கள். நிறவெறியைக் கண்டித்து உலக மகா சபையில் பாரத நாட்டின் அருந்தவப் புதல்வி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் பெற்ற வெற்றி, தென்னாப்பிரிக்கா சர்க்காரின் அநீதியை உலகம் அறிய நிரூபித்தது. எனினும், அங்குள்ள இந்தியர்களுக்கு அதனால் பரிகாரம் கிடைக்கவில்லை. இப்போது மாலனின் வெற்றியினாலும் ஸ்மட்ஸின் தோல்வியினாலும் தென்னாப்பிரிக்கா அரசியலில் மாறுதல்கள் ஏற்படலாமென்றாலும், சென்ற பல வருஷங்களாக அங்கு தலைவிரித்தாடி வரும் நிறவெறி மாறுதலின்றி சிரஞ்சீவியாகவே இருந்து வரும். எனவே ஸ்மட்ஸின் தோல்வியைக் கண்டு இந்தியர்கள் அழமாட்டார்கள்; மாலன் அடைந்த வெற்றியைக் கண்டு சந்தோஷப்படவும் மாட்டார்கள்.

சென்னைக்குப் பெருமை

பூரண மது விலக்கை அமுலுக்குக் கொண்டு வந்து மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டிப் பெருமை பெற்ற சென்னை மாகாணம், இப்போது மற்றொரு முக்கிய துறையிலும் இதர மாகாணங்களுக்கு வழிகாட்டி யிருக்கிறது. சர்க்கார் எடுத்து நடத்த வேண்டிய தொழில்களில் மோட்டார் பஸ் போக்குவரத்தும் ஒன்று என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். சென்னை நகர் சம்பந்தப்பட்ட வரையில் மோட்டார் பஸ் போக்கு வரவு பூரணமாக தேசியத் தொழிலாகி விட்டது. அதாவது இந்த மாதம் முதல் தேதியிலிருந்து சென்னை நகரில் ஓடும் பஸ்கள் யாவும் சென்னை சர்க்காருக்குச் சொந்தமானவை, சென்னை மகா ஜனங்களுக்குச் சொந்தமானவை. பல்வேறு கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் சில மாதங்களுக்குள் சென்னை சர்க்கார் இந்தக் காரியத்தைச் சாதித்தது போற்றத் தக்கது என்பதில் சந்தேகமில்லை.


இவ்வளவு சீக்கிரத்தில் பஸ் போக்குவரத்தை தேசியத் தொழிலாக்குவதில் வெற்றி பெற்ற சென்னை சர்க்கார், மேற்படி நிர்வாகத்திலுள்ள குறைகளையும் நிவர்த்திப்பதில் வெற்றி பெறுவார்கள். காலக்கிரமத்தில் பஸ்களின் தொகையும் அதிகமாகி ஜனங்கள் நடு வழியில் மணிக்கணக்காக நின்று தவம் புரியும் பரிதாபக் காட்சி மறையும் என்று நம்புகிறோம். அது எப்படியாயினும், இந்தியாவிலேயே மோட்டார் பஸ் போக்குவரத்தை முதன் முதலாகத் தேசியத் தொழிலாக்கிய பெருமை வேறெந்த நகருக்கும் கிடைக்கவில்லை. சென்னைக்குத்தான் கிடைத்திருக்கிறது என்பதை நினைக்கும் போது, பஸ் பிரயாணத்தில் ஏற்படக்கூடிய கஷ்டங்களையெல்லாம் மறந்து ஜனங்கள் பெருமிதம் கொள்ளலாம்.

இந்தியாவுக்குப் பிரிட்டன் கொடுக்க வேண்டிய ஸ்டர்லிங் பாக்கியை யொட்டிச் சமரசம் பேசுவதற்காக ஸ்ரீ. ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் தலைமையில் இந்தியாவிலிருந்து பல நிபுணர்கள் சென்றிருக்கிறார்கள். அத்தனை பேர்களைப் பார்த்ததும் பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி பீதியடைந்தாலும் அடையலாம்.



பாகிஸ்தான் மாகாணங்களில் ஒன்றன் பின் ஒன்றாக மந்திரி சபை நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. பாகிஸ்தான் தலைவர்கள் அந்தத் தீராத சிக்கலில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள்.





போகுது பார் ரயில் வண்டி
போவாரா புண்ணியவான்?

"ஆகா! அதிசயம்! அற்புதம்! எஸ். ஐ. ஆர். ரயில் வண்டிகள் ஓடுகின்றன! தண்டவாளங்களில் உருண்டு உருண்டு ஓடுகின்றன! கிட்டத்தட்ட எல்லா வண்டிகளுமே ஓடுகின்றன! அரைமணி ஒரு மணிக்குமேல் தாமதித்துக் கிளம்புவதில்லை! ஆறு மணி ஏழு மணிக்குமேல் தாமதமாய் வந்து சேருவதில்லை! தூத்துக்குடிக்குப் புறப்பட்ட வண்டி விழுப்புரத்தில் நின்று விடுவதில்லை. மதராஸுக்குப் புறப்பட்ட வண்டி ஜோலார் பேட்டையில் முகாம் போட்டு விடுவதில்லை!............ எப்படி என் சாமர்த்தியம்! இந்த டிரைவர் — பயர்மேன் வேலை நிறுத்தத்தை எவ்வளவு ஜோராகச் சமாளித்தேன் பார்த்தீர்களா?" என்பதாக எஸ். ஐ. ஆர். ஜெனரல் மானேஜர் மிஸ்டர் ரெயினல்ட்ஸ் மார்பைத் தட்டிக் கொண்டு பேசுவார். ஏன் பேசமாட்டார்? பேஷாகப் பேசுவார்! அறிக்கைகளும் விடுவார். யார் அவரைத் தடுக்க முடியும்?

ஆனால் சென்ற ஒருமாத காலமாகத் தென்னிந்தியாவில் ஏற்பட்ட ரயில் போக்கு வரவுக் குழப்பங்களினால் ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களை நினைத்துப் பார்க்கும்போது மிஸ்டர் ரெயினல்ட்ஸைப்போல் நாம் திருப்தி யடைய முடியாது; பெருமை கொள்ளவும் முடியாது. "புண்ணியவான் ரெயினல்ட்ஸ் போய்த் தொலைய மாட்டாரா?" என்று விரும்பாமலிருக்கவும் முடியாது.

எத்தனை முக்கியமான காரியங்களை முன்னிட்டுப் பிரயாணம் புறப்பட்டவர்கள் நடு வழியில் திண்டாடி நின்றார்கள்? கலியாண முகூர்த்தத்தை வைத்து விட்டுப் புறப்பட்டவர்கள் எத்தனை பேர் நடு வழியில் ஸ்திரீகள் குழந்தைகளுடன் நிற்க இடம் இன்றி உண்ண உணவின்றி முன்னுக்கும் போக முடியாமல் பின்னுக்கும் போக முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்? எத்தனை வியாபாரிகள் சமயத்துக்குப் பொருள்களைக் கொண்டு சேர்க்கமுடியாமல் நஷ்டப்பட்டார்கள்? எத்தனை முக்கியமான காரியங்கள் தடைப்பட்டுப் போயின! எவ்வளவு லட்சம் ஜனங்களின் பொன்போன்ற விலையுயர்ந்த நேரம் வீணாயிற்று! இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

முறை தவறி வேலைநிறுத்தம் செய்து பொதுமக்களைத் தொல்லைப்படுத்திய என்ஜின் டிரைவர்களும் பயர்மென்களும் பொறுப்பாளிகள் தான். அவர்கள் முறை கேடாக நடந்து கொண்டது பற்றி வருந்துகிறோம்.

ஆனால் அவர்கள் முறை தவறி நடந்து கொண்டதற்கு ஓரளவு காரணமும் சமாதானமும் சொல்லலாம்.

மிஸ்டர் ரெயினல்ட்ஸ் துரையின் முன் யோசனைக் குறைவுக்கும் மூட நிர்வாகத்துக்கும் சமாதானமே சொல்ல முடியாது.

எஸ். ஐ. ஆர். என்ஜின்களில் நீண்ட நாளாகக் கரிப் புகையோடு அதிருப்திப் புகையும் சேர்ந்து குமுறிக்கொண்டிருந்தது என்பது தெரிந்த விஷயம். வேலை நிறுத்தம் ஏற்படலாம் என்பதற்குப் பல அறிகுறிகள் தென்பட்டன. முன்னறிக்கையும் கிடைத்தது. அப்படி டிரைவர்கள் — பயர்மென்கள் வேலை நிறுத்தம் செய்தால் பொது மக்கள் எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள் என்பது மிஸ்டர் ரெயினல்ட்ஸுக்குத் தெரியாமலிருந்திருக்க முடியாது. ரயில்கள் நடு வழியில் நின்றால் பிரயாணிகள் எவ்வளவு தொல்லைப்படுவார்கள் என்பதும் அவருக்குத் தெரியாமலிராது. அப்படியானால் அந்தக் கஷ்டங்களும் தொல்லைகளும் ஏற்படாமல் தடுப்பதற்கு மிஸ்டர் ரெயினல்ட்ஸ் என்ன செய்தார்?

பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் அனுப்பினார். ரிடயர் ஆன டிரைவர்களும் பயர்மென்களும் 'தாற்காலிக'மாய்த் தேவை என்று விளம்பரம் செய்தார். பல வண்டிகளை ரத்து செய்தார். எச்சரிக்கை நோட்டீஸுகள் விட்டுக் கொண்டிருந்தார்!— மற்றப்படி என்ன செய்தார்?

வேலை நிறுத்தம் கூடாது; சந்தேகமில்லை. அதிலும் சுதந்திர இந்தியாவின் ஆரம்ப காலத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவே கூடாது.

ஆனால் நிர்வாகிகளும் அதிகாரிகளும் வேலை நிறுத்தத்தை வருந்தி அழைக்கவும் கூடாது.

"திருடக் கூடாது" என்று சாஸ்திரம் சொல்கிறது; சட்டம் விதிக்கிறது. திருட்டைத் தடுப்பதற்குப் போலீஸாரும் இருக்கிறார்கள். — ஆனால் இதையெல்லாம் நம்பி வீட்டுக் கதவுகளைத் திறந்து போட்டு விடலாமா? அப்படிச் செய்வது. "திருடனே! வருக! வருக!" என்று வருந்தி அழைப்பதாகாதா?

"வேலை நிறுத்தம்" ஒரு திருடன். அவன் நாட்டின் உற்பத்திச் செல்வத்தைக் கொள்ளை கொள்கிறான். வேலை நிறுத்தத்தினால் தேசமும் சமூகமும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை அடைகின்றன.

ஆனாலும் வேலை நிறுத்தம் வந்தே தீரும்படியான நிலைமையை யாரும் ஏற்படுத்தக் கூடாது.

சில சமயம் சர்க்காரும் அதிகாரிகளும் அம்மாதிரி நிலைமையை ஏற்படுத்துகிறார்கள்.

* * *

கோயமுத்தூரில் மூன்று மாதம் நடந்த முப்பதினாயிரம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைப் பற்றி நேயர்களுக்குத் தெரியும். அதைப் பலமுறை நாம் பலமாகக் கண்டித்தும் இருக்கிறோம். ஆயினும் அந்த வேலை நிறுத்தத்தை வருந்தி அழைத்தவர்கள் நமது சென்னை சர்க்காரின் மந்திரிமார்கள் என்பதைச் சொல்லியாகவேண்டும்.

ஆலைத் தொழிலாளரின் சம்பளத்தையும் வேலை அளவையும் நிர்ணயிப்பதற்காக ஒரு ஜட்ஜைச் சென்னை சர்க்கார் மத்தியஸ்தராக நியமித்தார்கள். அவருடைய தீர்ப்பின்படி 11 ரூபாய் சம்பளம் பெற்றுப் பஞ்சு பொறுக்கும் வேலைசெய்த கிழவியின் சம்பளம் ரூ. 26 ஆயிற்று! மாதம் 26 ரூபாய் சம்பளம் வாங்கிய தொழிலாளிக்கு வேலை அளவு அதிகம் ஆயிற்று! அந்த அளவின்படி வேலை செய்தால் பதினாயிரம் தொழிலாளிகளுக்கு வேலை போவதாயிற்று!

இத்தகைய அழகான தீர்ப்பை முன் யோசனையின்றிச் சென்னை சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வந்தபடியினாலேயே முப்பதினாயிரம் ஆலைத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தமும் அதன் பயனாகக் கோடி கோடிகளும் துணி உற்பத்தி நஷ்டமும் பண நஷ்டமும் நேர்ந்தன.

பதினாயிரம் தொழிலாளருக்கு வேலையில்லாமல் செய்யக்கூடிய எந்த ஏற்பாடும் குழப்பத்தை விளைவிக்கும் என்று அரசியல் வாதிகளாகிய மந்திரிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதற்குத் தகுந்தபடி முன்யோசனையுடன் மத்தியஸ்தரின் தீர்ப்பை அமுல் நடத்தியிருக்க வேண்டும்.

* * *

ஆற்றில் வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. ஒருவன் அந்த ஆற்றைக் கடக்க விரும்பினான். ஆற்றின் ஆழம் என்ன என்று ஒரு என்ஜினியரை விசாரித்தான். "சராசரி ஆழம் நாலரை அடி!" என்று என்ஜினியர் சொன்னார். அதை நம்பி அந்த மனிதன் ஆற்றில் இறங்கினான். பாதி வரையில் இரண்டு அடி மூன்று அடி ஆழந்தான் இருந்தது. திடீரென்று எட்டு அடி ஆழம் ஆகிவிட்டது. நீந்தத் தெரியாத அம்மனிதன் வெள்ளத்தில் மூழ்கிக் காலமானான்.

சர்க்கார் நியமிக்கும் மத்தியஸ்தர்கள், கமிட்டிகள், கமிஷன்கள் — இவர்கள் செய்யும் தீர்ப்புப் பெரும்பாலும் என்ஜினியர் சராசரி ஆழம் சொன்னது போலத்தானிருக்கும்.

சிந்தனா சக்தி உள்ள அரசாங்க மந்திரிகள் யோசித்துக் குறைபாடுகளை நீக்கித் தீர்ப்பை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

* * *

ரயில்வே கம்பெனி ஊழியர்களின் சம்பள விகிதங்களைப் பற்றி விசாரித்து நிர்ணயிப்பதற்காக இந்திய சர்க்கார் ஒரு கமிஷன் நியமித்தார்கள். இந்த சம்பளக் கமிஷன் விசாரணை நடத்தி முடிவுகளைத் தெரிவித்தது. அந்த முடிவுகள் சில ரயில்வே ஊழியர்களுக்கு நியாயம் செய்தன; சிலருக்கு நியாயம் செய்யவில்லை; வேறு சிலருக்கு அநியாயமே செய்து விட்டன.

முக்கியமாக, எஸ். ஐ. ஆர். ரயில்வேயைச் சேர்ந்த என்ஜின் டிரைவர்களுக்குப் பயர்மென்களுக்கும்மேற்படி சம்பளக் கமிஷன் அநியாயம் செய்து விட்டது என்று சொல்லலாம்.

பின் வரும் மாதச் சம்பள ஜாபிதாவைப் பாருங்கள்:—

உத்தியோகம்	சம்பளக் கமிஷன் சிபார்சுக்கு முன்	சம்பளக் கமிஷன் சிபார்சுப்படி	விளைவு
1. குமாஸ்தா	ரூ. 25 முதல் ரூ. 40 வரை	ரூ. 55 முதல் ரூ. 130 வரை	120 சதம் அதிகம்
2. பிட்டர்	ரூ. 25	ரூ. 55	120 ச. அ.
3. கண்ட்ரோலர்	ரூ. 80	ரூ. 200	150 ச. அ.
4. காங்கி ஆள்	ரூ. 13	ரூ. 30	250 ச. அ.
5. கார்டு	ரூ. 45	ரூ. 60	33 1/3 ச. அ.
6. பயர்மென்	ரூ. 42½	ரூ. 40	27½ சதம் குறைவு
7. டிரைவர்	ரூ. 76 (எம். எஸ். எம்.) ரூ. 100 (எஸ். ஐ. ஆர்.)	ரூ. 60 ரூ. 60	27 ச. கு. 40 ச. கு.

இந்த ஜாபிதாவைப் பார்த்தவுடனே பயர்மென்களுக்கும் டிரைவர்களுக்கும் இழைக்கப்பட்டுள்ள அநீதி தெரிய வரும். ரயில்வே சம்பந்தமான உத்தியோகங்களில் மிகவும் முக்கியமானவையும் கஷ்டமானவையும் பயர்மென்—டிரைவர் வேலைதான் என்று எல்லாரும் ஒப்புக் கொள்வார்கள். மற்ற வேலைகளுக்கெல்லாம் சம்பளம் உயர்த்தியிருக்க அந்த வேலைகளுக்கு மட்டும் சம்பளம் உயர்த்தவில்லை. உயர்த்தாதது மட்டுமா? சம்பளத்தைக் குறைத்தே இருக்கிறது!

ஏன் தெரியுமா? இந்தியாவிலுள்ள மற்ற ரயில்வேக்களில் பயர்மென்களுக்கும் டிரைவர்களுக்கும் சம்பளம் ரொம்பக் குறைவாயிருந்ததாம். அதைக் கொஞ்சம் அதிகமாக்கி மாதம் ரூ. 60 என்று தீர்மானித்தார்களாம்.

ஆனால் எம். எஸ். எம்., எஸ். ஐ. ஆர். இரண்டிலும் ஏற்கெனவே சம்பளம் அதிகமாயிருந்தது. அதைப் பற்றிக் கமிஷன் கவனிக்க முடியுமா? முடியாது! இந்தியா பூராவுக்கும் சராசரிச் சம்பளம் சரிக்கட்ட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கவலை. அதை நிறைவேற்றி விட்டார்கள்!

இதே சராசரிச் சம்பளக் கணக்கை முன்னிட்டுத்தான் எஸ். ஐ. ஆர். டிரைவர்களும் பயர்மென்களும் சம்பளத்தைப் பற்றி அதிகமாய்ப் புகார் சொல்ல முடியவில்லை. சம்பள விஷயத்தில் ஏற்பட்ட ஆத்திரத்தையும் கோபத்தையும் வேறு துறையில் காட்டினார்கள். "பதினாறு மணி நேரம் சேர்ந்தாற்போல் நெருப்படியில் எப்படி இருப்போம்? எங்களுக்கும் எட்டு மணி நேர வேலை கொடுங்கள்!" என்று கேட்டார்கள்: மகஜர் எழுதினார்கள்; தீர்மானம் செய்து அனுப்பினார்கள்; ஒன்றுக்கும் கேள்வி முறையில்லாமற் போகவே எட்டு மணி நேரம் ஆனவுடனே என்ஜினிலிருந்து இறங்கிச் சென்றார்கள்.

மிஸ்டர் ரெயினால்ட்ஸ் துரை கொஞ்சம் கற்பனா சக்தி உடையவராயிருந்தால், பிறருடைய மன வேதனையை உணரும் சக்தி உள்ளவராயிருந்தால் அவரும் அனுதாபப் பட்டிருப்பார். சட்டத்தையும் விதியையும் சம்பளக் கமிஷன் சிபார்சையுமே நம்பியிராமல் டிரைவர்களையும் பயர்மென்களையும் நேரில் சந்தித்துப் பேசியிருப்பார். தம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்திருப்பார். பரிகாரம் தேடுவதாக உறுதி கூறியிருப்பார். ஏதோ ஒரு பரிகாரமும் தேடிக் கொடுத்திருப்பார்.

எஸ். ஐ. ஆர். தொழிலாளிகளில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்துக்கு உட்படாதவர்கள் என்ஜின் டிரைவர்களும், பயர்மென்களும், கார்டுகளுமே. இவர்கள் எந்த அரசியல் கட்சியின் ஆதிக்கத்துக்கும் உட்படாமல் தங்களுக்கு என்று தனியாகச் சங்கம் ஏற்படுத்தி நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட அருமையான, பொறுப்பு வாய்ந்த, கடமையில் பற்றுள்ள ஊழியர்களை வேலை நிறுத்த சுழலில் இறங்கும்படி செய்த பெருமை மிஸ்டர் ரெயினால்ட்ஸுக்கே உரியதாகும். ஆகையினாலேயே அந்தப் புண்ணிய புருஷர் போகாரா என்று கேட்கிறோம். போகும்போது பெருமையுடன் போவதுதானே புண்ணியவான்களுக்கு அழகு!



பாடபுத்தகக் கொள்ளை

பெரசேன

“மாலதி! எழுந்து நில்!”

ஏழை மாலதி எழுந்து நின்றாள்.

“உன்னுடைய பூகோள புத்தகம் எங்கே?” என்று ஆசிரியை கேட்டாள்.

“இன்னும் வாங்கவில்லை.”

“ஏன் வாங்கவில்லை?”

“அப்பா பணம் இல்லை என்கிறார்!”

“பாக்கிச் செலவுக் கெல்லாம் பணம் இருக்கிறது. புத்தகம் வாங்க மட்டும் பணம் இல்லையோ? வகுப்பை விட்டு வெளியே போ!” என்று ஆசிரியை கர்ஜித்தாள்.

மாலதி வெளியில் போய் நின்று கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தாள். சற்று நேரம் கழித்து ஆசிரியை “உள்ளே வந்து உட்கார்! நாளைக்குக் கட்டாயம் புத்தகம் வாங்கிக் கொண்டு வர வேண்டும், தெரியுமா? இல்லாவிட்டால் பள்ளிக் கூடத்துக்கே வர வேண்டாம்!” என்றாள்.

பள்ளிக்கூடம் விட்ட பிறகு மாலதியும் அவளுடைய தோழி சாரதாவும் பஸ் ஸ்டாண்டு பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள். மாலதி விம்மி அழுதாள். சாரதா “ஏன், மாலதி, அழுகிறாய்? வேண்டாம்! பூகோள டீச்சர் சமாசாரம்தான் உனக்குத் தெரியுமே?” என்றாள்.

மாலதி விம்மலுடன் “அதற்காக இல்லை, சாரதா! என் அப்பாவுக்கு மாதம் நாற்பத்தைந்து ரூபாய் சம்பளம். அரிசி வாங்கப் பணம் போதவில்லை. குழந்தைக்குப் பால் வாங்க முடியவில்லை. முப்பது ரூபாய் கடன் வாங்கிப் புத்தகமும் நோட்டுகளும் வாங்கியாகிவிட்டது. இன்னும் புத்தகம் வாங்கிக் கொடுங்கள் என்று அப்பாவை எப்படிக் கேட்பேன்?” என்றாள்.

“நிஜந்தான், அம்மா! எங்க அப்பாவுக்கு மாதம் இருநூறு ரூபாய் சம்பளம். அப்படியிருந்தும் ‘உனக்குப் புத்தகம் - நோட்டு வாங்கிக் கொடுக்க எனக்குச் சம்பாத்தியம் போதாது’ என்று சொல்கிறார். நீ என்ன செய்வாய்?” என்றாள் சாரதா.

இது சென்ற வருஷம் ஜூலை மாத ஆரம்பத்தில் உண்மையாக நடந்த சம்பவம்.

• • •

ஆயிற்று; ஜூன் மாதம் பிறந்து விட்டது. இந்த மாதக் கடைசிக்குள் பள்ளிக் கூடங்கள் எல்லாம் திறந்து விடும். பரீட்சை தேறிய குழந்தைகள் மேல் வகுப்புக்குப் போகும் ஆர்வத்துடன் உற்சாகமாகப் பள்ளிக்கூடம் போவார்கள். ஆனால் சில நாளைக்குள்ளேயே அவர்களில் அநேகம் பேர் ‘புத்தகம் நோட்டு வாங்கப் பணம் கொடுக்க வில்லை’ என்று பெற்றோர்கள் மீது குறைப்படுவார்கள். எத்தனை குழந்தைகள் மீது தாய் தகப்பனார் எரிந்து விழப் போகிறார்களோ தெரியாது.

ரூபாய்க்கு மூக்கால்படி அரிசி விற்கும் இந்தக்காலத்தில், ஏழைக் குடும்பங்களில் ஒவ்வொரு பையனுக்கும் பெண்ணுக்கும் புத்தகம் - நோட்டுக்கு முப்பது நாற்பது செலவழிக்க வேண்டுமென்றால், எரிச்சல் வராமல் என்ன செய்யும்?

எப்படியோ கஷ்டப்பட்டுக் கடன் வாங்கி வயிற்றெரிச்சல் தீரப் பிள்ளைகளைத் திட்டிக் கொண்டே பெற்றோர்கள் பணம் கொடுத்து விடுவார்கள். ஜூலை மாதம் 15-ந் தேதியிலிருந்து சிறுவர்களும் சிறுமிகளும் பச்சிளம் பாலகர்களும் புத்தகங்களையும் நோட்டுகளையும் சுமக்க மாட்டாமல் சுமந்து கொண்டு பள்ளிக்கூடங்களுக்குப் போகும் பரிதாபக் காட்சியை வீதிகளிலே பார்க்கலாம். சாதாரணமாகப் பத்து வயதுச் சிறுவன் ஒருத்தன் எட்டு பாடபுத்தகங்களும் பன்னிரண்டு நோட்டுப் புத்தகங்

களும் எடுத்துக் கொண்டு போவான். பதினறு வயதுப் பெண் ஒருத்தி பன்னிரண்டு புத்தகங்களும் பதினெட்டு நோட்டுகளும் எடுத்துக் கொண்டு போவாள். இவற்றைத் தவிர அட்லாஸ், மட்டப் பலகை, பேனு பென்சில், ரப்பர், மைக்கூடு, ஜியாமெட்ரி கருவிகள் உள்ள பெட்டி, வர்ணப் பெட்டி, பருத்த இவ்வளவும் கொண்டு போக வேண்டும். விளக்குமாறு ஒன்றுதான் பாக்கி. புத்தகம் முதலியவை வீதியில் விழுந்து சிதறி விட்டால் கூட்டிச் சேர்ப்பதற்கு விளக்குமாறு இருந்தால் சரியாக இருக்கும்!

* * *

இங்கிலீஷுக்கு, தமிழுக்கு, சரித்திரத்துக்கு, பூகோளத்துக்கு, கணக்குக்கு, இலக்கணத்துக்கு, ஸயன்ஸுக்கு என்று தனித்தனி பாட புத்தகங்கள்; 'நான்டிடெய்ல்' அல்லது 'ஸப்ளிமெண்டரி' எனப்படும் உப பாட புத்தகங்கள்; அந்தப் புத்தகங்களில் உள்ள பாடங்களுக்கு அர்த்தம், வியாக்யானம், விரிவுரை, பரீட்சைகளில் வரக்கூடிய கேள்விகள், பதில்கள் அடங்கிய 'நோட்ஸ்' புத்தகங்கள்;—இவையெல்லாம் அச்சிடப் பட்டவை.

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் சொல்லுகிற 'நோட்ஸு'களைக் குறித்துக் கொள்ள வெறும் காகிதத்தினலான நோட்டுப் புத்தகங்கள் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒன்று அல்லது இரண்டு; வியாசம் எழுதும் நோட்டுக்கள்; வீட்டுப் பாடம் எழுதும் நோட்டுக்கள்; காப்பி எழுதும் நோட்டுகள்; 'இம்போஸிஷன்' எழுதும் நோட்டுகள்.

ஹைஸ்கூலில் முதல் பாரத்திலிருந்து ஆறுவது பாரம் வரையில் படிக்கும் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் மேற் கூறியவையெல்லாம் வாங்கியாக வேண்டும்!

எதற்காக? ஏழைப் பெற்றோர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதற்காக! இரவும் பகலும் நெட்டுருப் பண்ணி உருப்போட்டு மூளையைக் கெடுத்துக் கொண்டு குட்டிச் சுவராய்ப் போவதற்காக!

* * *

பள்ளிக்கூடங்கள் என்னத்திற்காக இருக்கின்றன? உபாத்தியாயர்கள் எதற்காக இருக்கிறார்கள்? பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காக! கல்வி போதிப்பதற்காக! சல்லது; அப்படியானல் பாட புத்தகங்களும், 'நோட்ஸ்' புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் எதற்காக? அதிலும் குழந்தைகள் தூக்க முடியாமல் நிறைநிறத் தூக்கிக் கொண்டு போகும்படி அவ்வளவு புத்தகங்களும் நோட்டுகளும் எதற்காக?

பாஷை கற்பிப்பதற்குப் புத்தகம் வேண்டும் என்பது சரி; தமிழுக்கு ஒன்றும் இங்கிலீஷுக்கு ஒன்றும் சமஸ்கிருதம் அல்லது ஹிந்தி படிப்பவர்களுக்கு அந்தந்த பாஷைகளில் ஒன்றும், பாட புத்தகங்கள் இருந்தால் போதும் அல்லவா?

பூகோளம், சரித்திரம், ஸயன்ஸ், இலக்கணம், கணக்கு — இவற்றுக் கெல்லாம் புத்தகம் எதற்காக? வகுப்பில் உபாத்தியாயர் சொல்லிக் கொடுப்பது போதாதா? போதாது என்றால் பள்ளிக்கூடம் எதற்கு?

* * *

பாட புத்தகங்கள் பிரசுரிப்பதிலும், அவற்றை அங்கீகரிக்கும்படி செய்வதிலும் ஊழல்கள் மிகப் பிரசித்தமானவை.

பாட புத்தகக் கமிட்டியில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 'வேண்டியவர்கள்' சிலர் பாடபுத்தகங்களைத் தயாரிப்பார்கள். குறிப்பிட்ட அங்கத்தினருக்குத் தெரியப்படுத்தி விட்டுப் பரிசீலனைக்கு அனுப்புவார்கள். அங்கத்தினர்கள், "இவர் நம்முடைய மனிதர்; இவருக்கு ஒன்று போடுங்கள்!" "இந்த ஆசிரியர் உங்களுக்கு வேண்டியவர்; அவருக்கும் ஒன்று கொடுங்கள்!" என்ற முறையில் பாட புத்தகங்களை அங்கீகரித்து விடுவார்கள். மற்றப்படி அவர்கள் லஞ்சம் வாங்கிக் கொண்டோ லஞ்சத்துக்கு ஆசைப்பட்டோ பாட புத்தகங்களைச் சிபார்சு செய்வதாக நான் சொல்லத் தயாராயில்லை.

ஆனல் பாட புத்தகங்களில் லஞ்சம் தாண்டவமாடும் வேறு இடங்கள் இருக்கின்றன. இவை ஜில்லா போர்டு - முனிசிபாலிடிகளின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பள்ளிக்கூடங்களில் பாட புத்தகங்களை வைப்பது சம்பந்தமாகத்தான்.

ஒரு சமயம் ஒரு பிரபல பாடபுத்தகக் கம்பெனிக்காரரிடம் "இதோ இந்தப் பாட புத்தகத்துக்கு ஒரு ரூபாய் விலை வைத்திருக்கிறீர்களே? இதன் எத்தனை பிரதி செலவாகும்? இந்த ஒரு புத்தகத்தில் உங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்றேன்.

"குறைந்த பட்சம் பத்தாயிரம் புத்தகம் விற்கும். அங்கும் இங்கும் ஆட்களை அனுப்பி வேலை செய்தால் இருபதினயிரம் புத்தகம்

விற்கும். மூன்று வருஷத்தில் குறைந்தது ஐம்பதினாயிரம் விற்கலாம். ரொம்ப செல்வாக்குள்ளவர்கள் ஒரு லட்சம் புத்தகம் விற்று விடுவார்கள்" என்றார்.

"ஒரு லட்சம் புத்தகம் விற்றால் ஒரு லட்சம் லாபம் ஆகிறதோ? அதில் உங்களுடைய லாபம் என்ன?" என்று கேட்டேன்.

"என்னுடைய பங்கு இருபத்தையாயிரம் கூடாத பெரிய காரியம்."

"பாக்கி யெல்லாம்?"

"பிரதிக்கு நாலு அணா வீதம் லட்சம் பிரதி தயாரிப்பதற்கு இருபத்தையாயிரம் ரூபாய் செலவு ஆகும்."

"நீங்கள் புத்தகம் எழுதிய ஆசிரியருக்கு என்ன பங்கு?" என்றேன்.

"ஆயிரம் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரையில் கொடுப்போம்."

"இவ்வளவுதானா?"

"பின்னே என்ன? எண்பது ரூபாய், தொண்ணூறு ரூபாய் சம்பளம் வாங்கும் உபாத்தியாயருக்கு ஆயிரம், இரண்டாயிரம் மொத்தமாகக் கிடைத்தால் வாங்கிக் கொள்ள கசக்குமா?"

"சரி; பாக்கி ஐம்பதினாயிரத்துக்கு என்ன கணக்கு? சொல்லுங்கள்!"

"அங்கங்கே பாட புத்தகம் விற்கும் கடைக்காரர்களுக்கு 100க்கு 15 வீதம் கமிஷன் கொடுப்போம். அதில் பதினையாயிரம் போகும். பாக்கி முப்பத்தையாயிரமும் நாலாபுறமும் ஆள்கள் அனுப்புவதற்கும், ஜில்லா போர்டு - நகரசபை மெம்பர்களைப் பார்த்துச் சரிக்கட்டுவதற்கும் சரியாய்ப் போய் விடும்!"

மேலே நான் எழுதி யிருக்கும் சம்பாஷணை மூன்று நாலு வருஷத்துக்கு முன்பு நடந்தது. இப்போது ஒரு வேளை விகிதாசாரம் மாறுபட்டிருக்கலாம்; அல்லது லஞ்சமே ஒழிந்து போயிருக்கலாம். ஆயினும் பாட புத்தகங்களின் உற்பத்திச் செலவு, விற்பனைத் தொகை, லாபம் இவை குறித்த விவரங்கள் அதிகமாக மாறியிரா தென்றே நினைக்கிறேன்.

ஒரு வேளை பாட புத்தகங்கள் எழுதும் ஆசிரியர்கள் முன்னைக் காட்டிலும் அதிக பணம் பெற்றால் மகிழ்ச்சி அடைவேன். ஏனெனில் பாட புத்தகங்களுக்காக நமது ஜன சமூகம் செலவழிக்கும் மொத்தத் தொகையில் ஆசிரியர்களுக்குப் போய்ச் சேரும் தொகை மட்டுமே சரியான செலவு என்று சொல்லலாம். மற்றச் செலவெல்லாம் தண்டச் செலவுதான்!

• • •

சில நாளைக்கு முன்பு இனிப் பாட புத்தகங்களைச் சர்க்காரே வெளியிடப் போகிறார்கள் என்று ஒரு செய்தி வெளியாயிற்று. பிறகு அது மறக்கப்பட்டது.

இப்போதுகூடச் சில பாட புத்தகங்களைச் சர்க்காரே வெளியிட்டு வருகிறார்கள்.

உதாரணமாக எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருத பாட புத்தகங்களைச் சர்க்கார் பொறுப்பில் தயாரித்து வெளியிடுகிறார்கள்.

யுனிவர்ஸிடியின் பெயருடன் வெளியானாலும் சர்க்கார் பரீட்சையானதால் சர்க்கார் வெளியீடாகவே வைத்துக் கொண்டு சொல்கிறேன்.

1948-ம் வருஷத்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு ஆங்கிலப் பாட புத்தகம் சென்னை—ஆந்திர சர்வ கலாசாலைகள் வெளியிட்டிருக்கின்றன. மொத்தம் 89 பக்கங்கள் கொண்ட புத்தகம். பல ஆசிரியர்களுடைய கட்டுரைகளிலிருந்தும் கதைகளிலிருந்தும் எடுத்த விஷயங்கள். மேற்படி ஆசிரியர்களுக்குச் சன்மானம் கொடுத்திருக்க நியாயம் இல்லை. மொத்தம் 64,000 (அறுபத்து நாலாயிரம்) பிரதிகள் அச்சிடப்பட்டதாகப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் கடைசி வரியில் குறிப்பிட்டிருக்கிறது.

புத்தகத்தில் மருந்துக்கு ஒரு படம் கிடையாது; பாடங்களுக்கு ஒரு குறிப்புரை கிடையாது; ஒரு விளக்கம் கிடையாது.

இத்தகைய புத்தகத்துக்கு ரூ. 1—4—0 விலை வைத்திருக்கிறது!

சர்க்கார் பிரசுரமானதால் பள்ளிக்கூடங்களுக்கு நேரே அனுப்பி விடுவார்களாம். புத்தகக் கடைக்காரனுக்குக் கமிஷன்கூடக் கொடுப்பதில்லை!

பின்னே எதற்காக ரூ. 1—4—0 விலை வைத்திருக்கிறார்கள்? பிள்ளைகளைப் பெற்றவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதைத் தவிர வேறு எதற்கு?

ஆகக்கூடி, பெற்றோர்களின் தலையைத் தடவும் விஷயத்தில் பாட புத்தகங்களைச் சர்க்கார் வெளியிட்டாலும் ஒன்றுதான்; பிரசுரகர்த்தர்கள் வெளியிட்டாலும் ஒன்றுதான்! சர்க்காரே இவ்வளவு அதிக விலை வைத்து விற்பதால் கம்பெனிக்காரர்கள்

அதிக விலை வைக்கச் சௌகரியமாய்ப் போய் விடுகிறது.

பாட புத்தகங்களின் தரத்தைப்பற்றியோ வெனில், இப்போதைக்குச் சர்க்கார் பாட புத்தகங்களை விடத் தனிப்பட்ட கம்பெனிகளின் வெளியீடுகள் நன்றா யிருக்கின்றன. ஏதோ சில படங்களையும் குறிப்புரைகளையு மாவது சேர்த்து வைக்கிறார்கள்.

ஆனால் இங்கிலாந்தில் சிறுவர்—சிறுமிகளுக்காக வெளியிடப்படும் பாடபுத்தகங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம் ஊர்ப் புத்தகங்களைக் குப்பைத் தொட்டியில் போடலாம் என்று தோன்றும்.

இரண்டாவது, மூன்றாவது, நாலாவது பாரங்களுக்கு லண்டன் பிளாக்கி அண்டு ஸன்ஸ் ஆங்கில பாட புத்தகங்கள் வெளியிடுகிறார்கள். அவற்றில் சில கான்வென்ட் பள்ளிக்கூடங்களின் உபயோகத்துக்காக இந்தியாவுக்கு வருகின்றன. பாட புத்தகத்தின் அட்டையும் அட்டைப் படமுமே கண்ணைக் கவரும். உள்ளே பிரித்துப் பார்த்தால், அப்பப்பா! எத்தனை வர்ணப் படங்கள்! எவ்வளவு விதவிதமான சித்திர விசித்திரங்கள்! எப்பேர்ப்பட்ட பால் போன்ற வழு வழுப்பான காகிதம்!

காலிகோ பைண்டு செய்த அத்தகைய அழகிய பாட புத்தகத்தை இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் கொண்டு வந்து ஒன்றே கால் ரூபாய்க்கு விற்கிறார்கள்!

நம் ஊர்ப் பாடபுத்தகங்கள் மட்டும் எதற்காக இப்படி அழுது வடிய வேண்டும்? அழுது வடிகிற புத்தகங்களுக்கு விலை ஏன் இவ்வளவு அதிகம் வைக்க வேண்டும்?

• • •

பிரசுர கர்த்தர்களின் மீதோ உபாத்தியாயர்களின் மீதோ உள்ள கோபத்தினால் மேலே கண்ட விஷயங்களை நான் எழுதியிருக்கலாம். "ஜூன் பிறந்து விட்டதே! பிள்ளைகள் புத்தகம் வாங்கப் பணம் கேட்பார்களே?" என்ற ஆத்திரத்தினாலும் எழுதியிருக்கலாம். என்னையறியாமலேயே மேற்கூறிய குற்றங்களுக்கு நான் ஒரு வேளை உள்ளாகியிருக்கக் கூடும்.

நல்லது: அசூயைக்கும் கோபத்துக்கும் சிறிதும் தம் தூய உள்ளத்தில் இடம் கொடாதவரும் தம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கே அனுப்பாதவருமான ஒரு உத்தம புருஷர் நம் பள்ளிக்கூட பாட புத்தகங்களைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதைக் கொஞ்சம் கேளுங்கள்:—

"கல்வி கற்றுக் கொடுப்பதற்கும் பாட புத்தகங்கள் ஒரு சாதனமாகக் கருதப் பட்டால், ஆசிரியருடைய ஜீவசக்தி நிறைந்த வார்த்தைக்கு மதிப்பே இல்லாமல் போய் விடும். ஒரு ஆசிரியர் பாட புத்தகங்களை வைத்துக் கொண்டு, அதிலிருந்து பாடம் கற்றுக் கொடுத்தால், அவர் சொந்தமாகத் தம்முடைய மாணவர்களுக்கு எதையும் கற்றுக் கொடுக்க முடியாது. அந்த ஆசிரியரே பாட புத்தகங்களுக்கு அடிமையாகி விடுகிறார். ஆகையால், பாட புத்தகங்கள் எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக இருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு ஆசிரியர்களுக்கும் நல்லது; மாணாக்கர்களுக்கும் நல்லது.

இக்காலத்தில் பாட புத்தகங்கள் ஒரு வர்த்தகச் சரக்காகி விட்டன. பாட புத்தகங்களை எழுதி வெளியிடுவதின் மூலம் பணம் சம்பாதிக்கும் ஆசிரியர்களும் பிரசுர கர்த்தர்களும் மேற்படி பாட புத்தகங்களை அடிக்கடி மாற்றுவதை விரும்புவார்கள். பெரும்பான்மையான பாட புத்தகங்களைப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் பரிசோதக அதிகாரிகளுமே எழுதுகின்றனர். தங்கள் புத்தகங்கள் விற்பனையாக வேண்டும் என்பதில் அவர்களுக்கு அக்கறை இருப்பது இயல்புதானே! - அது மாத்திரம் அல்ல; மேற்படி புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் 'செலக்ஷன் போர்'டிலும் அத்தகையவர்களே இருக்கிறார்கள்! * * * ஒவ்வொரு வருஷமும் புதுப்புது புத்தகங்களை வாங்கிக் கொடுக்கப் பணம் இல்லாமல் பெற்றோர்கள் கஷ்டப்படுகிறார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் சுமக்க முடியாத அளவு புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடங்களுக்குப் போவதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. இப்போதுள்ள பாடப் புத்தகத் திட்டத்தை நாம் நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். பாட புத்தகங்களை ஒரு வர்த்தகப் பொருளாகக் கருதுவதை அடியோடு ஒழிக்க வேண்டும். இவ் விஷயத்தில் மாணவர்களுடைய நன்மை ஒன்றையே பிரதானமாகக் கவனிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, தற்போதுள்ள பாட புத்தகங்களில் அநேகமாக முக்கால் பகுதியைக் குப்பையில் போட வேண்டித்தான் வரும்."

மேற்கண்டவாறு எழுதியுள்ள உத்தம புருஷர் யார் என்று நினைக்கிறீர்கள்? காந்தி மகாத்மா தான்! வேறு யார் இவ்வளவு அதிகார பூர்வமாக எழுத முடியும்?

★ ★ ★ கல்கத்தாவிலும் பஞ்சாப்பிலும் நடந்த பயங்கரக் கலகங்களின்போது பச்சிளங் குழந்தைகளையும் பெண்களையும் நெருப்பிலே தூக்கிப் போட்டுக் கொன்றார்கள் என்று பத்திரிகைகளில் படித்தோம். ஆனால் சென்னை நகரத்திலே பட்டப் பகலிலே நடக்கும் கொடுமையைக் கேளுங்கள்.

தீயிலே வதைக்கிறார்கள்!

“சென்னைவாசி”

சென்ற மே மாதம் பதினைந்தாம் தேதி முதல் சுமார் பத்து தினங்கள் சென்னை நகரத்து மக்கள் காஷ்மீர் சண்டையைப் பற்றியோ ஹைதராபாத் கொடுங்கோன்மையைப் பற்றியோ பாலஸ்தீனப் பிரச்னையைப் பற்றியோ உணவு நெருக்கடியைப் பற்றியோ கவலைப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. ஒருவரை யொருவர் பார்த்தால் “இன்றைக்கு உஷ்ணம் எத்தனை டிக்ரி?” என்றுதான் முதற் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்த வாரமெல்லாம் உஷ்ணம் 108 டிக்ரி 109 டிக்ரி என்று ஏறி 110 டிக்ரியையும் எட்டிப் பிடித்தது. நகரம் பூராவும் அனல் காய்ந்தது. ஜனங்கள் உஷ்ணம் தாங்க முடியாமல் தவியாய்த் தவித்தார்கள். வீட்டிற்குள் ஒரே புழுக்கம், வீட்டை விட்டு வெளியில் சென்றாலோ வெய்யிலும் நெருப்பைக் கக்கும் காற்றும் கலந்து பொசுக்கிக்கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் தவிர்க்க முடியாத ஒரு வேலையாக வண்ணாரப் பேட்டை டிராம் வண்டியில் பகல் ஒரு மணிக்குப் போய்க் கொண்டிருந்தேன். டிராம் வண்டியில் சேர்ந்தாற் போல் ஒரு நிமிஷம் உட்கார்ந்திருக்க முடியவில்லை. உட்காரும் பலகை பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தகடுபோல் சுட்டுக் கொண்டிருந்தது. தவறிப்போய் டிராம் வண்டியின் ஆட்டத்தினால் பக்கத்தில் இருந்தவர்மேல் பட்டு விட்டேன். நெருப்பு மேலே சாய்ந்தது போலிருந்தது. என்னுடைய வேஷ்டி சட்டையைக்கூடத் தொடமுடியவில்லை. அவையும் சுட்டன. “பார்த்தீர்களா ஸார்! காலையில் பத்து மணிக்கு முகம் அலம்புவதற்காகக் குழாயைத் திருப்பினேன். அந்த ஜலத்தைக் கையினால்கூடத் தொட முடியவில்லை ஸார்!” என்று ஒரு என். ஜி. ஓ. சொல்லிக் கொண்டிருந்தார்.

டிராம் வண்டியை விட்டு வெளியே பார்த்தேன். நெருப்பின் மேலே அக்கினிச் சுவாலை தோன்றுமே அதுபோல எங்கும் ஒரே அக்கினிச் சுவாலையாகத் தெரிந்தது. அப்படிப்பட்ட நேரத்தில் வீதியில் ஓரிடத்தில் நான் பார்த்த காட்சியை என்னாலேயே நம்ப முடியவில்லை.

ஒரு பக்கம் பெண்களும் குழந்தைகளுமாக ஒரே கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம் ஆண்கள் வரிசையாக நின்றார்கள். எல்லாரும் வேகாத வெய்யிலிலே நின்று கொண்டிருந்தார்கள் — இல்லை, வெந்து கொண்டிருந்தார்கள். எதற்கு? சினிமாப் பார்ப்பதற்காகத் தான். “இந்த வெய்யிலில் ஒரு மணிக்குச் சினிமாவா?” என்று என்னை அறியாமல் இரைந்து சொல்லிவிட்டேன். “இல்லை ஸார்! இரண்டு மணிக்குத்தான் சினிமா. டிக்கட் வாங்குவதற்காக ஒரு மணி முன்னதாகவே வந்து நிற்கிறார்கள்!” என்று என்




அருகிலிருந்த ஒரு மனிதர் சொல்லிக் கொண்டே கையில் வைத்திருந்த தினப் பத்திரிகையால் 'ஷ்ஷோ...ஷ்ஷோ' என்று விசிறிக் கொண்டார்.

டிராம் வண்டியை விட்டு இறங்கித் தியேட்டர் பக்கம் சென்றேன். அடாடடா! அந்தக் கொடுமையை என்னவென்று சொல்லுவது? மனித இதயம் படைத்தவன் எவனும் அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்க மாட்டான். "எல்லாக் குழந்தைகளுக்கும் முழு டிக்கட் வாங்கப்படும்" என்றும் "ஸ்திரீகளுக்கு டிக்கட் கொடுக்குமிடம்" என்றும் கொட்டையாக எழுதப்பட்ட போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. டிக்கட் கொடுக்கும் துவாரத்துக்கு நேரே ஸ்திரீகள் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். சிலர் வியர்வை சொட்டச் சொட்ட இடுப்பில் கைக் குழந்தையை வைத்துக் கொண்டு நின்றார்கள். கீழே சிமெண்ட் தரையில் காலை வைக்க முடியாமல் மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு "ஸ்ஸு ஸ்ஸு" "ஆஹா!" என்று வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் வந்திருந்த சின்னஞ் சிறு பாலர்கள் "அம்மா! அம்மா!" என்று அலறிக் கொண்டு சிமெண்டு தரையில் காலைக் கீழே வைக்க முடியாமல் துடித்துக்கொண்டிருந்தன. என்னால் அந்தக் காட்சியைப் பார்க்க முடியவில்லை. 109 டிக்ரி வெய்யிலில் "மாட்டினி ஷோ" பகல் படக் காட்சியை வைத்துப் பெண்களையும் குழந்தைகளையும் சித்திரவதை செய்கிறவர்களுக்கு நரகத்தில் என்ன தண்டனை கிடைக்கும் என்று எண்ணினேன். இதை அனுமதித்துக்கொண்டிருக்கும் நம் காங்கிரஸ் மந்திரிகளை அந்த வெய்யில் வேளையில் வாயார வாழ்த்தலாமா வென்றும் தோன்றியது.

'உள்ளே கொட்டகை எந்த லட்சணத்தில் இருக்கிறது' என்று பார்க்கலாம் என்று நினைத்து இரண்டரை ரூபாய் கொடுத்து ஒரு சோபா டிக்கட் வாங்கினேன். அந்த ஒரு வகுப்புக்கு மட்டும்தான் டிக்கட் கொடுக்கும் இடம் நிழலிலே இருந்தது. டிக்கட்டை வாங்கிக்கொண்டு திரும்பினேன். "ஒன்றேகால் ரூபாய் டிக்கட் ஆகிப் போய்விட்டது என்கிறான் ஸார்! பத்துப் பேருக்குக் கூட டிக்கட் கொடுக்கவில்லை; 'டிக்கட் விற்றுவிட்டது' என்று கதவை மூடி விட்டான், ஸார்!" என்று ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஒன்றேகால் ரூபாய் டிக்கட் நூற்றைம்பது பேருக்குக் கொடுக்கலாமே. தியேட்டரில் நூற்றைம்பது பேருக்கு ஒன்றேகால் ரூபாய் டிக்கட்டுகளுக்கு இடம் இருக்கிறது என்று அதோ போர்டு தொங்குகிறதே!" என்றேன்.


"அது தெரியாதா உங்களுக்கு? நான் ஐம்பதாவது பேர் ஸார்! ஒரு ஆளுக்கு ஒரு டிக்கட் வீதம்தான் கொடுத்தார்கள். நான் எண்ணிக் கொண்டேதான் வந்தேன். 49 டிக்கட் கொடுத்து விட்டு 'டிக்கட் விற்று விட்டது' என்று அறையை மூடி விட்டார்கள். வெய்யிலிலே துடிக்கத் துடிக்க நின்று கொண்டிருந்தேனே, அது தான் கண்ட பலன்! இந்த டிக்கட்டுகளெல்லாம் இரண்டு ரூபாய்க்கும் பிளாக் மார்க்கட்டில் விற்பனை ஆகிறது. இதைக் கேட்பதற்கு யாரும் இல்லை ஸார்!" என்று ஆவேசம் வந்தவர் போல மூச்சு விடாமல் கத்தினார் இன்னொருவர். இதை



சினிமா தியேட்டர் வாசலில் புருஷர்கள் டிக்கட் வாங்கக் காத்திருக்குமிடம். சிலர் வெய்யில் பொறுக்காமல் தலையில் துணியைப் போட்டுக் கொண்டிருப்பதையும் சிறு வயதுச் சின்னவர்கள் கூட்டமாய் நிற்பதையும் கவனிக்கவும்.

யெல்லாம் கேட்டுக் கொண்டே தியேட்டருக்குள் சென்றேன்.

பகல் நேரத்தில் சினிமா படம் காட்டுவதற்குத் தியேட்டர் கதவுகளை யெல்லாம் மூட வேண்டும். மூடி உள்ளே ஒவ்வொரு கதவுக்கு நேராகவும் ஒரு கறுப்புத் திரையும் விடுவார்கள். வெளியிலே 109 டிக்ரி உஷ்ணம் கொளுத்திக் கொண்டிருந்த அன்றைக்கும் அப்படித்தான் கதவைச் சாத்தி விட்டுப் படம் காண்பிக்க வேண்டும்.



பெண்கள் 'க்யூ' நின்று டிக்கட் வாங்குமிடம். சுவருக்கு இப்பால் ஒரு பையன் நின்று தாயாருக்கு டிக்கட் கிடைக்கிறதா என்று பார்க்கிறான். கொதிக்கின்ற செமண்ட் தரையில் கால் வைக்க முடியாமல் தவிக்கிறான். அவனுடைய நிழல் அப்போது மத்தியானம் ஒரு மணி என்பதைக் காட்டுகிறது.


ஆயிரம் ஜனங்களை ஒரு அறையில் போட்டு வேகாத வெய்யிலிலே மூடி வைத்தால் அறைக்குள்ளே எப்படி இருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். மேலேயோ தகரக் கொட்டகை. வெய்யிலின் கோரத்தை வாங்கி ஒன்றுக்கு இரண்டாக்கி உள்ளே விடுகிறது. பெண்களும் குழந்தைகளும் இரவில் போக்குவரத்து வசதி இல்லாத குறையாலும் திருடர் பயத்தாலும் பகலில் படம் பார்க்க வந்து விடுகிறார்கள். மேலும் அவர்களுக்கு அந்த வெய்யில் வேளையில் சினிமாக் கொட்டகைக்குள் எப்படியிருக்கும் என்று தெரியாது. "வெளியிலே உஷ்ணமாயிருக்கிறது; கொட்டகைக்குள் குளிர்ச்சியாயிருக்கும் என்று எண்ணிக் கொண்டு வந்துவிடுகிறார்கள். பணத்தைக் கொடுத்து வந்த பிறகு படத்தைப் பார்க்காமல் போக முடியுமா? அவதிப்பட்டுக் கொண்டே உட்கார்ந்திருக்கிறார்கள்.

நான் உட்கார்ந்த இடத்துக்குப் பக்கத்தில் இருந்த பெண்களும் குழந்தைகளும் பட்ட கஷ்டத்தைப் பார்க்க முடியவில்லை. கீழ் வகுப்புகளில் குழந்தைகளின் அழுகைக் குரல் உக்கிரமாக எழுந்தது.

இதற்கு மத்தியில் சிகரெட்டை வேறு பற்ற வைத்து 'குப் குப்' என்று ரயில் இன்ஜின் போலப் புகை விட்டுக் கொண்டிருந்தார்கள் சில புண்ணியவான்கள். மூச்சு விட முடியாமல் திணறிப் போய்விட்டேன்.

தியேட்டரில் உயர்ந்த வகுப்பான ஸோபாவில் மின்சார விசிறியின் கீழ் அரை மணி நேரத்துக்கு மேல் என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லை; எழுந்து வந்துவிட்டேன். பணத்தைக் கொடுத்து விட்டோமே என்று மூன்று மணி நேரத்துக்கு மேலே தியேட்டருக்குள் அடைபட்டுக் கிடக்கும் பெண்மணிகளும் குழந்தைகளும் சுண்ணாம்புக் காளவாயில் பாதி வெந்தவர்களைப்போல் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சென்னை மாகாணத்துக்குரிய பன்னிரண்டு மந்திரிகளில் ஆஸ்பத்திரியில் உள்ள ஒருவரைத் தவிரப் பாக்கிப் பதினொரு பேர் இருக்கிறார்கள். இவர்களில் ஜீவகாருண்யமுள்ள மந்திரி — தவிரக்கம் பச்சாத்தாபம் உள்ள மந்திரி—யாராவது ஒருவரேனும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட புண்ணிய புருஷர் வரும் வாரத்தில் ஒரு நாள் மத்தியானம் ஏதாவது ஒரு சினிமாக் கொட்டகையில் மாட்டினி காட்சிக்குப் போய், சினிமா முடியும் வரையில் இருந்து பார்க்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். பார்த்த பிறகு இது விஷயமாக நடவடிக்கை ஒன்றும் எடுக்க வேண்டிய தில்லை என்று முடிவு செய்தால் தாராளமாய் முடிவு செய்யட்டும்.



இருபதாம் அத்தியாயம்

அத்தான் அறிமுகம்

சிரிப்பின் ஒலியைக் கேட்டதினால் அடைந்த திகைப்பு நீங்கியதும் சூரியா தன்னுடைய தவறை உணர்ந்தான். ஓடையில் விழுந்திருந்த பெண்ணைத் தான் கரை சேர்க்க எண்ணியது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதை அறிந்தான். அவள் "முழுகப் போகிறேன்" என்று கத்தியது வெறும் விளையாட்டுத்தான் என்பதும் தெளிவாயிற்று. ஓடையில் முழங்கால் அளவு தண்ணீருக்கு மேல் இல்லையாகையால் அந்தப் பெண்ணுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படக் காரணம் கிடையாது.

* * *

சாலைக்கு மண் போடுவதற்காகச் சாலையின் ஓரத்தில் மண் எடுத்து எடுத்துப் பள்ளமாகியிருந்தது. நாளடைவில் அப்பள்ளத்தில் தண்ணீர் தேங்கிச் சாலைக்கும் நன்செய் நிலத்துக்கும் இடையே நீண்ட நீர் ஓடையாக மாறியிருந்தது. நீர் ஓடையின் அகலம் சுமார் பதினைந்து அடிதான். ஆழமோ எந்த இடத்திலும் மூன்று அடிக்குமேல் இராது. மழை காலத்தில் பெய்யும் மழையும் வயல்களிலிருந்து வடிந்த தண்ணீருமாகச் சேர்ந்து நீரோடையில் வருஷத்தில் பத்து மாதத்துக்குக் குறையாமல் தண்ணீர் நிற்கும். நீண்ட காலம் இப்படித் தண்ணீர் நின்ற காரணத்தினால் அல்லிக் கொடிகளும் செங்கழுநீர்க் கொடிகளும் மண்டிப் படர்ந்து கொழு கொழு வென்னும் இலைகளோடும் அழகிய மலர்களோடும் விளங்கின. மாலை வேளையானதால் அம் மலர்கள் நன்றாக இதழ் விரிந்திருக்கவு மில்லை; அடியோடு கூம்பவும் இல்லை. அரைவாசி விரிந்திருந்த அல்லி - செங்கழுநீர்ப் புஷ்பம் ஒவ்வொன்றும் ஒரு அழகிய வர்ணப் பளிங்குக் கிண்ணத்தைப் போல் காட்சி யளித்தது.

ஓடையின் மேலாகச் சாலை ஓரத்து ஆலமரக் கிளைகள் தழைத்திருந்தன. அஸ்தமன சூரியனின் பொற் கிரணங்கள் அந்தப் பசுங் கிளைகளின் வழியாக நுழைந்து வந்து நீல நிற ஓடை நீரில் லீலை புரிந்தன.

சற்றுத் தூரத்தில் பொன்னிற நெற்கதிர்களைத் தாங்க முடியாமல் வயலில் சாய்ந்திருந்த நெற்பயிர்களும் இன்னும் அப்பால் மரகதப் பசுமை வாய்ந்த அடர்ந்த தென்னந் தோப்புகளும் காணப்பட்டன.

இந்த இயற்கை வர்ணக் காட்சிகளை எல்லாம் சூரியாவினுடைய கண்கள் பார்த்து, புகைப்படக் கருவி படம் பிடிப்பது போலப் பிடித்து, அவனது உள் மனத்தில் பதியச் செய்தன.

அவ்வளவு இயற்கை எழில்களும் அந்த நீல நிற ஓடையில் மிதந்த ஜல கன்னிகையின் முகத்தின் அழகைச் சிறப்பித்துக் காட்டுவதற்காக ஏற்பட்ட செயற்கைச் சித்திரங்களாகச் சூரியாவுக்குத் தோன்றின. தன்னுடைய வாழ்நாள் உள்ளளவும், தன் உடம்பில் உயிர் இருக்கு மளவும், தன் மனத்திற்கு நினைக்கும் சக்தி இருக்குமளவும், இந்த நிமிஷத்திலே தான் பார்க்கும் காட்சியைத் தன்னால் மறக்க முடியாது என்று சூரியாவின் உள் மனத்தில் ஒரு பகுதி எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

ஜல கன்னிகை சிரிப்பை நிறுத்தி, "பெரியம்மா! இந்தப் பிள்ளை யார்!" என்று கேட்டவுடனே, சூரியா கனவு லோகத்தி லிருந்து இந்தப் பூவுலகத்துக்கு வந்தான்.

"இவன்தான் உன் அத்தான் சூரியா! பார்த்தால் தெரியவில்லையா, சீதா! கிடக்கட்டும், நீ கரை ஏறு!"

"ஓகோ! லலிதாவின் அண்ணாவா, பெரியம்மா!"

"ஆமாண்டி பெண்ணே! லலிதாவின் தமையன்தான்! நீ சீக்கிரம் கரையேறி வேறு சித்தாடை உடுத்திக் கொள்!" என்று அபயாம்பாள் சொல்லிவிட்டுப் பின்னர் சூரியாவைப் பார்த்து, "நீ எங்கே யிருந்தடா அப்பா, வருகிறாய்? — இவர்கள்தான் உன் பம்பாய் அத்தை ராஜமும் அவளுடைய பெண்ணும். இவர்களை நீ பார்த்ததே யில்லையே!" என்றாள்.

"தேவ பட்டணத்தி லிருந்து வருகிறேன், அத்தை!" என்று சொல்லிக்கொண்டே சூரியா ஓடைக் கரையிலிருந்து இப்பால் வந்தான்.

"ஒருவருக்கும் காயம்பட வில்லையே அத்தை! ரொம்பப் பயந்து போய் விட்டேன்!" என்றான்.

"நல்லவேளையாய்ப் போச்சு! நான் அப்பவே இந்த வண்டிக்கார......"

"பெரியம்மா! அப்படி யெல்லாம் இந்தக் காலத்தில் ஒருவரையும் வையக் கூடாது. ஏதோ நல்ல காலமாய்ப் போச்சு! இங்கேயே இந்த வண்டிக்குச் சத்தத்தைக் கொடுத்து அனுப்பி விடலாம். நம்முடைய வண்டியிலேயே எல்லாரும் போய்விடலாம்!" என்றாள்.

இதற்குள் சீதா ஓடையி லிருந்து கரையேறி வந்தாள். "பெரியம்மா! அத்தானை அறிமுகம் செய்து கொள்வதற்குச் சரியான இடந்தான். இந்த ஓடையில் இன்னும் கொஞ்சம் தண்ணீர் அதிகமா யில்லாதது மட்டும் ஒரு குறை!" என்று சொல்லிக் கொண்டே சூரியாவை ஒரு விஷமப் பார்வை பார்த்தாள். பிறகு அம்மாவின் அருகில் சென்று, "பெட்டியி லிருந்து வேறு புடவை எடுத்துக் கொள்கிறேன், அம்மா! உனக்கு ஒன்றும் காயம் கியம் இல்லையே?" என்று கவலையுடன் கேட்டாள்.

"எனக்கு ஒன்றுமில்லை, சீதா! ஆனாலும் நீ இப்படி 'முழுகப் போகிறேன்' என்று கூச்சல் போடலாமா? ஒரு நிமிஷம் நான் கதிகலங்கிப்போய் விட்டேன்!" என்றாள் ராஜம்.

"நீ இனிமேல் என்னைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம், அம்மா! அத்தான் சூரியா இருக்கிறபோது உனக்கு என்ன கவலை! என்னை இந்த முழங்கால் மட்டும் ஜலத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அத்தான் ஓடிவந்த வேகத்தை நீ பார்த்தாயோ, இல்லையோ?" என்று சொல்லிக் கொண்டே சீதா சூரியாவை மறுபடி ஒருதடவை திரும்பிப் பார்த்து விட்டுச் சிரிக்கத் தொடங்கினாள்.

"இந்தப் பெண்ணுக்கு எப்போது பார்த்தாலும் சிரிப்புத்தான்; எதற்கெடுத்தாலும் சிரிப்புத்தான்!" என்றாள் ராஜத்தின் தமக்கை.

• • •

சூரியா சொன்னபடி எல்லாரும் ஒரே வண்டியில் ஏறிப்போகவில்லை. ராஜம்மாளுக்குத் தன் மருமகனோடு தனியாகப் பேச வேண்டும் என்ற எண்ணம். தானும் சூரியாவும் ஒரு வண்டியில் போகலா மென்றும் சீதாவும் பெரியம்மாவும் இன்னொரு வண்டியில் போகட்டும் என்றும் ராஜம் சொன்னாள். இதற்குள் இரண்டு வண்டிக்காரர்களுமாகக் குடையடித்த வண்டியை நிமிர்த்திச் சாலைக்குக் கொண்டுவந்து மாட்டையும் மெள்ளப் பூட்டி விட்டார்கள். ராஜம்மாள் வற்புறுத்தியதன் பேரில் அவனும் சூரி

யாவும் வாடகை வண்டியில் ஏறிக் கொண்டார்கள். சீதாவும் அவளுடைய பெரியம்மாவும் பெட்டி வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டிகள் ராஜம்பேட்டையைநோக்கி ஜாம் ஜாம் என்று சென்றன.

• • •

சீதா பெரியம்மாவிடம், "அத்தானைப் பார்த்தால் லலிதாவை அச்சடித்தது மாதிரி இருக்கிறது; அத்தானுக்குப் புடவையைக் கட்டிவிட்டால் லலிதா என்றே பார்க்கிறவர்கள் நினைப்பார்கள். ஒருவேளை அவர்கள் இரண்டு பேரும் இரட்டைக் குழந்தைகளோ, பெரியம்மா!" என்றாள் சீதா.

"சீ சீ! அசடே! என்ன சொல்கிறாய்! லலிதாவைவிடச் சூரியா மூன்று வயது பெரியவன். என் மனதிற்குள்ளே நான் என்ன ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்றால்,..."

"என்ன ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறாய், சொல்லேன்!"

"அதைச் சொல்லி என்ன பிரயோஜனம்? தொழுவூர் அய்யனார் கிருபை வைத்தால் நடக்கும்!"

"அது யார், பெரியம்மா, தொழுவூர் அய்யனார்!" என்றாள் சீதா.

"உனக்குத் தெரியாதா? நம் குடும்பத்தின் குலதெய்வம்! ரொம்ப சக்தி வாய்ந்த தெய்வம்."

"ஓகோ! அப்படியா? நான் என்ன நினைத்தேன் சொல்லட்டுமா, அத்தை! அய்யர்களிலே பணக்காரர்களுக்கு 'அய்யனார்' என்று பட்டப் பெயரோ என்று நினைத்தேன்."

"சீதா! எதற்கும் ஒரு குதர்க்கம் பேசுகிறது என்று வைத்துக் கொண்டிருக்கிறாய். இது நன்றாயில்லை. பெரியவர்கள் சொல்கிறதைப் பயபக்தியோடு கேட்டுக் கொள்ளவேணும்."

சீதா உடனே கையைக் கட்டிக் கொண்டு, "ஆகட்டும்; அப்படியே செய்கிறேன். அய்யனாரால் இப்போது என்ன காரியம் ஆகவேணும்?" என்று கேட்டாள்.

"நான் நினைத்தது கை கூடினால் ஆயிரத்தெட்டு தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொண்டிருக்கிறேன்."

"நீ நினைத்துக் கொண்டிருப்பது என்ன சொல்லு, பெரியம்மா!"

அபயாம்பாள் வண்டிக்காரனுக்குக் கேளாதபடி தன் குரலை மெல்லியதாக்கிக் கொண்டு, "உன்னைச் சூரியாவுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுக்கலாம் என்றுதான். கிட்டா உடனே சம்மதித்து விடுவான்; நான் சொன்னால் தள்ளமாட்டான். ஆனால் அந்த ராட்சஸி இருக்கிறாளே!"

"அது யார் ராட்சஸி, பெரியம்மா!"

"உன் அம்மாமி சரஸ்வதிதான். அவள் சம்மதிப்பதுதான் சந்தேகம். பெரிய இடமாய் இருக்கணும்; எதிர் ஜாமீனும் சீரும் செனத்தியும் விடு கொள்ளாமல் வரணும் என்று அவள் ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிறாள். பகவான் புண்ணியத்திலே......"

"பெரியம்மா! நீ சொல்லுவது தப்பு. சரஸ்வதி அம்மாமி சொல்லுவதுதான் சரி. சூரியாவைப் பார்த்தால் என்னுடைய அண்ணாவோ தம்பியோ என்று சந்தேகப்படும்படி இருக்கிறது. அப்படிப் போய் யாராவது கலியாணம் திட்டம் செய்வார்களா? பெண்ணுக்கும் பிள்ளைக்கும் குறைந்தது ஐந்து வருஷமாவது வித்தியாசம் இருக்க வேண்டாமா?"

"ஐந்து வருஷம் என்னத்துக்கு வித்தியாசம்? இரண்டு வருஷம் இருந்தால் ஏதேஷ்டம். உன் தாத்தா அதாவது எங்க அப்பாவுக்குப் பதினாறு வயதிலே கலியாணம் நடந்ததாம். அப்போது அம்மாவுக்கு வயது பதின்மூன்று தான். உன் பாட்டி எத்தனை குழந்தை பெற்றாள் தெரியுமா? பதினேழு பெற்றாள்."

"அதெல்லாம் அந்தக் காலம், பெரியம்மா! இந்த நாளிலே இருபது வயதுக்குக் குறைந்து எந்தப் பிள்ளையும் கலியாணம் பண்ணிக்க மாட்டான்; அப்படிப் பண்ணிக் கொண்டாலும் அவர்கள் சந்தோஷமாயிருக்க மாட்டார்கள்."

"ஏன் சந்தோஷமா இருக்க மாட்டார்கள்? பேஷாக இருப்பார்கள். உன் அம்மாமி மாத்திரம் சம்மதித்தால் கலியாணம் நடந்து விடும். ஆனால் அவள் எங்கே சம்மதிக்கப் போகிறாள்! ரொம்பப் பேராசை அவளுக்கு. ஆனால் குழந்தைகள் மட்டும் தங்கக் கம்பிகள் தான்! அப்பாவின் குணத்தைக் கொண்டு அவர்கள் பிறந்திருக்கிறார்கள்!"

"பெரியம்மா! பிறத்தியாரைப் பற்றி அவர்கள் இல்லாதபோது குறை சொல்லக் கூடாது. அது ரொம்பப் பிசகு. மாமியைப் பற்றி ஏன் இப்படி யெல்லாம் சொல்கிறாய்? சரஸ்வதி மாமி ரொம்ப நல்லவள். என்னிடம் எவ்வளவு பிரியமா யிருக்கிறாள் தெரியுமா?" என்றாள் சீதா.

"அசட்டுப் பெண்ணே! நீயும் உன்னுடைய அம்மாவைப் போலவேதான் இருக்கிறாய். வெளுத்த தெல்லாம் பால் என்று நினைக்கிறாய். மாமியின் சுபாவம் போகப் போகத் தெரியும் பார்!" என்றாள் அபயாம்பாள்.

* * *

முதலில் சூரியாவுக்குச் சீதா ஏறிய வண்டியில் தானும் ஏறவில்லையே என்று இருந்தது. அந்த ஏமாற்றம் ஒரு கணத்துக்குமேல் இருக்கவில்லை. சீதாவுடன் பேசிக்கொண்டு போவதற்கு அடுத்தபடியாகப் பம்பாய் அத்தையுடன் பேசிக்கொண்டு பிரயாணம் செய்வது அவனுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது.

"அத்தை! நீங்கள் எங்கே போய் விட்டு வருகிறீர்கள்? ராஜம்பேட்டையில் இருப்பதாக வல்லவா நினைத்தேன்? 'லலிதாவைக் கல்யாணத்துக்காகப் பார்க்க வருகிறார்கள். நீயும் வந்து விட்டுப் போ!' என்று அப்பா கடிதம் எழுதி யிருந்தார். ஆனால் உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற ஆசையினால்தான் நான் வந்தேன். போன வருஷம் லலிதா பம்பாய்க்குப் போய்த் திரும்பியதிலிருந்து உங்களைப்பற்றியும் சீதாவைப் பற்றியும் ஓயாமல் ஏதாவது புகழ்ந்து கொண்டே யிருப்பது அவளுக்கு வழக்கமாகி விட்டது! அதிலிருந்து எனக்கும் உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஒரே ஆவலா யிருந்தது" என்று சூரியா தன்னுடைய வழக்கத்தை விட அதிக படபடப்புடன் வார்த்தைகளைக் கொட்டினான்.

"இங்கேதான் ஒரு வாரத்துக்கு மேலே இருந்தோம், சூரியா! அக்கா வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை நடந்தது. அதற்கு வரவேண்டுமென்று ரொம்பச் சொன்னாள். போய்விட்டுத் திரும்பினோம். வருகிற வழியிலேதான் இப்படி ஆயிற்று. நல்ல சமயத்துக்கு நீ வந்தாய்!" என்றாள் ராஜம்.

"நான் வந்து என்ன செய்து விட்டேன்? ஒன்றுமில்லையே!"

"அப்படிச் சொல்லாதே, அப்பா! வண்டி குடை கவிழ்ந்ததும் எனக்கு ஒரே பயமாய்ப் போய்விட்டது. அதுவும் இந்த அசட்டுப் பெண் விளையாட்டுக்காக 'முழுகப் போகிறேன்; முழுகிக் கொண்டிருக்கிறேன்' என்று கத்தினதும் எனக்கு என்னமோபோல் ஆகிவிட்டது. உன்னைக் கண்ட பிறகுதான் தைரியம் உண்டாயிற்று. வேண்டுமென்கிற மனுஷன் பக்கத்தில் இருந்தாலே எப்படிப்பட்ட ஆபத்திலும் ஒரு தைரியந்தானே!"

"அத்தை! என்னைப் பார்த்ததும் நான் வேண்டும் என்கிறவன் என்று உனக்கு தெரிந்து விட்டதா? என்னைத் தான் நீ பார்த்ததே கிடையாதே!"

"எத்தனை நாள் பிரிந்திருந்தாலும் பார்க்காதிருந்தாலும் இரத்த பாசம் என்பது ஒன்று இருக்கிறதல்லவா? உன்னைப் பார்த்ததுமே எனக்குத் தெரிந்து போய் விட்டது! சூரியா! உன்னுடைய வயதில் உன் அப்பா உன்னைப் போலவே இருந்தார். நீ தலையைக் கிராப் செய்து கொண்டிருக்கிறாய். உன் அப்பா குடுமி வைத்துக் கொண்டிருந்தார். மற்றபடி தத்ரூபம் அதே மாதிரி இருக்கிறாய். திடீரென்று உன்னைப் பார்த்ததும் எனக்குப்பழைய காலத்து நினைவு வந்தது. வண்டி குடை யடித்ததைப் பார்த்துவிட்டு அண்ணாதான் ஓடி வருகிறார் என்று நினைத்தேன். அண்ணா உன்னைப் போல் இருந்த நாளிலேதான் எனக்குக் கல்யாணம் நடந்தது. நேற்றுப்போல் இருக்கிறது. ஆனால் அதெல்லாம் நடந்து வருஷம் இருபது ஆகிவிட்டது!" என்று ராஜம் சொல்லுகையில் அவளுடைய கண்கள் கலங்கின.

"அத்தை! கல்யாணம் ஆகிப் புக்ககத்துக்குப் போன பிறகு நீ இந்த ஊருக்கு வரவே இல்லையாமே? ஏன் அப்படி!" என்று சூரியா கேட்டான்.

"ஆமாம்; வரவே யில்லை. உன் அத்திம்பேரின் சுபாவந்தான் காரணம். இப்போதுகூட வரமாட்டேன் என்று

சொன்னேன். ஆனால் வந்தது நல்லதாய்ப் போயிற்று. இப்போது வந்திராவிட்டால் உங்களையெல்லாம் எங்கே பார்க்கப் போகிறேன்? இந்த ஊரை யெல்லாந் தான் மறுபடி எந்தக் காலத்தில் பார்க்கப் போகிறேன். சூரியா! சீதாவை விட இரண்டு வயது குறைவா யிருந்த போதே எனக்குக் கலியாணம் ஆகிவிட்டது. அப்போது போனவள் இப்போது தான் திரும்புகிறேன். ஆனாலும் இந்தச் சாலையும் ஓடையும் வயலும் வரப்பும் தோப்பும் துரவும் கோயிலும் குளமும் அப்படியே எல்லாம் ஞாபகம் இருக்கின்றன. இந்தச் சாலை வழியாக இதேமாதிரி மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு எத்தனை உற்சவங்களுக்கும் கலியாணங்களுக்கும் போயிருக்கிறேன், தெரியுமா? அதையெல்லாம் நினைத்தால் சந்தோஷமாயு மிருக்கிறது; துக்கமாயு மிருக்கிறது!" என்றாள் ராஜம்.

சூரியாவும் அப்போது சந்தோஷமும் துக்கமும் கலந்த மன நிலையை அடைந்தான். அத்தைக்கு ஏதாவது ஆறுதல் வார்த்தை சொல்ல வேண்டுமென்று நினைத்தான். ஆனால் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

இருபத்தோராம் அத்தியாயம்

சீதாவின் காதலன்

மறுநாள் ராஜம்பேட்டை அக்கிரகாரத்தில் பெரிதும் பரபரப்புக் குடி கொண்டிருந்தது. சாயங்காலந்தான் மதராஸிலிருந்து பெண் பார்க்க வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த போதிலும் அன்று காலையிலிருந்தே யாருக்கும் வீட்டுக்குள் இருப்புக் கொள்ளவில்லை. பாதிப் பேருக்கு 'மேல் அவரவர்கள் வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தார்கள். வீட்டுக்குள் வேலையாயிருந்தவர்கள் ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தடவை வாசலுக்கு வந்து கிழக்கும் மேற்கும் பார்த்து விட்டு உள்ளே சென்றார்கள். ஊரிலேயே இப்படி இருந்த தென்றால் கிட்டாவய்யர் வீடு எப்படி இருந்திருக்கு மென்று சொல்லவும் வேண்டுமா?

காலையில் காப்பி சாப்பிடுவதற்கே சிமாச்சுவய்யர் வந்து விட்டார். "என்ன ஓய்? "என்ன ஓய்?" என்று அடிக்கடி கேட்டுக் கொண்டு சாயங்காலம் வரப்போகிறவர்களை வரவேற்பதற்கான காரியங்களைச் சுறுசுறுப்பாகக் கவனித்தார். இன்னும் பலர் ஒரு வேலையும் இல்லாமல் கிட்டாவய்யர் வீட்டுக்கு வருவதும் போவதுமா யிருந்தார்கள். "இன்று சாயங்காலந்தானே வருகிறார்கள்?" என்ற கேள்விக்கு ஆயிரந் தடவைக்கு மேல் கிட்டாவய்யர் 'ஜவாப்' சொல்லித் தீர வேண்டியதா யிருந்தது.

சரஸ்வதி அம்மாள் காலை நாலரை மணிக்கே எழுந்து பரபரப்பாகக் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினாள். பல பல வென்று பொழுது விடிவதற்குள்ளே வீடு மெழுகி வாசல் பெருக்கிக் கோலமும் போட்டாகி விட்டது. அப்புறம் உக்கிராண அறையிலிருந்து சமையலறைக்குப் போவதும் சமையலறையிலிருந்து காமரா உள்ளுக்குப் போவதும் தரையில் இருந்த சாமானைப் பரணில் தூக்கிப் போடுவதும் பரணில் இருந்த சாமானைத் தரையில் இறக்கி வைப்பதும் அங்கங்கே உள்ளவர்களை ஏதாவது அதிகாரம் பண்ணுவதுமா யிருந்தாள்.

"இன்றைக்கே இந்தப் பாடாயிருக்கிறதே; நாளைக்குக் கலியாணம் என்று வந்தால் எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனோ?" என்று அடிக்கடி அங்கலாய்த்துக் கொண்டாள்.

அபயாம்பாளையும் ராஜம்மாளையும் பார்க்கும்போதெல்லாம், அவர்கள் வந்தது பற்றிச் சரஸ்வதி அம்மாள் தன் திருப்தியைத் தெரிவித்தாள். "ஏதோ சிரமத்தைப் பார்க்காமல் நேற்றே புறப்பட்டு வந்து விட்டீர்களே! என்னுடைய பாரம் பாதி குறைந்தது. இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு நீங்கள் வந்திராவிட்டாலும் பாதகமில்லை! ஆனாலும் வந்தது தான் சந்தோஷமா யிருக்கிறது. இதற்குத்தான் நமக்கு என்று நாலு மனு



டான்வேணும் என்கிறது. நான் ஒண்டிக்காரி என்னத்தை யென்று கவனிப்பேன்? எங்க அம்மாவினாலும் ஓடியாடி முன்னேயெல்லாம் போல் இப்போது காரியம் செய்ய முடிகிறதில்லை. நீங்கள் வந்துதான் காரியம் நடக்க வேண்டும், இல்லாவிட்டால் நடக்கவே நடக்காது என்று சொல்கிறேனா? அது ஒன்றும் கிடையாது. ஆனாலும் சமயத்துக்கு நீங்கள் வந்து சேர்ந்தது தான் மனதுக்குத் திருப்தியாயிருக்கிறது!" என்று மிகப் பெரிய தமிழ்ப் புலவர்களைப் போல் இரு பொருள் வைத்துப் பேசுவாள்.

உடனடியாகத் தன் தாயாரிடம் போய், "கேட்டாயா, அம்மா! குறுக்கே நெடுக்கே வீட்டிலே எங்கே போனாலும் இரண்டு நாத்தனார்மார்களும் நிற்கிறார்கள். ஒரு காரியமும் செய்ய முடிகிறதில்லை. அந்தப் பெண் சீதாவா, ஒரு நிமிஷம் விடமாட்டேன் என்று லலிதாவைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது! இவர்கள் இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு வரவில்லை யென்றால் யார் குறைப்படப் போகிறார்கள்? தலைக்கு மேலே எனக்கு இருக்கிற வேலையில் இவர்களை வேறே நான் விசாரித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் வீண் பொல்லாப்பு வந்து சேரும். ஏதோ ஒத்தாசைக்கு நீயாவது வந்து சேர்ந்தாயே, அதைச் சொல்லு! இல்லாவிட்டால் நான் தவித்துப் போயிருப்பேன்!" என்று மற்றவர்களுக்குக் காதில் விழுந்தும் விழாமலும் இருக்கும்படி கூறுவாள்.

சரகவதி அம்மாள் சொன்னபடியே லலிதாவும் சீதாவும் இணை பிரியாமல் ஒருவரை யொருவர் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். முதல் நாள் சாயங்காலம் சீதா வண்டியிலிருந்து இறங்கியவுடன் லலிதா அவளை ஆவலுடன் கட்டித் தழுவிக் கொண்டு வரவேற்றாள். அப்புறம் ஒருவரை யொருவர் ஒரு நிமிஷமும் பிரியவில்லை. இராத்திரி இருவரும் படுத்துக்கொண்டதுகூட ஒரே பாயில் ஒரே தலையணையை வைத்துக் கொண்டுதான். இதெல்லாம் உதவாது என்று லலிதாவின் தாயார் எவ்வளவு சொல்லியும் அந்தப் பெண் கேட்கவில்லை. அன்றைக்குப் பொழுது விடிந்து எழுந்ததிலிருந்து இரண்டு பேரும் கூடிக் கூடிப் பேசிய வண்ணம் இருந்தார்கள். பேசுவதற்கு அவர்களுக்கு என்னதான் விஷயம் இருக்கும் என்று மற்றவர்களுக்கெல்லாம் வியப்பா யிருந்தது.

சீதா – லலிதா இவர்களின் நடத்தையைக் காட்டிலும் அதிகமான வியப்புக்கு உரியதா யிருந்தது சூரியாவின் நடவடிக்கைதான். முன் தடவையெல்லாம் அவன் ஊருக்கு வந்தால் வீட்டுக்குள் அதிகம் தங்கவே மாட்டான். கையோடு ஏதேனும் புத்தகம் கொண்டு வந்திருப்பான். எங்கேயாவது மூலையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருப்பான். "ரொம்பப் படிக்காதேடா, அப்பா! கண்ணுக்குச் சூடு!" என்று அவனுடைய தாயார் எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டான். அம்மா ஏதாவது கேட்டால் அதற்கு அவன் பதில் சொல்வதே அபூர்வம். பெண் பிள்ளைகள் அதிகமாகப் புழங்கும் சமையலறைக்கும் காமரா உள்ளுக்கும் அவன் வருவதே கிடையாது.

அப்படிப்பட்டவன் இந்தத் தடவை வீட்டு வாசலுக்கும் சமையலறைக்கும் காமரா உள்ளுக்கும் குட்டி போட்ட பூனையைப்போல் அலைந்து கொண்டிருந்தான். அடிக்கடி சீதாவும் லலிதாவும் இருக்கும் இடத்துக்கு வருவான். "ஏது? இரண்டு பேரும் ஒருவரை யொருவர் ஒரு நிமிஷங்கூட விட்டுப் பிரிய மாட்டீர்கள் போலிருக்கிறதே! நாளைக்குக் கலியாணம் ஆகிப் புக்ககம் போய்விட்டால் என்ன செய்வீர்கள்?" என்பான். பெரும்பாலும் லலிதா தான் பதில் சொல்வாள். "நாங்கள் ஏதாவது செய்து கொள்கிறோம். உனக்கென்ன அதைப்பற்றி?" என்பாள். சில சமயம், "பெண்கள் பேசிக் கொண்டிருக்கிற இடத்தில் புருஷப் பிள்ளைக்கு என்ன வேலை? போய் உன் காரியத்தைப் பார்!" என்பாள். "என் காரியம் வேறு ஒன்றுமில்லையே! உன்னை விசாரித்துக் கொள்வதுதான் எனக்கு இப்போது வேலை! தங்கைக்குக் கலியாணம் என்றால் தமையன் சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா? உலகம் சிரிக்காதா?" என்பான் சூரியா. "ஆமாம்;

நீ ரொம்ப இங்கே வந்து வெட்டி முறித்து விடுகிறாயாக்கும்! போடா போ!" என்பாள் லலிதா. "அவனை ஏண்டி விரட்டி யடிக்கிறாய்? ஏதோ உன்பேரில் உள்ள பிரியத்தினால் தானே வருகிறான்?" என்பாள் சீதா. இந்தச் சமயத்தில் லலிதாவின் சின்னத் தம்பி கண்டுப் பயல் குறுக்கிடுவான். "ஏன் பொய் சொல்கிறாய், அண்ணா! நீ லலிதாவைக் கவனித்துக் கொள்வதற்காகவா இப்படி வளைய வந்து கொண்டிருக்கிறாய்? பம்பாய் அத்தங்காளைப் பார்ப்பதற்குத்தானே வீட்டுக்குள் சுற்றுகிறாய்? எனக்குத் தெரியாது என்று நினைத்தாயோ?" என்று குட்டை உடைத்து விடுவான். "சீ! கழுதை! சும்மா யிரு!" என்பான் சூரியா. "நான் கழுதையென்றால் நீ கழுதையின் அண்ணாதானே!" என்பான் கண்டுப் பயல். விவகாரம் முற்றிச் சூரியா கண்டுவின் சிண்டைப் பிடிக்க ஓடுவான். ஆனால் மறு நிமிடம் திரும்பி வந்து விடுவான்.

சூரியாவின் தொந்தரவி லிருந்து தப்புவதற்காகவே லலிதாவும் சீதாவும் அன்று மத்தியானம் சாப்பாடு முடிந்தவுடனே குளத்தங்கரைப் 'பங்களா'வுக்குச் சென்றார்கள்.

* * *

சீதா பம்பாயிலிருந்து வந்ததும் ராஜம் பேட்டையில் ஒரு வாரம் இருந்தாள். அந்த ஒரு வாரம் சீதாவும் லலிதாவும் அடிக்கடி குளத்தங்கரைப் பங்களாவுக்குப் போவார்கள். பிறருடைய தொந்தரவு இல்லாமல் தங்களுடைய அந்தரங்கங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். பகலெல்லாம் பேசினாலும் பேச்சு முடியாது. சூரியன் அஸ்தமித்த பிறகுகூட வீட்டுக்குத் திரும்ப மாட்டார்கள். பங்களாவுக்கு எதிரில் இருந்த குளத்தங்கரைப் படிக்கட்டுகளில் உட்கார்ந்துகொண்டு பேச்சைத் தொடங்குவார்கள். அந்த இளம் பெண்கள் அப்படி என்னதான் முடிவில்லாத அந்தரங்கம் பேசுவார்களோ என்று வானமா தேவி தன்னுடைய லட்சக் கணக்கான நட்சத்திரக் கண்களில் அதிசயம் ததும்பப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஒரு நாள் அத்தகைய மோகன முன்னிரவு வேளையில் சீதாவைப் பார்த்து லலிதா, "அத்தங்கா! நான் எத்தனை தடவை கேட்டும் ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாயே? நீ யாரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாய்? எப்போது உனக்குக் கலியாணம்?" என்று கேட்டாள்.

சீதா ஆகாயத்தை நோக்கிய வண்ணம் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு அவள் லலிதாவைப் பார்த்துச் சொன்னாள் :—

"என் கலியாணப் பேச்சை எடுக்க வேண்டாம் என்றால் நீ கேட்கவில்லை. பதில் சொன்னால்தான் விடுவாய்போலிருக்கிறது. நல்லது; என்னுடைய அந்தரங்கத்தைச் சொல்கிறேன் கேள். அம்மா சொன்னாலும் சரி, அப்பா சொன்னாலும் சரி, அவர்கள் இஷ்டப்படி நான் கலியாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிக்க மாட்டேன். எனக்குப் பிரியம் இருந்தால்தான் சம்மதிப்பேன். என்னைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று ஒருவன் வந்தால் உடனே 'சரி' என்று சொல்லி விடுவேனா? ஒரு நாளும் மாட்டேன். லலிதா! உனக்கு லைலா - மஜ்னூன் கதை சொன்னேன் அல்லவா? அது ஞாபக மிருக்கிறதா? மஜ்னூனை லைலா என்ன கேட்டாள்? 'இந்தியா தேசத்திலிருந்து பஞ்சவர்ணக் கிளி வேண்டும்' என்று கேட்டாள். மஜ்னூனும் 'கொண்டு வருகிறேன்' என்று போனான். ஆனால் நான் அவ்வளவு அற்பமான பொருளைக் கேட்க மாட்டேன். என்னை மணந்து கொள்கிறேன் என்று வருகிறவனுக்கு இராத்திரி வேளையில் நட்சத்திரமயமான ஆகாசத்தைக் காட்டுவேன். எனக்குப் பிடித்த பன்னிரண்டு நட்சத்திரங்களைக் குறிப்பிட்டு, 'அந்த நட்சத்திரங்களைக் கொண்டு வந்தால் உன்னைக் கலியாணம் செய்து கொள்வேன்' என்பேன். அவன் போய் இன்னொருவன் வருகிறான் என்று வைத்துக்கொள். அவனைப் பார்த்து, 'முள் இல்லாத ரோஜாச் செடியிலிருந்து மல்லிகைப் பூ மணமுள்ள செண்பக மலர் எடுத்து மாலை கட்டிக் கொண்டு வர உன்னால் முடியுமா? கொண்டு வந்தால் உன்னைக் கலியாணம் செய்து கொள்

வேன்' என்று சொல்வேன். அவன் போய் இன்னொருவன் வந்தால், 'வான வில்லின் வர்ணங்களையும் தோகை மயிலின் சாயலையும் கலந்து ஒரு அற்புதமான வர்ணச் சித்திரம் எழுதிக் கொண்டு வா! கொண்டு வந்தால் உன்னை நான் மணந்து கொள்வேன்!' என்பேன்......"

சீதா அடுத்தபடி என்ன சொல்லலாம் என்று ஒரு கணம் யோசித்த போது லலிதா "அத்தங்கா! இது என்ன பேச்சு? இப்படி யெல்லாம் நீ கேட்டால் யாரால் கொண்டு வர முடியும்? உன்னைப் பைத்தியம் என்று நினைத்துக் கொள்வார்கள். உனக்குக் கலியாணமே ஆகாது!" என்றாள்.

"அப்படியா நினைத்தாய், லலிதா! ஒரு காலும் இல்லை. மூடர்கள் எல்லாரும் நான் கேட்டதைக் கொடுக்க முடியாது என்று போய்விடுவார்கள். கடைசியாகப் புத்தியுள்ளவன் ஒருவன் வருவான். வந்து அவன், 'இதோ பார்! நீ கேட்டதை யெல்லாம் கொண்டு வந்து விடுவேன். ஆனால் உனக்கு நான் வேணுமா? அல்லது வெறும் நட்சத்திரமும் சித்திரமும் பூவும் காற்றும் வேண்டுமா? என்னையே உனக்குக் காணிக்கையாகக் கொடுக்க வந்திருக்கிறேனே? அவை யெல்லாம் எதற்கு?' என்று கேட்பான். மறு வார்த்தை பேசாமல் அவனைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பேன்."

"அம்மம்மா! அவ்வளவு பொல்லாத மோசக்காரியா நீ?"

"இதில் மோசம் என்ன வந்தது, லலிதா? பின்னே என்னவென்று நினைத்தாய்? மஜ்னூன் இந்தியா தேசத்துக் கிளியுடனே திருப்பி வந்த போது லைலாவைக் காணாமல் பைத்தியம் பிடித்து ஊர் ஊராய் அலைந்தான். என்னை உண்மையில் காதலிப்பவனை அந்த மாதிரி நான் பைத்தியமாக அடிக்க வேண்டும் என்கிறாயா?"

சீதாவின் தர்க்கம் லலிதாவின் மூளையில் ஏறவில்லை. எனவே அவள் "சரி! நீ உன் இஷ்டப்படி செய், அம்மா! உன்னோடு பேசி என்னால் ஜயிக்க முடியுமா?" என்றாள்.

ஆனால் இன்றைக்கு லலிதாவும் சீதாவும் குளத்தங்கரை பங்களாவுக்குச் சென்று தனிமையை அடைந்த பிறகும் பேச்சு அவ்வளவு சுவாரஸ்யமாகத் தொடங்கவில்லை. இரண்டு பேருடைய மனதிலும் ஏதோ ஒரு தடங்கல் இருந்து தாராளமாகப் பேச முடியாமல் தடை செய்தது.

"லலிதா! இன்றைக்கு நாம் இங்கு வந்தது சரியல்ல. இதற்குள் மாமி நம்மைத் தேட ஆரம்பித்திருப்பாள். நான்தான் இங்கு உன்னை அழைத்து வந்துவிட்டேன் என்று என்னைத் திட்டினாலும் திட்டுவாள்!" என்று சீதா ஆரம்பித்தாள்.

"உன்னை எதற்காகத் திட்ட வேண்டும்? வேணுமானால் என்னைத் திட்டட்டும்; நான் பதில் சொல்லிக் கொள்கிறேன்!" என்றாள் லலிதா.

"சாப்பிட்ட உடனே உனக்குத் தலைவாரிப் பின்ன வேண்டும் என்று மாமி சொல்லிக் கொண்டிருந்தாள். தாழம்பூ வைத்துப் பின்னுவதற்கு ஒரு மணி நேரமாவது ஆகுமல்லவா? அவர்களோ சாயங்காலம் ஐந்து மணிக்கே வந்துவிடப் போகிறார்களாம்! நாம் இங்கே உட்கார்ந்திருந்தால் எப்படி?" என்றாள் சீதா.

"அதென்னமோ, அம்மா! இந்த ஏற்பாடெல்லாம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. என்னைவிட நீ ஒரு வயது மூத்தவள் அல்லவா? உன் கலியாணத்தை முடிவு செய்துவிட்டல்லவா என் கலியாணத்தைப் பற்றிப் பேச வேண்டும்? அப்பாகூட இப்படிச் செய்கிறாரே என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. எனக்கு என்ன இவ்வளவு அவசரம் கலியாணத்துக்கு? இன்றைக்குத்தான் பாரேன்! இவ்வளவு தடபுடலும் ஆர்ப்பாட்டமும் எதற்காக என்று எனக்குத் தெரியவேயில்லை. இதைப் பற்றிச் சொல்லலாம் என்று பார்த்தால் அம்மா சண்டைக்கு வரப்போகிறாளே என்று பயமாயிருக்கிறது..."

இந்தச் சமயத்தில் "யாருக்கு என்ன பயம்? நான் ஒருவன் இருக்கிறபோது யாரும் பயப்பட வேண்டியதில்லை" என்று சொல்லிக் கொண்டே பங்களாவுக்குள் பிரவேசித்தான் சூரியா.

சங்கீத கலாநிதி வித்வான் சபேசய்யர்

[கோட் வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்]

திருவையாறு சபேசய்யர் என்று பிரஸித்தி பெற்ற சங்கீத கலாநிதி வித்வான் சபேசய்யர் அவர்கள் தமது 77-வது வயதில் மேமீ 22உ அன்று தேகவியோக மானார் என்ற துக்ககரமான செய்தியைக் கர்நாடக சங்கீத ரஸிகர்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

சங்கீத அவதார புருஷராகிய மகா வைத்தியநாதையரின் சிஷ்யராகிய இவர் திருவையாற்றில் 1872-வது வருஷத்தில் சங்கீத வித்வான் பிடில் சாம்பசிவய்யரின் குமாரராக ஜனித்தார். இவருடைய முன்னோர்கள் உயர்ந்த ஸங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர்கள். சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் காலத்தில் மத்தியார்ஜுனம் என்ற க்ஷேத்திரத்தில் துரைசாமி அய்யர் என்ற ஸங்கீத வித்வான் இருந்தார். அவர் ஸங்கீத ஸாஹித்யங்களில் பெயர் பெற்றவர். இனிமையான சாரீர ஸம்பத்தையுடையவர். அவருக்குச் சபாபதி அய்யர் என்றும் கோவிந்த சிவன் என்றும் இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சிஷ்யர்கள். ஸங்கீத ஸாஹித்யங்களில் தேர்ச்சி பெற்றவர்கள். கோவிந்த சிவன் தமிழில் பிரபலமான அநேக கீர்த்தனைகளை செய்திருக்கிறார். சபாபதி அய்யருடைய புதல்வராகிய பிடில் சாம்பசிவய்யர் மகா வைத்தியநாதய்யருடைய அநேக கச்சேரிகளில் பிடில் வாசித்தார்.

சபேசய்யர் மகா வைத்தியநாதையரிடம் குருகுல வாஸம் செய்து சங்கீதத்தை அப்பியசித்தார். இயற்கையிலேயே உயர்ந்த ஞானமும் இனிமையான சாரீரமும் உடைய இவர் வெகு சீக்கிரத்தில் முன்னணிக்கு வந்தார். இத்துடன் தகப்பனாரிடம் பிடில் வாசிக்கும் முறைகளையும் கற்றுக் கொண்டார். தமது குருநாதன் காலமான பிறகு கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தார். இவருடைய சங்கீதம் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்தது. கீர்த்தனைகள், வர்ணங்கள், ஸ்வரங்கள் பாடுவதிலும், ராகம் பல்லவி பாடுவதிலும் இணையற்று விளங்கினார். கச்சேரிகளில் இவர் கற்பனை செய்து ஸ்வரம் பாட ஆரம்பித்துவிட்டால் கேட்கும் ரஸிகர்கள் எல்லாம் பிரமித்து விடுவார்கள். சபேசய்யருடைய சங்கீதமாகிய உத்யான வனத்தில் அவருடைய கல்பனா ஸ்வரங்களாகிற கொடி வீடுகளில் ரஸிகர்கள் சஞ்சரிக்கையில் ராக பாவங்களாகிய புஷ்பங்கள் பூத்துக் குலுங்கும். அந்த நறுமணத்தை ரஸிகர்கள் அனுபவிக்கும் போது அந்தந்த ராக தேவதைகள் பூர்ண களையுடன் தாண்டவமாடிக் கொண்டிருப்பதாகவே எண்ணுவார்கள். இந்தக் காலத்தில் ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் சபேசய்ய ரவர்களிடம் குருகுல வாசம் செய்து சங்கீதம் பயின்றார். பிற்காலத்தில் சபேசய்யர் அவர்களுடைய சாரீரத்தில் எதிர்பாராத அயர்ச்சி ஏற்பட்டது. இதனால் கச்சேரி ஆரம்பிக்கும்போது வெகு இனிமையாய் ஒலிக்கும்; பாதிக் கச்சேரியில் சாரீரம் அயர்ந்து போய்க் கம்மிவிடும். இதனால் பாமரர்கள் இவர் கச்சேரியை ரஸிப்பது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்த போதிலும் சங்கீத வித்வான்கள் இவருடைய பாட்டில் உள்ள மேன்மையான அம்சங்களைக் கண்டு ஏகமனதாய் ரஸித்தார்கள். இதனால் மேடைக் கச்சேரிகளிலிருந்து பொதுவாய் விலகிக் கொள்ள நேர்ந்தது. சென்னையில் உள்ள ரஸிகர்கள் இவரை மிகவும் பாராட்டி வரவேற்றதின் பேரில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து சென்னையில் வசித்து வந்தார். எல்லாப் பெரிய மனிதர்களும் இவரைத் தங்கள் வீட்டில் வந்து பாடம் சற்பிக்க வேணும் என்று விரும்பினார்கள். இது முதல் இவருக்குச் சென்னை சபேசய்யர் என்ற பெயரே நிலைத்து விட்டது.

1912-வது வருஷத்திலிருந்து 1920-ம் வருஷம் வரையில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் உத்ஸவ கைங்கர்யங்களில் பெரிதும் ஈடுபட்டார். சென்னையில் தமக்குள்ள செல்வாக்கினால் நிறையப் பணம் வசூலித்துத் திருவையாற்றில் 'சின்னக் கட்சியார்' என்றழைக்கப்பட்ட பெரிய கோஷ்டியாருடன் தாமும் முன்னின்று பிரதி வருஷமும் ஸ்ரீ தியாகராஜ உத்ஸவத்தை [illegible] சிறப்பாய் நடத்தினார்.



(ஒரு தேங்காய் மற்றத் தேங்காய்களைப் பார்த்து) "அந்த இரண்டு கொழுத்த பசங்களும் மது விலக்குப் பிரதேசத்தி லிருந்து வந்திருப்பான்கள் போலிருக்கிறது!"

சென்னையில் இவரிடம் சங்கீதம் பயின்றவர்களில் முக்கியமாய் மூஸிரி சுப்பிரமணிய அய்யர் அவர்களைக் குறிப்பிட வேண்டும். குருவினிடம் விசேஷ பக்தியுடைய மூஸிரி அவர்கள் வெகு சீக்கிரத்திலேயே முன்னணிக்கு வந்தார். பாவ புஷ்டியும் மெல்லின வல்லினங்களும் அமைந்த அவருடைய சங்கீதம் தனிப்பட்ட முறையில் சிறப்புற்றோங்கி விளங்கியது.

சபேசய்யரவர்களின் போதனா சக்தியை நன்குணர்ந்த சென்னை ரஸிகர்களின் அபிப்பிராயப்படி ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சிதம்பரத்தில் 1929-வது வருஷத்தில் புனித தினமாகிய அக்ஷய திருதியை யன்று நிறுவிய சங்கீத கலாசாலைக்கு ஸ்ரீ சபேசய்யரே தலைமை வகித்து வர வேணும் என்று விரும்பினார். தாம் ஏற்றுக்கொண்ட பணியை நன்கு நிறைவேற்ற ஆவல் கொண்ட சபேசய்யரவர்கள் தஞ்சை ஸ்ரீ பொன்னய்யாப் பிள்ளை, வைணிக வித்வான் தேசமங்கலம் ஸ்ரீ சுப்ரமண்ய அய்யர், பிடில் வித்வான் சென்னை ஸ்ரீ பாலகிருஷ்ணய்யர் ஆகியோரைத் தமக்கு உதவியாய் ஏற்படுத்திக் கொண்டு வெகு சிரத்தையுடன் மாணாக்கர்களுக்குப் பயிற்சி யளித்தார். அவருடைய காலத்தில் பயின்று வெளி வந்த ஸங்கீத பூஷணங்கள் சிலர் இன்று பிரபல மடைந்திருக்கிறார்கள்.

சென்னையில் சங்கீத வித்வத் சபையோரால் நடத்தப்பட்ட வருஷாந்திர மகாநாடுகளிலும் சங்கீத ஆராய்ச்சிகளிலும் ஸ்ரீ சபேசய்யர் பெரிதும் ஈடுபட்டார். மேற்படி வித்வத் ஸபை மகாநாட்டில் அக்ராஸனம் வகித்து 'சங்கீத கலாநிதி' என்ற பட்டத்தையும் பெற்றார். தம்முடைய அறுபத்து நாலாவது வயதில் அண்ணாமலைப் பல்கலை கழகத்தாரின் சங்கீத கலாசாலையி லிருந்து விலகிக் கொண்டு சிதம்பரத்திலேயே தங்கி விட்டார். சில வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட பாரிசவாயுவின் தொந்தரவால் அதிக நடமாட்டம் இல்லாமல் இருந்து வந்தார்.

உயர்ந்த சங்கீத பரம்பரையில் உதித்த ஓர் சங்கீத அவதார புருஷரைக் குருவாகப் பெற்றுத் தாமும் சங்கீத வித்வானும் விளங்கி அநேக சிஷ்யர்களையும் தயாரித்து 'சங்கீத கலாநிதி' என்ற அரிய பட்டத்தையும் பெற்றதுடன் அதே பட்டத்தைத் தமது முக்கிய சிஷ்யர்களாகிய ஹரிகேச நல்லூர் முத்தய்யா பாகவதரும் மூஸிரி சுப்ரமண்ய அய்யரும் அடைந்த வைபவத்தைத் தாமும் கண்டு களித்த தனிச்சிறப்பு ஸ்ரீ சபேசய்யர் ஒருவருக்கே உரித்தானது. அவருடைய மறைவால் சங்கீத உலகுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஈடு செய்ய முடியாததாகும். அவருடைய குடும்பத்தாருக்கும் எண்ணிறந்த சிஷ்யர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



"இதோ இவர் தான் ஆனந்த் மிஸ்ரா...
கோடிக்கணக்கான மக்கள் சோர்வை யகற்றி புத்துணர்ச்சிபெற தேயிலை பானம் அருந்துகிறார்கள். ஆனால் தேயிலை பானம் அருந்தும் பலருக்கு நல்ல டீ எப்படி செய்வதென்பது தெரியாதது வருந்தத்தக்கது. நல்ல டீ தயாரிக்க செலவு ஏதும் அதிகமில்லை. ஐந்து சுலபமான முறைகளைக் கடைப்பிடிப்பதே போதுமானது. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் உங்கள் டீ நறுமணம் மிகுந்ததாயிருக்கவும் இம்முறைகளை உங்கள் மனதில் பதியவைத்து விடுதலும் சிறப்பு அனுசரிப்பது நலம்.
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

31. போயர் யுத்தம்

தென்னாப்பிரிக்காவில் 1899-ம் ஆண்டில் போயர் யுத்தம் ஆரம்பமாயிற்று. ஹாலந்து தேசத்தி லிருந்து தென்னாப்பிரிக்காவில் போய்க் குடியேறியவர்கள் 'போயர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். முதலில் இவர்கள் நேட்டாலில் அதிகமாகக் குடியேறி யிருந்தார்கள். நேட்டால் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தபிறகு போயர்களில் பெரும்பாலோர் உள்நாடு நோக்கிச் சென்று டிரான்ஸ்வால் ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். கொஞ்ச காலம் டிரான்ஸ்வால் ஏறக்குறைய சுதந்திர ராஜ்யமாக இருந்து வந்தது. அப்போதுதான் க்ரூகர் என்னும் போயர்ப் பிரமுகர் டிரான்ஸ்வால் குடியரசுத் தலைவராக இருந்தார். குடியரசு என்று பெயர் இருந்தாலும் ஓரளவு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் தொடர்பு இருந்தது. ஆனால் டிரான்ஸ்வால் மீது பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஸ்திரப் படுத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் முயன்றபோது போயர்கள் அம்முயற்சியை எதிர்த்தார்கள். அதன் விளைவாகவே போயர் யுத்தம் மூண்டது.

இந்த யுத்தத்தில் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் என்ன கொள்கையை அனுசரிக்க வேண்டும் என்ற பிரச்னை எழுந்தது. காந்தி மகான் இது விஷயமாக ரொம்பவும் சிந்தனை செய்தார். அந்த நாளில் பிரிட்டிஷ் ஆட்சியின் நல்ல நோக்கத்தில் மகாத்மாவுக்கு நம்பிக்கை இருந்தது. உலகத்தின் முன்னேற்றத்துக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உதவி செய்கிறது என்று எண்ணினார். இந்தியாவிலும் தென்னாப்பிரிக்காவிலும் நடைபெறும் பட்சபாதங்களும் மற்ற அநீதிகளும் ஆங்காங்குள்ள தனிப்பட்ட இங்கிலீஷ்காரர்களின் காரியங்கள் என்றும், மொத்தத்தில் பிரிட்டிஷார் தர்ம நியாயமாகக் காரியம் செய்கிறவர்கள் என்றும் நம்பியிருந்தார். ஆகையால் போயர்களின் சுதந்திரக் கோரிக்கையில் காந்திஜிக்கு அநுதாபம் இருந்த போதிலும் தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் பிரிட்டிஷ் கட்சியிலேயே இருக்க வேண்டும் என்று நினைத்தார். தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று போராடும் போயர்கள் இந்தியர்களுக்காவது தென்னாப்பிரிக்காவின் சுதேசிகளுக்காவது சுதந்திரம் கொடுக்க விரும்பவில்லை; நியாயம் செய்யவும் முன்வரவில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சர்க்காரோ எல்லாருக்கும் சமநியாயம் வழங்குவதாகச் சொல்லிக் கொள்ளவாவது செய்தார்கள். காந்திஜி தாக்கப்பட்ட செய்தி அறிந்ததும் "தாக்கியவர்களைக் கைது செய்யவும்" என்று ஜோசப் சேம்பர்லின் தந்தி அடித்தார் அல்லவா? இதிலிருந்து பிரிட்டிஷார் எப்போதும் நியாயமாக நடந்து கொள்ளாவிட்டாலும் அவர்களுக்கு நியாய உணர்ச்சி இருந்தது என்றுவது ஏற்பட்டது. போயர்கள் விஷயத்திலோ இதுகூடச் சொல்வதற்கில்லை. அவர்கள் தென்னாப்பிரிக்காவில் வந்து குடியேறியவர்கள்தான். ஆயினும் தாங்கள் குடியேறிய பிரதேசம் தங்களுக்கே சொந்தம் என்று நினைத்து அவர்கள் நடந்து கொண்டார்கள்.

இதையெல்லாம் எண்ணிக் காந்திஜி போயர் யுத்தத்தின் போது பிரிட்டிஷ் கட்சியில் இருந்து தொண்டு செய்வதென்று முடிவு செய்தார். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரஜைகளுக்கு உள்ள பூரண உரிமைகளை நாம் கோருகிறோமல்லவா? ஆகையால் அந்த சாம்ராஜ்யத்தின் பாதுகாப்புக்கும் நாம் உதவி செய்தாக வேண்டும்" என்று மற்ற இந்தியர்களுக்கு எடுத்துச் சொன்னார். யுத்த சேவை செய்ய முன் வந்த இந்தியர்களைக் கொண்டு 'ஆம்புலன்ஸ் படை' அமைத்தார். 'ஆம்புலன்ஸ் படை' என்றால் என்ன தெரியுமா, தம்பி? போர்க்களத்தில் போர் செய்கிறவர்கள் காயம் பட்டு விழுவார்கள் அல்லவா? அவர்களைத் தூக்கிக் கொண்டு வந்து இராணுவ முகாம் ஆஸ்பத்திரிகளில் சேர்ப்பது, அவசியமான ஆரம்ப சிகிச்சைகளைச் செய்வது



போயர் யுத்தத்தில் மகாத்மாவின் தலைமையில் தொண்டு செய்த இந்திய சேவைப் படை

முதலிய ஜீவகாருண்ய சேவைகளைச் செய்யும் படைக்கு 'ஆம்புலன்ஸ் படை' என்று பெயர். யுத்தம் செய்யும் படை வீரர்களைப் போலவே இவர்களும் ஆபத்துக்கு உட்பட்டாக வேண்டும்: ஆனால் இவர்கள் யாரையும் கொல்ல வேண்டியதில்லை. காயம் பட்டுச் சாகக் கிடப்பவர்களுக்குப் பணிவிடை செய்து கூடுமானால் அவர்களைப் பிழைக்கச் செய்வது இவர்களுடைய வேலை. மொத்தத்தில் யுத்த சேவை என்றாலும், மிகச் சிறந்த ஜீவகாருண்யத் தொண்டு என்றும் சொல்லலாம்.

காந்திஜி 'ஆம்புலன்ஸ் படை'க்கு இந்தியர்களைச் சேர்க்க ஆரம்பித்தபோது பலர் அவரை அதைரியப் படுத்தினார்கள். இந்தியர்கள் அபாயங்களைக் கண்டு அஞ்சும் கோழைகள் என்றும், தாற்காலிக சுயநலத்தைத் தவிர வேறு விசால நோக்கம் இல்லாதவர்கள் என்றும் அந்தக் காலத்தில் ஆங்கிலேயர் நம்பினார்கள். ஆகையால் காந்திஜியின் முயற்சியைப் பொதுவாக ஆங்கிலேயர் ஆதரிக்கவில்லை. ஆனால் டாக்டர் பூத், மிஸ்டர் லாப்டன், மிஸ்டர் எஸ்கோம்ப் முதலிய சிலர் காந்திஜியை ஆதரித்து உற்சாகப்படுத்தினார்கள். சேவைப் படையில் சேர்ந்த இந்தியர்களுக்கு டாக்டர் பூத பயிற்சி அளித்தார். யுத்தகாலத்தில் சேவை செய்யத் தகுந்தவர்கள் என்று வைத்தியர்களின் அத்தாட்சியும் வாங்கப் பட்டது. இவ்வளவுக்குப் பிறகு காந்திஜி போர்க்களத்தில் தொண்டு செய்ய இந்திய சேவைப் படைக்கு அனுமதி அளிக்கும்படி நேட்டால் சர்க்காருக்கு எழுதினார். சர்க்காரின் பதில் பளிச்சென்று வந்தது. "மிக்க வந்தனம்; ஆனால் தற்சமயம் உங்களுடைய ஊழியம் தேவை இல்லை!" என்று சர்க்காரின் பதில் கூறியது.

இத்துடன் காந்திஜி சும்மா இருந்து விடவில்லை. இந்தியர்களின் சேவையைச் சர்க்கார் ஒப்புக் கொள்ளும்படி செய்வதற்கு மேலும் பிரயத்தனம் செய்தார். டாக்டர் பூத் அவர்களை அழைத்துக் கொண்டு நேட்டால் பிஷப் பாதிரியைப் போய்ப் பார்த்தார்; விவரங்களைச் சொன்னார். இந்திய சேவைப் படையில் இந்தியக் கிறிஸ்தவர் பலர் இருக்கிறார்கள் என்னும் விவரத்தையும் அறிவித்தார்.

நேட்டால் பிஷப் காந்திஜியின் முயற்சிக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். நேட்டால் சர்க்காருக்கும் எழுதினார்.

இதற்கிடையில் போயர் யுத்தம் மிகக் கடுமையான நிலையை அடைந்தது. பிரிட்டிஷ் சர்க்கார் எதிர்பார்த்ததைக் காட்டிலும் போயர்கள் அதிகப் பிடிவாதமாகப் போராடினார்கள். இந்தியர்களின் யுத்த சேவையைச் சர்க்கார் அலட்சியம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது.

நாற்பது தலைவர்கள் உள்பட ஆயிரத்து நூறு இந்தியர்கள் அடங்கிய சேவைப் படை போர்க்களத்தில் சேவை செய்யச் சென்றது. இந்த ஆயிரம் பேரில் முந்நூறு பேர் சுதந்திர இந்தியர்கள்; மற்றவர்கள் ஒப்பந்தத் தொழிலாளிகள். இந்திய சேவைப் படை போர்க்களத்தில் நல்ல ஊழியம் செய்து பெயர் பெற்றது. சாதாரணமாகச் சேவைப் படையினர் துப்பாக்கிப் பிரயோக எல்லைக்குள் செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. ஆனால் ஸ்பியான் கோப் என்னுமிடத்தில் பிரிட்டிஷ் துருப்புக்கள் போயர்களால் முறியடிக்கப் பட்ட போது மிக நெருக்கடியான நிலைமை ஒன்று ஏற்பட்டது. போர்க்களத்திற்குச் சென்று காயம்பட்டவர்களைத் தூக்கி வெளியேற்ற முடியுமா என்று பிரிட்டிஷ் தளபதி ஜெனரல் புல்லர் காந்திஜிக்குச் செய்தி அனுப்பினார். ஒரு கணமும் தயங்காமல் "அப்படியே செய்கிறோம்!" என்று காந்திஜி பதில் அனுப்பினார். பிறகு இந்திய சேவைப் படை துப்பாக்கிப் பிரயோகம் நடந்து கொண்டிருந்த போர்க்களத்திலேயே சேவை செய்ய ஆரம்பித்தது. காயம் பட்ட வீரர்களைச் சுமந்துகொண்டு சுமார் இருபத்தைந்து மைல் வரையில் நடந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேண்டியிருந்தது. இந்திய சேவைப் படையைச் சேர்ந்தவர்கள் சிறிதும் கலங்காமல் இத்தகைய சேவைகளைச் செய்தார்கள். இவர்களால் ரண களத்திலிருந்து தூக்கிச் செல்லப்பட்டவர்களில் தளபதி உட்கேட் என்னும் பிரபல இராணுவ அதிகாரி ஒருவர்.

இவ்விதம் ஆறு வார காலம் இந்திய சேவைப் படை தொண்டு புரிந்தது. இதற்குள் பிரிட்டிஷ் சேனாபதி இங்கிலாந்திலிருந்து உதவிப் படை வரும் வரையில் மேலே முன்னேறுவதில்லை என்று தீர்மானித்துவிட்டார். ஆகையால் இந்திய சேவைப் படை கலைத்துவிடப் பட்டது.

போயர் யுத்தத்தின்போது இந்தியர்கள் செய்த சேவையைப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சர்க்கார் பெரிதும் பாராட்டினார்கள். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் மதிப்பு அதிகமாயிற்று. "நாம் எல்லாரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் புதல்வர்கள் தானே? வெள்ளைக்காரர் ஆனால் என்ன? இந்தியர் ஆனால் என்ன?" என்னும் தோரணையில் தென்னாப்பிரிக்காப் பத்திரிகைகள் கூட இந்தியரின் சேவையைப் புகழ்ந்து எழுதின.

சேனாபதி ஜெனரல் புல்லர் இந்தியரின் போர்க்களச் சேவையைத் தமது அறிக்கைகளில் பாராட்டியிருந்தார். சேவைப் படையின் தலைவர்களுக்கு யுத்த சன்மானப் பதக்கங்கள் அளிக்கப்பட்டன.

சாதாரண வெள்ளைக்காரர்களின் மனோபாவமும் பெரிதும் மாறுதல் அடைந்து விட்டதாகக் காணப்பட்டது. யுத்தத்தின்போது இந்தியர்களும் வெள்ளைக்காரர்களும் சிநேக பாவம் கொண்டாடினார்கள். ஆயிரக்கணக்கான வெள்ளைக்கார சோல்ஜர்களுடன் இந்தியர்கள் நெருங்கிப் பழக நேர்ந்தது.

கஷ்டங்களும் சோதனைகளும் ஏற்படும் காலத்தில் மனித சுபாவம் சில சமயம் பெரிதும் மேன்மை அடைவதுண்டு. அதற்கு ஓர் உதாரணம் அப்போது கிடைத்தது. காந்தி மகாத்மா எழுதியிருக்கிறார்:

"சிவ்லி பாசறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அங்கு, லார்ட் ராபர்ட்ஸின் புதல்வர் லெப்டினண்ட் ராபர்ட்ஸ் படுகாயமுற்று மரணமடைந்தார். அவர் உடலைப் போர்க்களத்திலிருந்து தூக்கிச் செல்லும் கடமை எங்கள் படைக்குக் கிடைத்தது. அன்று வறட்சியிருந்த தினம். ஒவ்வொருவரும் தண்ணீருக்குத் தவித்துக் கொண்டிருந்தனர். வழியில் தாகம் தணித்துக் கொள்ளக்கூடிய ஒரு சிறிய அருவி ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் முதலில் யார் அருவியில் தண்ணீர் அருந்துவது என்ற பிரச்னை ஏற்பட்டது. வெள்ளைக்காரப் போர் வீரர்கள் அருந்திய பின்னரே நாங்கள் அருவியில் இறங்குவதென்று முடிவு செய்திருந்தோம். ஆனால் அவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை; எங்களை முதலில் தண்ணீர் குடிக்கும்படிச் சொன்னார்கள். இவ்வாறு, யார் முதலில் தண்ணீர் அருந்துவது என்பது குறித்து எங்களுக்குள் கொஞ்ச நேரம் போட்டி நடந்தது."

காந்தி மகாத்மா தம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த நினைக்க நினைக்க இன்பந்தரும் ஞாபகங்களில் மேற்கூறிய சம்பவம் ஒன்று என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.



பேசும் விழிகள்

ரமணி

வெள்ளிய நிலவு வெண் மேகங்களின் மீது தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. இளந் தென்றல் ஜிலு ஜிலு வென்று வீசிய வண்ணம் தயங்கித் தயங்கிச் சென்று கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அவள் மேல் மாடியில் அமர்ந்து, தன் மலர்க் கரங்களினால் வீணைத் தந்திகளை மீட்டித் தன்னுடைய இதயத்தில் மலரும் எண்ணங்களைப் பரப்பிக் கொண்டிருந்தாள். எல்லாம் அவனைப் பற்றிய எண்ணங்கள் தான்!

"இதோ, இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவான் அவன்! வந்து, மெய் சிலிர்க்க, கண்கள் படபடக்க, உள்ளம் களித்து குழைய நின்று, 'ஆஹா! ஆஹா!! என்ன அருமை! எவ்வளவு இனிமை!' என்று வாயாரப் புகழப் போகிறான். அது மட்டுமா? 'கொஞ்சும் குயிலே!' என்பான்; 'பேசும் விழியே!' என்பான்!"—இப்படி நினைக்க, நினைக்க அவள் உள்ளம் ஆனந்தத்தால் விம்மி, விம்மி எழுந்தது; கண்கள் விரிந்து, விரிந்து அலர்ந்தன; இதழ்கள் குவிந்து குவிந்து மலர்ந்தன.

"இதோ, அரை க்ஷணம்! இல்லை; அடுத்த விநாடி! வந்துவிடுவான்! வரப் போகிறான்! இதோ, அவன் காலடிச் சத்தம் கூடக் கேட்கிறதே!" — இப்படியெல்லாம் எண்ணித் தவித்துக் கொண்டிருந்தது அவள் காதல் பித்துப் பிடித்த மனம்.

ஆனால் அவனோ இன்னும் வந்தபாடில்லை. அவள் எண்ணத்தில் நெளிந்து நெளிந்து புரண்டு கொண்டிருந்த இன்ப அலைகள் அவ்வளவும் சிறிது நேரத்துக்கெல்லாம் துன்ப அலைகளாக மாறி மாறி மோதின; அடிக்கடி அவள் நீண்ட பெரு மூச்சு விட்டாள்.

அவன் ஏன் இன்னும் வரவில்லை?

யோசித்தாள்; யோசித்துக் கொண்டேயிருந்தாள். யோசித்து, யோசித்துப் பார்த்தாள்; தலைதான் நிமிஷத்துக்கு நிமிஷம் கனத்ததுபோல் தெரிந்ததே தவிர, புத்திக்கு ஒன்றும் எட்டினதாகத் தெரியவில்லை. ஆகவே, அவளுடைய கண்களில் ஏக்க பாவம் நிறைந்துவிட்டது; நெஞ்சில் கலக்கம் குடிகொண்டு விட்டது.

"அவர் ஏன் வரவில்லை? இன்னும் என்ன செய்து கொண்டிருப்பார்? ஒரு வேளை!......ஹூம்......!"

இவ்வாறு எண்ணி, அழுத்தம் திருத்தமாக அவள் ஒரு பெரு மூச்சு விட்டுவிட்டு வீணையைக் கீழே வைத்தாள். மெல்ல எழுந்து அவள் அறைக்குச் சென்றாள். அவள் நினைத்த மாதிரியேதான் அங்கு நடந்து கொண்டிருந்தது!

வாசற் படியின் மேல் நின்றுகொண்டு கொஞ்சம் கனைத்துக் காட்டினாள். அப்பொழுதும் அவன் இவள் வந்திருப்

பதைத் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை; அவ்வளவு மும்முரமாக அவன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

இன்னும் கொஞ்சம் நகர்ந்து, அவன் பின்னால் சென்று நின்று, அவன் என்ன எழுதுகிறான் என்று கவனித்தாள்—'காதலோ காதல்' என்னும் தலைப்பின் கீழ் அவன் கதையொன்று எழுதிக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும் அவள் கலகலவென்று சிரித்துக் கொண்டே, "ஓஹோ! அப்படியா சமாசாரம்!" என்றாள்.

அவன் நிமிர்ந்து பார்த்துக் கொஞ்சம் சிரித்து விட்டு, மறுபடியும் கதையை எழுதத் தொடங்கினான்.

"என்ன எழுதுகிறீர்கள்?"

"கதை!"

"கதையா?"

"ஆமாம்."

"தன்னந் தனியாகவா கதை எழுதுகிறீர்கள்?"

"ஆமாம்!"

"என்னைக்கூட விட்டுவிட்டா?"

"ஆமாம், உன்னையும் விட்டு விட்டுத்தான்!"

"அடேயப்பா! என் பேச்சின்றி, என் மூச்சின்றி, என் வழியின்றி, என் விழியின்றியா நீங்கள் கதை எழுதுகிறீர்கள்?"

"ஆமாம், ஆமாம், ஆமாம்!"

"ஆச்சரியமாக இருக்கிறதே! நிஜமாகவா சொல்கிறீர்கள்?"

"நிஜமாகத்தான்!"

அதற்குமேல் அவளால் பொத்துக் கொண்டு வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் சிரித்துக் கொண்டே அவன் தோள்களைப் பிடித்துக் குலுக்கிய வண்ணம், "அதெல்லாம் உலகத்தில் நீங்கள் தலை சிறக நின்றாலும், உங்களால் என்னை விட்டு விட்டுத் தனியாகக் கதை எழுத முடியாது! வாருங்கள், கொஞ்சம் பாடுகிறேன்!" என்றாள்.

"ஊஹூம்............ முடியாது! நான் எழுத வேண்டும்."

"இதோ, பாருங்கள்! அப்புறம் வந்து கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாலும் நான் பாட மாட்டேன்!"

"சரி, பாடாதே!"

"அப்படியானால் ஆடட்டுமா?"

"ஐயோ! வேண்டாமே, உன் ஆட்டமும் பாட்டமும்! விமலா! தயவு செய்து என்னை இப்போது தொந்தரவு பண்ணாதே! இந்தச் சமயத்தில் உன் ஆட்டத்தைப் பார்க்கவும், உன் பாட்டைக் கேட்கவும் நான் தயாராயில்லை!"

"ஐயா, எழுத்தாளரே! சற்றே என்னைப் பாருங்கள்; என் அழகைப் பாருங்கள்; என் கண்ணைப் பாருங்கள்; கண்ணின் ஒளியைப் பாருங்கள்; பேசும் விழியைப் பாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே அவள் ஒரு சுழல் சுழன்று அவனை விஷமக் கண்ணோடு நோக்கினாள்.

அவ்வளவுதான்; அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "பேசும் விழியாவது, ஊசும் விழியாவது! சனியன்கள்! சமய சந்தர்ப்பமின்றித் தொந்தரவு கொடுக்கும் பிசாசுகள்தானே இந்தப் பெண்கள்! அதற்குத்தானே உங்களை ஓரடி தூரமே வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். கொஞ்சம் மூஞ்சி கொடுத்தால்......" என்று ஆரம்பித்தான்.

விமலாவுக்கு அப்பொழுதுதான் அவன் உண்மையிலேயே கோபம் கொண்டிருக்கிறான் என்று தெரிந்தது. இருந்தாலும் அவளால் அந்தக் கடைசி வார்த்தையைக் கேட்கச் சகிக்கவில்லை. கோபமும் குரோதமும் பொங்க, "மூஞ்சி கொடுத்தால் என்னவாம்?" என்று துடுக்குடன் கேட்டுவிட்டாள்.

"மூஞ்சி கொடுத்தால் என்னவா!— விமலா! மரியாதையாகப் போய்விடு! வீணாக என் கோபத்தை மேலும் மேலும் கிளறிக் கொண்டிருந்தால், அப்புறம்......!"

"அப்புறம் என்ன, சொல்லுங்கள்!"



"அப்புறம் என்னவா? சொல்லாமல் கொள்ளாமல் நீ உன் பிறந்தகத்துக்கு ஓட வேண்டியிருக்கும். தெரிஞ்சுக்கோ!" என்று கண்களில் தீப்பொறி பறக்கக் கத்தினான் அவன்.

அவன் அப்படிச் சொல்வானென்று விமலா கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. 'பிறந்தகத்துக்கு ஓடவேண்டியிருக்கும்' என்பதைக் கேட்டதும் அவள் உள்ளமே உடைந்து சிதைந்தது; உடலும் ஒரு குலுங்கு குலுங்கி, வியர்த்துக் கொட்டியது. அங்கே அவளால் அதற்குமேல் நிற்கவே முடியவில்லை. தட்டுத் தடுமாறிக் கொண்டே சென்று கட்டிலின் மேல் பொத்தென்று விழுந்து தேம்பித் தேம்பி அழுதாள்.

2

நாளடைவில் விமலாவின் பிரிவைச் சகிக்க முடியாமல் பைத்தியக்காரன் போல் இங்கு மங்கும் திரிந்து கொண்டிருந்தான் நாகராஜன். ஆம், இப்பொழுது விமலா வீட்டில் இல்லை. மறுநாள் விடியற்காலையிலேயே அவள் தன் பிறந்தகத்துக்குப் புறப்பட்டு விட்டாள். அவள் விழிகளையும், மொழிகளையும் பார்க்காததினாலும் கேட்காததினாலும், உண்ணவும் முடியாமல் உறங்கவும் முடியாமல் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தான் நாகராஜன். வீட்டிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் அவளைக் காணாமல் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதுபோல் இருந்தது. பார்க்கு மிடமெல்லாம் அவள் கள்ளங்கபடற்ற அழகிய உருவம் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

"சீ, என்ன மூடன் நான்! மலர் போன்ற அவள் உள்ளத்தை எவ்வளவு கொரூரமாகக் கசக்கிப் பிழிந்து விட்டேன்! அவள் சொன்னதும் ஒரு விதத்தில் சரிதானே? உண்மையில் நானு கதை எழுதுகிறேன்? எல்லாம் அவள் கற்பனைதான்! அவள் பேச்சில் அலரும் வார்த்தைகள்தானே என் கதைக்கு ஜீவனாக அமைகிறது! அவள் பேசும் விழிகளிலிருந்து உதிரும் காதல் பார்வைதானே என் கதையைச் சோபிக்கச் செய்கிறது! அவள் மெளனியில் பிறக்கும் அழகுதானே என் கதைக்கு மெருகு கொடுக்கிறது! இப்படி யெல்லாமிருக்க அவளன்றி எப்படி என்னால் கதை எழுத முடியும்? — ஐயோ, விமலா! உன் பேசும் விழிகளைப் பார்த்து எத்தனையோ நாட்களாகி விட்டனவே!" என்றெல்லாம் அவன் எண்ணிக் கொண்டே எதிரில் இருந்த மேஜையின்மீது சாய்ந்து விட்டான்.

இந்தச் சமயத்தில் இரண்டு வட்டவடிவமான கோலங்கள் அவன் கண்ணுக்கெதிரே நெருப்புப் பொறிகளைப் போலச் சுழன்று வந்தன. அவற்றைப் பார்த்ததும் அவன் உடம்பெல்லாம் ஒரு கணம் நடுங்கி ஓய்ந்தது. நாத் தழுதழுக்க, "நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"என்ன! உங்களுக்கே எங்களைத் தெரியவில்லையா! ஐயா, எழுத்தாளரே! தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய பேசும் விழிகள்தான் நாங்கள்!"

"எதற்காக இப்போது இங்கே வந்தீர்கள்?"

"எங்கள் நியாயத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக; உண்மையை உடைத்து மடமையைக் கொளுத்துவதற்காக! உண்மையைச் சொல்லுங்கள்: நீங்கள் உங்கள் சொந்தக் கற்பனையுடன் கதை எழுதினீர்களா?"

"இல்லை."

"கதையில் வரும் பெயர்களும் கருத்துக்களும் தங்களுடையதுதானா?"

"இல்லை!"

"ஆமாம்! கதையும் உங்களுடையதல்ல; கதையின் கருத்துக்களும் உங்களுடையதல்ல, பின் யாருடையது என்று தெரியுமா?"

"விமலாவினுடையதுதான்!"

"அப்படிச் சொல்லுங்கள்! இப்பொழுதுதான் உங்களுக்கு உண்மை தெரிந்தது போலும்!"

"இல்லை; அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற அன்றே தெரிந்துவிட்டது!" என்று சொல்லும்போதே, அவன் சித்தம் தெளிந்து விட்டது. கண்களைத் திறந்து சுற்றும் முற்றும் பார்த்தான். மறுபடியும் அதே சூன்யம்; அதே தனிமை: எங்கு பார்த்தாலும் வெறிச்சென்றிருக்கும் தோற்றம்.

அவன் மூளை குழம்பிவிட்டது. மடமடவென்று மேஜையைத் திறந்து காகிதமும் பேனாவும் எடுத்தான். தன் உள்ளத்தில் அந்த நிமிஷம் தோன்றிய எண்ணங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, விமலாவுக்கு உருக்கமாக ஒரு கடிதம் எழுதினான்.

என் அருமை விமலா!

இந்தக் கடிதத்தைக் கண்டதும் உனக்குச் சிரிப்பு வரலாம்; பைத்தியக்காரனுக்கு இப்

பொழுதுதான் புத்தி வந்தது போலிருக்கிறது என்றுகூட நீ நினைப்பாய்! நானும் எப்படி எப்படியெல்லாமோ உன்னை மறந்திருக்கப் பார்த்தேன்; முடியவில்லை. உன் பிரிவு என்னை ஆட்டி அலட்டி உருக்குலையச் செய்து விட்டது. அது மட்டுமா? 'பேசும் விழிகள்' என்று நான் உன் கண்களுக்குப் பெயர் வைத்தது மிகவும் மோசமாய்ப் போய் விட்டது. ஏனெனில், அவை என் கனவிலும் நினைவிலும் ஓயாமல் ஒழியாமல் தோன்றிப் பேச்சுப் பேச்சென்று பேசுகின்றன. எங்கு பார்த்தாலும் அந்த விஷமக்கண்கள் தோன்றி என்னைப் பாடாய்ப் படுத்துகின்றன, "இவர் மூஞ்சியைப் பார், மூஞ்சியை! இவரும் ஒரு எழுத்தாளராம், எழுத்தாளர்!" என்று உருட்டி, உருட்டிப் பார்த்து என்னைத் திகைக்க வைக்கின்றன.

விமலா! இப்பொழுது எனக்குக் கதையும் வேண்டாம், கற்பனையும் வேண்டாம். நீ இருந்தால் போதும்; 'கீச்சுக் கீச்' சென்னும் குரலில் நீ என்னுடன் 'பேச்சுப் பேச்'சென்று பேசிக்கொண்டே யிரு; நான் கை கட்டி வாய் பொத்திக் கேட்டுக்கொண்டே யிருக்கிறேன். நீ குதியாய்க் குதித்து, 'எப்படி யிருக்கிறது?' என்று கேள்; நான் உடனே, அபாரம்! ரம்பை, ஊர்வசி, மேனகா!' என்று வர்ணிக்கிறேன். அதுமட்டும் அல்ல; நீ ஒரு நாளைக்கெல்லாம் என் பக்கத்தில் உட்கார்ந்து என்னைக் கிள்ளிக் கொண்டே யிரு; நானும் கோபமும் தாபமும் இன்றிப் பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிறேன். இது உண்மை; முற்றும் உண்மை!

விமலா! இவ்வளவும் வெறும் பிதற்றல் என்று நினைத்துக் கொள்ளாதே! இவை என் உடைந்த உள்ளத்திலிருந்து நொறுங்கி வரும் சிதைந்த வார்த்தைகள்! ஆகையினால் உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்; கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்; நீ தயவு செய்து என்னை மன்னித்து, நாளைக்கே புறப்பட்டு வந்துவிடு. உனக்காக ஸ்டேஷனில் காத்துக் கொண்டிருப்பேன். அப்படி நீ வராவிட்டால் நானே வந்து அழைத்துக் கொண்டு வருவேன். உன் பிரியமுள்ள,

நாகராஜன்.

கடிதத்தை எழுதி முடித்ததும் ஓடோடியும் சென்று தபாலில் சேர்த்துவிட்டு வந்தான். அதே சமயத்தில் 'ஸார், போஸ்ட்!' என்று ஒரு குரல் வெளியே யிருந்து வந்தது. விழுந்தடித்துக் கொண்டு ஓடித் தபாலை வாங்கி அவசர அவசரமாகப் பிரித்துப் படித்தான். குண்டு குண்டான எழுத்துக்களில் விமலா எழுதியிருந்தாள்.

தங்களுக்கு!

தங்கள் அடியாள் விமலா கண்ணீரும் கம்பலையுமாக எழுதிக் கொண்டது.

நீங்கள் இந்தக் கடிதத்தை உற்றுப் பாருங்கள்! சில இடங்களில் கண்ணீர்த் துளிகள் சிதறி விழுந்து எழுத்துக்கள் கலைந்திருக்கும். ஏனென்றால் தங்களை நினைக்கும் போதெல்லாம் எனக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வருகிறது. ஐயோ! நான்தான் எவ்வளவு விஷமக்காரி! உங்களைப் பேசவிடாமல் நானே வாயாடிக் கொண்டிருந்ததை நினைக்க நினைக்க இப்போது என் உள்ளம் வெதும்புகிறது; உடல் குன்றி மெலிகிறது; பேசும் விழிகள் பார்க்க முடியாமல் கூசுகின்றன. ஆகையினாலே உங்கள் திருப்பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து கேட்டுக் கொள்ளுகிறேன். நடந்ததைப் பொருட்படுத்தாமல் என்னை மன்னித்து, நாளை ஸ்டேஷனில் வந்து இருங்கள். நான் ஐந்து மணி வண்டியில் வருகிறேன்; நீங்கள் வராவிட்டாலும் நானே வந்து சேர்ந்து விடுகிறேன். அன்புள்ள,

விமலா.

குறிப்பு:—இப்பொழுது எனக்கு அறிவு வந்து விட்டது. இனி நான் வீணாக வாயாட மாட்டேன்; வீணாக ஓய்ச்சல் ஒழிவின்றி உங்களை நச்சரித்துக் கொண்டிருக்க மாட்டேன்; தங்கள் உத்தரவின்றி ஒரு வார்த்தையும் பேச மாட்டேன்; தங்களுக்கு என்னை வேண்டாதபோது தலை மறைவாக இருந்து விட்டு வேண்டும்போது தங்களுக்கு முன்னால் வந்து முளைத்துக் கொள்ளுவேன்!

இதைப் படித்து முடித்ததும், "விமலா! உனக்கும் என்னைப்போல் பிரிவைத் தாங்க முடியவில்லையா? என்ன விந்தை இது! இதோ ஒரு நொடியில் வந்து விடுகிறேன்!" என்று சந்தோஷத்தால் கத்திக் கொண்டே நாகராஜன் கடிகாரத்தைப் பார்த்தான். அப்பொழுதுதான் கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்தது. இருந்தாலும், "ஒரு வேளை வண்டி இன்று சீக்கிரத்தில் வந்துவிட்டாலும் வந்துவிடும்!" என்று நினைத்தவனாய்ப் பார்க்கப் பார்க்க ஐந்து மணி வண்டிக்கு அப்போதே ஓடினான் நாகராஜன்.

★ ★ ★ ★ ★ ★ வேலை கிடைத்தது! ★ ★ ★ ★ ★ ★

ஒரு காரியாலயத்தில் 'ஆபீஸ் பையன் தேவை' என்று பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தது. நூற்றுக் கணக்கான பையன்கள் அந்தக் காரியாலய வாசலில் 'க்யூ'வில் நின்று கொண்டிருந்தனர். மானேஜர் பல பையன்களைப் பார்வையிட்டுப் பல கேள்விகள் கேட்டுக் கொண்டே வந்தார். அப்பொழுது சுறுசுறுப்புடன் துருதுருவென்றிருந்த ஒரு சின்னப் பையன் அவர் கவனத்தைக் கவர்ந்தான். அவனையும் ஏதாவது கேட்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. "தம்பி! இத்தனை பையன்கள் வந்திருக்கிறார்கள், நீயும் வந்திருக்கிறாய்! உனக்கு இந்த வேலை அவசியம் வேண்டுமா?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பையன், "ஆமாம் ஸார்! அந்தத் தீர்மானத்துடன் வந்திருப்பவன் இத்தனை பேரில் நான் ஒருவன்தான்! மத்தியானச் சாப்பாட்டையும் கையில் தயாராக எடுத்து வந்திருக்கிறேன், பாருங்கள்!" என்றான்.

அவனுக்கு வேலை கிடைத்தது!



வட்ட மேஜை

★

பனாரஸ்
23—5—48

பிரதிக்ஞை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தாங்கள் 16-ந் தேதி மே மாத "கல்கி"யில் மோட்டார் பஸ் போக்கு வரவு, இன்ஷியூரன்ஸ் ஆகிய தொழில்களை சர்க்காரே எடுத்துக்கொண்டு நடத்துவது பற்றி எழுதியிருக்கிறீர்கள். சுயராஜ்யம் கிடைத்து விட்டது என்றாலும் பேராசை, லஞ்சம் வாங்குதல், சோம்பேறித்தனம் இம் மூன்று துர்க்குணங்களும் நமது சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு யுத்தத்திற்குப் பிறகு மிகவும் அதிகரித்துவிட்டது. போலீஸ், ரயில்வே, ஸப்ளை, உணவு இந்த இலாக்கா அதிகாரிகள் இம்மூன்று துர்க்குணங்களுக்கும் பேர் போனவர்கள். ஸெக்ரடேரியட்டிலோ ஒரு கடிதம் போனால் அதற்குப் பதில் மூன்று மாதங்களுக்கு முன் வருவதில்லை. காரணம் எங்கேயோ ஓரிடத்தில் அசிரத்தை, அல்லது ஒழுங்கீனம். இந்த ஊழல்களையெல்லாம் நீக்கி ஒரு விதமான ஒழுங்கிற்கு வந்தாலல்லவா சர்க்காருக்கும் புதிய திட்டங்களை யெடுத்து நடத்த ஊக்கமும் நம்பிக்கையும் இருக்கும்?

இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் பாலிஸி தாரர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையில் 55 சதவீதம் சர்க்கார் கடன் பத்திரங்களிலும் மற்றும் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கடன்களிலும் சட்டப்படி போட வேண்டியிருக்கிறது. இன்ஷியூரென்ஸ் கம்பெனிகளால் ஆண்டுதோறும் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானத்தில் குறைவொன்றுமில்லை. தேச முன்னேற்றத்தை யொட்டி சர்க்கார் இன்ஷியூரென்ஸ் கம்பெனிகளைத் தாங்களே எடுத்துக்கொண்டு நடத்துவது அவசியந்தான். இருந்தாலும் சர்க்கார் காரியாலயங்களிலிருக்கும் ஊழல்கள் நீங்கினொழிய, பொது மக்களுக்கு இம்மாறுதல் பெரிய தீமையை விளைவிக்கும். போஸ்டல் இன்ஷியூரன்ஸ் பாலிஸிகள் குறைந்த விகிதப்படி இருந்தபோதிலும் பொது மக்கள் ஆதரவு போதுமான அளவு இல்லை. ஏன்? காலா காலத்தில் வேண்டிய சௌகரியங்கள் சர்க்கார் காரியாலயங்களில் செய்ய இயலுவதில்லை. சாமானியமானதொரு கம்பெனியில் ஒரு பாலிஸியின் பணம் 20 நாட்களில் கிடைத்தால், போஸ்டல் பாலிஸியில் குறைந்தது 6 மாதங்களாவது ஆகிறது. நமது சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் "நான் லஞ்சம் வாங்குவதில்லை. பொறுப்பை மறந்து காலத்தை வீண் போக்குவதில்லை. இது என் தேசம். இது என் சர்க்கார். நான் பொது மக்களின் ஊழியன். தேசத்தின் பெருமை, சுபிக்ஷம் இவைகள் என்னுடைய ஊக்கத்திலும் யோக்யதையிலும் பெருந் தன்மையிலுமே வளரக்கூடும். நான் தர்மநியாயமாக எனது அலுவல்களைக் கவனித்துவருவதே இந்தியப் பிதாவாகிய மகாத்மாஜிக்குச் செய்யும் ஒரு பெரிய தொண்டு" என்று பிரதிக்ஞை செய்து விட்டுத் தத்தம் வேலைகளைச் செய்து வந்தால் இன்னும் சில வருடங்களில் நமது சர்க்கார் தாங்கள் கூறியுள்ள தொழில்களை எடுத்து நன்கு நடத்தலாம். அது இல்லாத வரையில் புதுப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளுவது அவிவேகமாகத்தான் முடியும்.

வெ. ப. அய்யர்.

பம்பாய்
11—5—48

யார் காரணம்?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

உணவுப் பொருள் உற்பத்திக்கு அத்தியாவசியமான வேலைகளைச் செய்யாது, இன்னமும் பிற இடங்களை எதிர்நோக்கி யிருப்பது வருந்தத்தக்க விஷயமே. தமிழர்கள் உடலுறுதியுடன் கூடிய உயர்ந்த உழவர்கள். அப்படியிருக்க, ஏன் சென்னை அரசாங்கம் மாகாணத்தில் உள்ள தரிசு நிலங்களை யெல்லாம் ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்து உணவு உற்பத்தியைப் பெருக்கக் கூடாது?



உதாரணமாக, நான் சர்க்கார் உத்தரவுப்படி இரண்டு வருடங்கட்கு முன் தஞ்சையில் என் கிராமத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு சிறு பகுதி தரிசு நிலத்திற்கு மனுச் செய்தேன். என்னுடைய பெயர் தஞ்சை கலெக்டர் ஆபீஸில் பதிவு செய்திருப்பதாகவும் கூடிய விரைவில் தரப்படும் என்றும் பதில் வந்தது. மறுபடி எத்தனையோ முறை எழுதியும் அதை நான் அடைய முடியவில்லை. இன்று வரை அத் தரிசு நிலம் அப்படியே பிரயோசனமில்லாது கிடக்கிறது. இதை யாரிடம் முறையிடுவது? அரசாங்கம் அதிக உணவு உற்பத்திக்கு வெறும் பேச்சளவிலேயே நிற்கிறதே தவிர, கிரியாம்சையில் இதுவரை எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் காங்கிரஸா, அல்லது ஜனங்களா? ஒருகாலும் இருக்க முடியாது. சில பொறுப்பற்ற உத்தியோகஸ்தர்கள்தான் காரணம்.

ஐ. ஏ. மஜீது.

சேலம்
13—5—48

கவனிக்க வேண்டும்

"கல்கி" ஆசிரியர் அவர்கட்கு,

தற்போது அரசாங்கத்தார் பள்ளிக்கூடங்களில் எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்பிக்கப் போவதால், அது சம்பந்தமாக ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

ரசாயனப் பொருள்களின் ஆங்கிலப் பெயர்களைத் தமிழில் மொழி பெயர்க்கும்பொழுது, அரசாங்கத்தார் ஒரு விஷயத்தைக் கவனிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன். உதாரணமாக, சாதாரண உப்பை (Common Salt) எடுத்துக் கொண்டால், அதைச் சில புத்தகங்கள் 'ஸோடியம் க்ளோரைட்' (Sodium Chloride) என்று குறிப்பிடுகின்றன.

அதையே மற்றும் சில புத்தகங்கள் 'ஸோடா ஹைட்ராக்ஸைடு' என்றும் குறிப்பிடுகின்றன. அரசாங்கத்தார் கேள்வித் தாள்களில் ஏதாவது ஒரு புத்தக மொழிபெயர்ப்பின் பிரகாரம் கேள்விகளைக் கேட்கின்றனர். ஆனால் அதைத் தவிர வேறு புத்தகம் படித்திருக்கும் மாணவனோ, அக் கேள்விக்கு விடை தெரிந்திருந்தும் அதன் பெயரைத் தெரிந்து கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறான்.

ஆகையால் தாய் பாஷையில் ரசாயனப் பெயரை மாற்றும்பொழுது, ஒவ்வொரு பொருளுக்கும் ஒரே ஒரு பெயரையே வைக்க வேண்டும். இப்பொழுது ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங்களை வெளியிடுவது போல எல்லாப் பாடங்களுக்கும் சர்க்காரே புத்தகங்களை வெளியிட வேண்டும். தனிப்பட்டவர்கள் புத்தகங்களை வெளியிடுவதால் தங்களிஷ்டப்படி மொழி பெயர்க்கின்றனர்.

ஆர். குப்புசாமி.

தஞ்சை
13—5—48

திட்டம் என்னத்துக்கு?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

ஆதாரக் கல்வித் திட்டம், முதியோர் கல்வித் திட்டம் எனப் பல திட்டங்கள் தீட்டுகிறார்கள். "இதை யார் அமுல் நடத்துவது?" என்ற பதிலில்தான் 'தத்துவம்' இருக்கிறது. தற்போது நடத்தும் ஏகோபாத்திய கல்வித் திட்டத்தை அமுல் நடத்தவே ஆயிரக் கணக்கில் உபாத்தியாயர்கள் தேவை! இந்நிலையில் திட்டம் தீட்டிக்கொண்டே போவதில் என்ன இருக்கிறது?

மூன்று மாதங்களுக்கு முன் 'வெயிட்டேஜ்' எனக் காகித ரூபத்தில் ஒரு திட்டம் வெளியிட்டார்கள். நாங்களும் சிறிது சந்தோஷப் பட்டோம். பொதுஜனங்களும் "ஆசிரியர்களுக்கு எவ்வளவு சௌகரியம்!" என்றார்கள். ஆனால் திட்டம் எங்கே? எனியிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது! கல்வி இலாக்கா திட்டங்களின் உண்மையை அறியவே கேட்பதுபோல் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் சட்டசபையில் ஒரு கேள்வி கேட்ட போது, அந்தக் கேள்விக்குக் கல்வி மந்திரி அவர்கள், "உதவி பெறும் ஆரம்ப ஆசிரியர்கட்கு மாத கிரான்ட் கொடுக்குமாறு ஜனவரியிலிருந்து உத்தரவாகிவிட்டது" என்று பதிலுரைத்தார்கள். ஆனால் இன்றுவரை அப்பதிலின் உண்மைக் கிணங்க 'சர்குலர்' ஒன்றும் எங்களுக்குக் கிடையாது. இவை மட்டுமா? அடிப்படைச் சம்பளம் 30 ரூபாய் என்று அறிக்கை விடுகிறார்கள். ஆனால், நாங்கள் வாங்குவதும் சர்க்கார் ஒப்புக் கொண்டதும் 25 ரூபாய்தான் இன்றுவரை!

இவ்வாறாகத் திட்டங்கள் தூங்கும்போது, மேலும் மேலும் திட்டம் வரைவதும், மதுரை பெஜவாடா மகாநாடு கூடுவதும் எதற்காக?

ஓர் ஆரம்ப ஆசிரியன்.

கோபாலபுரம்
17—5—48

சென்னையில் திருடர் பயம்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

சில துஷ்டர்கள் ஜன நடமாட்டமில்லாத பகல் வேளையில் (12-30 முதல் 3 மணி வரை) வீதியில் விளையாடிக் கொண்டிருக்கும் பையன்களிடமிருந்தோ, சிறு கடைகளிலிருந்தோ பக்கத்திலுள்ள வீட்டாரின் பெயர், தொழில் விவரங்களைத் தெரிந்து கொள்கிறார்கள்.



வீட்டின் கதவைத் தட்டி, பெண்களின் பகல் தூக்கத்தைக் கலைத்து, வீட்டு ஆடவரின் பெயரைச் சொல்லி நம்ப வைத்து, வீட்டுக்காரர் தன்னை அனுப்பியதாகவும், பையனிடம் பணம், சாக்கு கொடுத்தனுப்பினால் அரிசி வாங்கித் தருவதாகவும் சொல்லி, பையனைப் பணத்துடன் அழைத்துப் போகிறார்கள். நடமாட்டமில்லாத இடத்தில் பையனைப் பயமுறுத்திப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். பையன் வெகு நேரம் வரை வராததைக் கண்ட தாய்மார்கள் மனக்கிலேசம் அடைந்து, கடைசியில் பையன் அழுதுகொண்டு வருவதைப் பார்த்ததும், "தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்றே!" என்று நினைத்து ஒருவாறு மனதைத் தேற்றிக் கொள்கிறார்கள்.

ஸ்திரீகள் இப்படிப்பட்ட துஷ்டர்களுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கக் கூடாது; கதவுகளையும் திறந்து பதில் சொல்லக் கூடாது.

அன்னியர்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் தங்களுடைய, அல்லது அக்கம் பக்கத்து வீட்டார்களுடைய பெயர், தொழில் முதலிய விவரங்களைக் கொடுக்கக் கூடாது.

ஆர். கிருஷ்ணமூர்த்தி.

பெரம்பூர், சென்னை
13—5—48

மணிக்கொடிக்கு மரியாதை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

நம்மில் பலர் இன்று வரை நமது தாயின் மணிக் கொடிக்கும் தேசிய கீதத்திற்கும் விசேஷ மரியாதை அளிப்பதாகத் தெரியவில்லை. விசேஷ மரியாதை கொடுக்காவிட்டாலும் போகட்டும்; அவைகளுக் குரிய மரியாதையாவது அளிக்க வேண்டாமா?

சினிமாத் தியேட்டர்களில் படம் காட்டப்பட்டபின், கடைசியில் தேசியகீதப் பின்னணியுடன் தேசியக் கொடி காண்பிக்கப்படும் போது, ஒரு சிலர் தவிரப் பெரும்பாலோர் கொள்ளை அவசரத்துடன் வெளியேறுவது நித்திய காட்சியாக இருக்கிறது. அப்படி என்ன தலைபோகிற அவசரம்? இதனால் தாயின் மணிக்கொடி அவமதிப்புக்கு உள்ளாக்கப் படுகிறது.

"இது ஒரு மூன்று நிமிஷம் வெயிட்!" என்று ஆங்கிலம் கலந்த தமிழுடன் ஒருவர் சமாதானம் சொல்லித் தன்னண்டையில் மரியாதையுடன் கொடி வணங்கி நின்று கொண்டிருக்கும் அன்பர்களைத் தள்ளியடித்துக் கொண்டு போகிறார். மூன்று மணி நேரம் ஆபாசக் குப்பைகளைத் தம் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பார்த்த அவருக்கு ஒரு நல்ல காரியத்திற்காக மூன்று நிமிஷம் தாமதிப்பது கால விரயமாம்! என்னே மதியீனம்! இப் பேர்வழிகளுக்கு என்ன தண்டனை விதித்தாலும் தகும்.

அறியாமையினாலேயே மக்கள் இவ்வாறு செய்கிறார்கள் என்று வருந்த மடைந்த பம்பாய் சர்க்கார் 'தேசிய வணக்கம்' முடியும் வரை தியேட்டர் கதவுகளை அடைத்து வைக்

கும்படி உத்தரவிட் டிருக்கிறார்கள். இம் மாதிரியே சென்னை சர்க்காரும் ஏன் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது?

எம். எஸ். இராமஸ்வாமி.

தியாகராயநகர்
19—5—48

பஸ்ஸில் நெருக்கடி!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

மோட்டார் போக்குவரத்தை நம் மாகாண சர்க்கார் சென்னை நகரில் சொந்த நிலை மாதங் களாக நடத்தி வருகிறார்கள். பொது ஜன சௌகரியத்திற்காக நல்ல இட வசதியோடு கூடிய புதிய பஸ்கள் விடப்பட்டுள்ளன. இதற்காக நாம் நமது சர்க்காரைப் பாராட்ட வேண்டும். இருப்பினும் பொது ஜனங்க ளுக்குச் சில முக்கியமான இடங்களில் பஸ் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது.

காலை, மாலை நேரங்களில் சென்ட்ரல், மவுண்ட் ரோடு, புரசவாக்கம், லஸ் கார்னர் போன்ற இடங்களில் ஜனங்கள் பஸ்ஸில் ஏறுவதற்கு முண்டியடித்து யுத்தம் நடத்த வேண்டி யிருக்கிறது. தாங்கள் முன்னால் போக வேண்டும் என்ற ஆத்திரத்தில் ஒருவரை யொருவர் முட்டி அடித்துக்கொண்டு பஸ்ஸில் ஏற முயற்சிக்கும் காட்சியைக் கண்டால் சகிக்க முடியவில்லை. பெண்கள் கூட்டத் தில் ஏற முடியாமல் தவித்து நிற்கும் காட்சி யையும் காணலாம். இக்கஷ்டத்தைத் தவிர்க்க ஒரு யோசனை கூற விரும்புகிறேன்.

உதாரணமாக, பாரீஸ் கார்னரில் இருந்து தியாகராயநகருக்கு சென்ட்ரல், மவுண்ட் ரோடு மார்க்கமாக வரும் 11-ம் நம்பர் பஸ்ஸை எடுத்துக்கொள்வோம். மாலை நேரங் களில் இந்த பஸ்ஸில் சென்ட்ரல், மவுண்ட் ரோடு போன்ற இடங்களில் ஏறுவது மிகவும் கஷ்டம். பாரீஸ் கார்னரில் இருந்து வரும் போதே இந்த பஸ், பிரயாணிகளோடு வந்து விடுவதால் குறிப்பிட்ட இடங்களில் சில சமயம் நிற்காமல் போய்விடுகிறது. அப் படியே நின்றாலும் ஒருவர் அல்லது இருவருக் குத்தான் இடம் கிடைக்கும். இந்தத் தொல்லை யைத் தவிர்க்கக் கூட்டம் அதிகமாக உள்ள மாலை நேரங்களில் சென்ட்ரல், மவுண்ட் ரோடு போன்ற இடங்களில் இருந்தே பஸ்கள் விடப்பட வேண்டும். உதாரணமாக இந்த வழியில் பத்து பஸ்கள் ஓடுவதாக வைத்துக்கொள்வோம். அவற்றில் கூட்டம் அதிகமாக உள்ள மாலை நேரத்தில் பாரீஸ் கார்னரிலிருந்து நேராக ஐந்து பஸ்களும், சென்ட்ரலி லிருந்து மூன்று பஸ்களும், மவுண்ட்ரோடிலிருந்து இரண்டு பஸ்களும் தியாகராய நகருக்கு விடப்பட வேண்டும். இவ்விதம் செய்தால் மேலே கூறிய இடங் களில் இருந்து பிரயாணிகள் சீக்கிரம் தங்கள் இருப்பிடங்களுக்குச் சிரமப்படாமல் போய்ச் சேரலாம். அவர்கள் பஸ் நிற்கும் இடங்களில் நின்றுகொண்டு அவதிப்படவும் வேண்டாம்; தங்கள் அருமையான நேரத் தையும் வீணாக்க வேண்டாம்.

கே. வி. ராஜன்.

* இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் காசியிலிருந்து ஸ்ரீ K. B. அய்யர் எம். ஏ., எம். ஆர். இ. எஸ். அவர்கள் எழுதியிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப் பட்டது.

சேலம்
18—5—48

நல்ல முறை எது?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

16—5—48 கல்கி இதழில் வெளிவந்த 'ஜவுளிக் கொள்ளை' என்ற தலையங்கக் கட்டுரையில் என்ஜின் டிரைவர் - பயர்மென் களைக் குறிப்பிட்டிருந்தீர்கள். அவை பற்றி இரண்டொரு விஷயம் கூற விரும்புகின்றேன்.

நான் ஒரு பயர்மென். சேலத்திலிருந்து மதராசுக்கு 245 மைல் தூரம். இவ்வளவு தூரமும் 13, 14 மணி நேரம் தொடர்ந்தாற் போல் ஒரு நிமிஷ அவகாசம் கூட இல்லாமல் வேலை செய்ய வேண்டியதாய் இருக்கிறது. இதைக் குறித்துப் பயர்மென் - டிரைவர்கள் எல்லோரும் 7, 8 மகஜர்கள் தயாரித்து ஒரு வருட காலமாக ரயில்வே நிர்வாகத்தினரிடம் தூரத்தை 120 மைல்களாகவும் நேரத்தை 8 மணியாகவும் மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்; ஒன்றும் பிரயோசன மில்லை.

கடைசியாக நிர்வாகம் அதை நிராகரித்து, "முடியாது" என்ற ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டே வந்தது. பிறகு சம்மேள னக் காரியதரிசி மூலம் ரயில்வே மந்திரி கனம் ஜான் மத்தாய், மற்றும் உள்ள நம் தலைவர்களுக்கும், சீப் லேபர் கமிஷனர் அவர் களுக்கும் இந்த மகஜர்களை அனுப்பினோம். அதிலும் யாதொரு வித மான பலனும் ஏற்பட வில்லை. பிறகு கடைசி யாக இதைக் குறித்து ஏப்ரல் 10ந் தேதிக்குள்




ஓர் ஏற்பாடு செய்யாவிட்டால், நாங்கள் ஜோலார்பேட்டையில் இறங்கி விடுவதாக நிர் வாகத்தாருக்கு மறுபடியும் மகஜர் அனுப்பி னோம். அதற்கும் நிர்வாகம் 'முடியாது' என்று பதில் அளித்தது. பிறகு 10-ந் தேதி, சேலத்திலிருந்து மதராசுக்கு 245 மைல் தூர மும் 13 மணி நேரத்தில் போக மறுத்து, முன் கூட்டியே அதிகாரிகளிடம் தெரிவித்து ஜோலார்பேட்டையில் இறங்க ஆரம்பித்து 30 பேர்களும் அவ்வாறு செய்தனர். பிறகு நிர்வாகம் இறங்கியவர்களைச் சஸ்பெண்டு செய்தும் 6 பேர்களை வேலையில் இருந்து நீக்கியும் பழி வாங்கிற்று. வேறு வழியில்லா மல அனுதாப வேலை நிறுத்தம் செய்ய வேண் டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது.

இதைப்பற்றி நீங்கள் தலையங்கம் எழுதும் போது, தொழிலாளர்கள் கையாண்ட முறை சரியல்ல என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதை விட வேறு நல்ல முறை இருந்தால் தெரிவிக்கவும்.

டி. எஸ். ஏ. எம். நீன்.


[ரயில்வே நிர்வாகத்துக்கும் மேலே உள்ளவர்கள் பொது மக்கள். அவர்க ளுடைய அநுதாபத்தைப் பெறும் விதத்தில் மேலே எழுதியிருப்பது போல விஷயத்தை எடுத்துச் சொல்லிக் கிளர்ச்சி செய்வது தான் நல்ல முறை. சுதந்திர இந்தியாவில் ரயில்வேக்கள் எல்லாம் பொது மக்களுக்குச் சொந்தம் என்பதை ரயில்வே ஊழியர்கள் மறந்துவிடக் கூடாது. —ஆசிரியர்.]

இந்த இரு க்ரீம்களும் உங்கள் வதனத்தை எழிலோங்கச் செய்வதேன்?



பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தை சுத்தம் செய்யுங்கள். தினம் இரவு முகத்திலும் கழுத்திலும் தடவுங்கள். அதிலுள்ள செழுமையான தைலங்கள் மயிர்க் கால்களினுள் ஊடுருவிச் சென்று, அங்கே படிந்து கிடக்கும் மாசுகளை வெளிப்படுத்துகின்றன. துடைத்து விட்டு, கண்ணாடியில் பாருங்கள். வதனம் எப்படி பளபளவென்று இருக்கிறது—அதற்கு தான் என்ன மழமழப்பு!

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமால் நிமிஷகாலத்தில் முகத்தைப் பராமரியுங்கள். இந்த மெழுகற்ற க்ரீம் தடவுகையிலேயே மாயமாய் மறைகிறது. ஆனால் ஓர் அரிய படலமாக நின்று பகல் முழுதும் வெய்யில், அழுக்கு இவைகளினின்று முகத்தைக் காப்பாற்றி அன்றலர்ந்த மலரென மிளிரச் செய்கிறது.



மெல்லியர் வதனம் எழிலோங்க இரண்டு அழகுக் க்ரீம்கள் அவசியம். முதலாவது—பரிசுத்தமே சௌந்தரியத்தின் முதல் நியமமாதலால்—நேர்த்தியாகக் கலவைசெய்த தைலங்களடங்கிய பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம், முகத்தை சுத்தம் செய்து மழமழப்பாக்க. இரண்டாவது, மெல்லிய மெழுகற்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம், வெய்யில், தூசினின்று முகத்தைக் காப்பாற்ற.



சுபாவமாயிருக்கட்டும்—பொசுக்கும் கோடை வெய்யிலும், பனிகால குளிரும் சருமத்தினின்று இயற்கைத் தைலங்களை வற்றி வரளச் செய்து, சருமத்தை கரடுமுரடாக்கி விடுகின்றன.



கூட தூசியிருக்கட்டும்—மயிர்க் கால்கள் ... பெரும்பான்மையான கரும் கிளர்ச்சிகளுக்கும் காரணமாயிருக்கிறது.



பாண்ட்ஸ் இரு க்ரீம்களையும் சீர்திருத்தமாக உபயோகித்து வருவதாயின் உங்கள் வதனம் மாசற்று, எப்பொழுதும் பூரண நாஜூக்குடன் விளங்கும். இந்த பராமரிப்பை உங்கள் "அழகு சாதன" மாக்குங்கள்!

பாண்ட்ஸ்

வியாபார விவரங்களுக்கு:

எல். டி. ஸெய்மர் & கோ., (இந்தியா) லிட்.

கிளைகள் —கல்கத்தா — டில்லி — சென்னை — நோவாகோவா — கராச்சி — கொழும்பு — ரங்கூன்



மந்திர வால்!

ராஜு

மாணிக்கம் மிகவும் ஏழைப் பையன். அவன் பள்ளிக்கூடத்தில் தன்னுடன் படிக்கும் மாணவர்களோடு மிகவும் அன்பாகப் பழகுவான்; விளையாடுவான். ஆனால் நல்ல பையனாகிய மாணிக்கத்தினிடம் ஒரு கெட்ட குணம் இருந்தது. பறவைகள் மரத்தில் அழகாக உட்கார்ந்திருக்கும் போது கல்லை வீசி அவற்றைத் துரத்துவான்; தெருவில் ஓடும் நாய்களை ஒன்றுகூட விடாமல் கல்லால் அடித்துத் துரத்தி ஆனந்தப் படுவான். குளத்தங் கரையில் தத்தித் தத்திக் குதிக்கும் தவளைகளை யெல்லாம் கல்லால் அடித்துத் துன்புறுத்துவான். வாயில்லாப் பிராணிகளை இம்சை செய்வதில் மாணிக்கத்துக்கு ரொம்ப ஆசை. அவன் ஆசையை அவன் நிறைவேற்றிக் கொள்ளாத நாளே கிடையாது.

ஒருநாள் மாணிக்கம் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது வழக்கம்போல் ஒரு நாயைக் கல்லால் அடித்தான். நாய் பரிதாபமாகக் குரைத்துக் கொண்டே ஓடியது. அந்த வழியாக ஒரு சாமியார் வந்தார். அவர் மாணிக்கத்தையழைத்து, "ஏன் அப்பா, அந்த நாயைக் கல்லால் அடித்தாய்? அது உன்னை என்ன செய்தது? இது ஒரு விளையாட்டா?" என்று கேட்டார். மாணிக்கம் சாமியார் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் அடிபட்ட நாயை மேலும் துரத்தினான்.

சாமியார் மாணிக்கத்துக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். உடனே அவர், "பையா, இங்கே வா! உனக்கு ஒரு வரம் தருகிறேன்!" என்றார்.

உடனே மாணிக்கம் நாயை விட்டுவிட்டு ஓடிவந்து, "ஸ்வாமி, என்ன வரம் தரப் போகிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டான்.

"நீ பணக்காரனாக விரும்புகிறாயா?" என்று சாமியார் கேட்டார்.

மாணிக்கத்துக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. "ஆமாம், நான் பணக்காரனாக வேண்டும். எனக்கு வரம் கொடுங்கள்!" என்றான்.

உடனே சாமியார் அந்த நாயைப் பிடித்துக் கொண்டு வந்தார். அந்த நாயின் வாலைப் பல தடவை தடவிக் கொடுத்தார். பிறகு அதன் காதோடு ஏதோ ஒரு மந்திரம் ஜபித்தார்.

பிறகு சாமியார் மாணிக்கத்தை யழைத்து, "சிறுவனே, இந்த நாய் இப்போது மந்திர சக்தி வாய்ந்த நாயாக மாறிவிட்டது. உனக்கு என்ன வேண்டுமோ அதை மனதில் நினைத்துக்கொண்டு இந்த நாயின் வாலை ஆடச் செய்தாயானால் உன் விருப்பம் கைகூடும். இந்த நாயின் கழுத்தில் கயிற்றைக் கட்டி உன்னிடம் வைத்துக் கொள். இதே இடத்தில் ஒரு வாரம் கழித்து உன்னைச் சந்திக்கிறேன்!" என்று சொல்லி விட்டுச் சாமியார் வேகமாகப் போய் விட்டார்.

மாணிக்கம் அந்த நாயை வீட்டுக்குக் கொண்டு போய் ஒரு சங்கிலியை அதன் கழுத்தில் கட்டினான். சாமியார் சொன்னபடி நாயின் வாலை ஆடச் செய்வதற்காக அவன் என்னென்னவோ செய்து பார்த்தான்.

ஆனாலும் என்ன பிரயோஜனம்? மாணிக்கம்தான் அங்கும் இங்கும் ஓடி ஆடினானே தவிர நாய் தன் வாலை அசைக்கிற வழியாயில்லை.

நாய் தன் வழிக்கு வரவில்லை என்பதற்காக மாணிக்கம் அதை அடித்துப் பல விதத்திலும் இம்சை செய்தான். நாய் தொந்தரவு பொறுக்க முடியாமல் 'வள் வள்' என்று குரைத்துக் கொண்டு மாணிக்கத்தையே கடிக்க வந்தது. இதனால் ஆத்திரமடைந்த மாணிக்கம் நாய்க்குச் சோறு கூடப் போடாமல் வீட்டுப் பின் புறத்து மரத்தடியில் கட்டிப் போட்டு விட்டான்.

அவனுக்கு நாயின் மேல் ஒரு பக்கமும் சாமியாரின் மேல் ஒரு பக்கமும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சாமியார் குறிப்பிட்ட தினம் வரும் வரையில் பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தான்.

ஒரு வாரம் கழித்து மாணிக்கம் ஆவலோடு சாமியாரை எதிர்பார்த்தபடி குறிப்பிட்ட இடத்துக்கு முன்னதாகவே சென்று காத்துக் கொண்டிருந்தான். அந்த நாயும் அவன் பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்தது. பாவம், பசியால் அது மிகவும் இளைத்திருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அங்கு வந்த சாமியார், "மாணிக்கம், இன்னும் நீ ஏழைப் பையனாகவா இருக்கிறாய்? நான் சொல்லியபடி செய்து நீ பணக்காரனாக வில்லையா? இந்த நாய் ஏன் இப்படி இளைத்துத் துரும்பாய்ப் போயிருக்கிறது?" என்று கேட்டார்.

உடனே மாணிக்கம், "ஸ்வாமி, நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள். நீங்கள் சொன்னபடி என்னால் செய்ய முடியவில்லை. இந்த நாயின் வாலைப் பிடித்து ஆட்டிப் பார்த்தேன்; முடியவில்லை. நாயை அடித்துப் பார்த்தேன்; ஊஹூம்! அப்பொழுதும் அதன் வாலை ஆட்ட முடியவில்லை!" என்று மிகவும் துக்கத்துடன் சொன்னான்.

"மாணிக்கம், நாயை நான் உன்னிடம் ஒப்புவித்ததிலிருந்து நீ அதற்கு ஆகாரமே போடாமல் இருந்து விட்டாய். இப்பொழுது கவனி!" என்று கூறிச் சாமியார் தம்மிடமிருந்த ரொட்டித்துண்டை எடுத்து நாயிடம் காண்பித்தார். உடனே நாய் சோர்வு நீங்கி எழுந்து ரொட்டித் துண்டைத் தின்பதற்காக வாலை ஆட்டிக்கொண்டு துள்ளிக் குதித்தது.

சாமியார் புன்னகையுடன் மாணிக்கத்தின் முகத்தைப் பார்த்தார். அவனுக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் தாங்கவில்லை. ஒன்றும் சொல்லத் தோன்றாமல் மௌனமாக நின்றான்.

"மாணிக்கம், உனக்குப் போதிய அவகாசம் கொடுத்தும் அதைப் பயன் படுத்திக் கொள்ளாமல் நீ விட்டு விட்டாய். நீ நாயிடம் அன்பாக நடந்து கொண்டிருந்தாயானால் அது பலமுறை தன் வாலை ஆட்டியிருக்கும், நீயும் பணக்காரனாக ஆகியிருப்பாய்! பிராணிகளிடத்தில் இனிமேலாவது அன்பாயிரு!" என்று கூறிவிட்டுச் சாமியார் அங்கிருந்து போய் விட்டார்.

மாணிக்கம் அன்று முதற்கொண்டு எந்தப் பிராணிகளைக் கண்டாலும் அடித்துத் துரத்துவதில்லை. அதற்குப் பதிலாக அவன் அவைகளிடம் மிகவும் அன்பாக நடந்து வந்தான். தெருவிலுள்ள நாய்கள் கூட மாணிக்கத்தைக் கண்டால் இப்போதெல்லாம் ஓடுவதில்லை; வாலை ஆட்டிக் கொண்டு அவனைச் சூழ்ந்து கொள்ளும். அவன் தான் அவைகளுக்கு வேண்டிய தின்பண்டம் தருகிறானே!





சரிதான்!

தெருவில் நின்று கொண்டிருந்த போலீஸ்காரனைப் பார்த்து, "சீக்கிரம் வாருங்களேன், அதோ அந்தச் சுவருக்கு அப்பால் என் தகப்பனாரை ஒருவன் அடித்துக் கொன்று விடுவான் போலிருக்கிறது!" என்று ஒரு சிறுவன் சொன்னான்.

போலீஸ்காரன் :—அப்படியானால் ஏன் என்னை இதுவரையில் கூப்பிடவில்லை?

பையன் :—ஏனென்றால் என் அப்பா தான் இதுவரையில் அவனை அடித்துக் கொண்டிருந்தார்!

★

நல்ல காரணம்

மானேஜர் (சம்பளம் அதிகம் தரும்படி கேட்ட ஆபீஸ் பையனைப் பார்த்து) :—ஏன்டா பையா, சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்கிறாயே, உனக்குச் சம்பளம் உயர்த்தும்படியாக நீ என்ன அப்படிப் பிரமாதமாகச் செய்துவிட்டாய்?

பையன் :—என்ன ஸார்! போன மாதம் கம்பெனிக்கு ரூபாய் பத்தாயிரம் லாபம் கிடைத்ததே, அது என்னாலேதானே?

மானேஜர் :—அது எப்படி?

பையன் :—நான்தானே ஸார், அந்தத் தபாலைப் போஸ்டாபீஸிலே போட்டுவிட்டு வந்தேன்?

★

சிக்கனம்!

மீனாக்ஷி :—நானும் என் வீட்டுக்காரரும் அன்றைக்கு வாங்கவேண்டிய சாமான்களைப் பற்றி அன்றைய சாயந்திரம்தான் யோசிப்போம். அப்படி யோசித்து வாங்கினால் மிகவும் சிக்கனமாக இருக்க முடிகிறது.

காமாக்ஷி :—அது எப்படி முடியும்?

மீனாக்ஷி :— நாங்கள் இரண்டு பேரும் எது எது வாங்க வேண்டும் என்று கடைசியாய் முடிவு செய்வதற்குள் கடைகளெல்லாம் மூடியாகிவிடும்; அதனால்தான்!

பாட்டும் பயமும்!

அம்மா :—குழந்தை ஓயாமல் அழுகிறானே, கமலா! கொஞ்சம் வேடிக்கை காட்டிச் சமாதானப்படுத்தக் கூடாதா? சமையற் காரியம் முடிந்து விட்டால் நான வந்து பார்த்துக் கொள்வேன். அதுவரையில் கொஞ்சம் பார்த்துக் கொள்!

கமலா :—என்ன சமாதானம் பண்ணினாலும் கேட்கமாட்டேன் என்கிறான் அம்மா!

அம்மா :—'அம்மா வந்து பாட்டுப் பாடுவாள்' என்று சொல்லித் தொட்டிலை விட்டு ஆட்டு; தூங்கி விடுவான்!

கமலா :—அப்படிச் சொல்லியும் பல முறை பார்த்தேன்; தூங்கமாட்டேன் என்கிறான்!

★

யோசனை எப்படி?

அபேட்சகர் (பிரசங்கத்தில்) :— இந்தத் தேர்தலில் நான் வெற்றி பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

பகல் :—உங்கள் ஸ்தானத்தில் வேறொருவரை நிறுத்தி வைக்க வேண்டும்!

★

பாவம்!

இரண்டு பிச்சைக்காரர்கள் ஒரு பார்க்கில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

முதல் பிச்சைக்காரன் :— அண்ணே உனக்குத் திடீரென்று ஏராளமாகப் பணம் கிடைத்து விட்டால் என்ன செய்வாய்?

இரண்டாவது பிச்சைக்காரன் :— அப்படி எனக்குத் திடீரென்று ஏராளமான பணம் கிடைத்தால் இந்தப் 'பார்க்'கில் உள்ள 'பெஞ்சு'களை யெல்லாம் நன்றாய் ரிப்பேர் செய்து, படுத்துத் தூங்கச் சௌகரியம் செய்து கொள்ளுவேன்!

★

எப்படி?

கணவன் :—நான் ஓர் அதிசயமான புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன்!



மனைவி :—ஐயையோ! அது நீங்கள் கொடுத்த பணத்துக்கு நான் எழுதி வைத்திருந்த கணக்கல்லவா?

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

211. வாழி நல்லறம்!

சீதையைப் பார்த்த மாத்திரத்தில், துயர சொரூபமாய்ப் பார்த்த மாத்திரத்தில், அநுமன் ஒரே அதிசயத்தில் மூழ்கி நின்றான். குடிப் பிறப்பு என்ற வார்த்தையைச் சொல்லித்தான் வருகிறோம். பயன் என்ன? குடிப் பிறப்பின் அதி தேவதைக்கு எடுத்து வளர்க்க எப்பேர்ப்பட்ட பாத்திரம் கிடைத்து விட்டது! பெண்மையைப் போல்ச் சிறந்த தத்துவம் உலகத்தில் இல்லை என்று ஆகிவிட்டது. நாணம் என்ற அடிப்படையான பெண் தன்மை எவ்வளவு அழகாய்ப் பிரகாசிக்கிறது!

பேணநோற் றதுமனைப்
  பிறவி ; பெண்மைபோல்
நாணம்நோற்(று) உயர்ந்தது
  நங்கை தோன்றலால் ;—
மாணநோற்(று) ஈண்டிவன்
  இருந்த வாறெலாம்
காணநோற் றிலஅவன்
  கமலக் கண்களே !

[பேண நோற்றது மனைப் பிறவி: எடுத்து வளர்ப்பதற்கு ஒரு குழந்தை வேண்டுமே என்று குடிப் பிறப்பானது ஆசைப்பட்டது. நோன்பு நோற்றது. அதை அடைந்தும் விட்டது; பெண்மை போல் நாணம் நோற்று உயர்ந்தது: மனுஷ சமூகம் உயர்ந்து வருவதற்கான பொறுப்பைப் பெண்பாலிடத்திலேயே வைத்திருக்கிறது—இயற்கை. நாயகனுக்காக தியாகம் செய்கிறதும் அவளிடத்திலேயே ஒருமைப் பட்டிருப்பதும் (நாணம்) பெண்பாலிடத்தே சிறப்பாய்க் காணும் தத்துவங்கள். இந்தத் தத்துவங்கள் துலாம்பரமாய் விளங்குவதற்கு முதலில் பாத்திரம் வேண்டும். அடுத்தாற் போல் சந்தர்ப்பமும் அமைய வேண்டும். பாத்திரமும் சந்தர்ப்பமும் பெண்மைக்கும் நாணத்துக்கும் வாய்த்து விட்டதல்லவா என்று வியக்கிறான்; நங்கை தோன்றலால்: இதெல்லாம் இந்த சீதா பிராட்டி அவதரித்த காரணத்தினால்தானே! மாண நோற்று ஈண்டு இவள் இருந்த ஆறெலாம்: அற்புதமான முறையில் இங்கே இவள் தவமிருப்பதின் அழகை யெல்லாம்; காண நோற்றில அவன் கமலக் கண்களே: காணக் கொடுத்து வைக்க வில்லையே அந்த ராமனது கமலக் கண்களுக்கு!]

குறிப்பு:—உல்லாசமாய் இருந்த போதுள்ள அழகைத் தானே பார்த்து அநுபவித்திருக்கின்றன, அந்தக் கண்கள்,—இந்த நோன்பில் விளங்கும் அற்புதமான அழகைப் பார்த்து அநுபவிக்க வில்லை தானே. இங்கே அழகின் ஒரு அரிய அம்சத்தை எடுத்துச் சொல்லுகிறார் கவிஞர். வாய்ப்பான ஒரு அதிசய பாவத்தில் உண்மை வெளியாகிறதைப் பார்க்கலாம்.

* * *

மரத்தின் கிளையில் மறைந்து உட்கார்ந்து கொண்டு சீதையின் உருவத்தையும் சோகத்தையும் பார்த்து வியந்து கொண்டிருக்கிறான் அநுமன். அந்த வேளை அரக்கன் ராவணன் அவ்விடம் வருகிறான். சீதை முன்பாகவே வந்துவிட்டான்.

கூசி ஆவி
  குலையுறு வாளையும்
ஆசை யால்உயிர்
  ஆழ்வா ளையும்,
காசில் கண்ணிணை
  சான்றெனக் கண்டனன்,
ஊச லாடி
  உளையும் உளத்தினன்.

[கூசி ஆவி குலையுறு வாளையும்: ஒரே பயத்துக்கு உள்ளாகி உயிர் குலைகிற நிலையிலிருக்கும் சீதையையும்; ஆசையால் உயிர் ஆழ் வாளையும்: காதலால் உண்டாகும் ஏக்கத்துக்கு உள்ளாகி உயிர் நிலை குலையும்படியான ராவணனையும் (சீதைக்கு நேர் நேராக); காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்: யாதொரு பழுதுமில்லாத தன் கண்களே சாட்சியாகக் கண்டனன்; ஊசலாடி உளையும் உளத்தினன்: ராவணன் நிமிர் என்று வந்ததும் இப்படியும் அப்படியுமாய் உள்ளம்

நிலைத்துக் கஷ்டப்படுகிறது. அநுமனுக்கு என்பது கடைசி அடியின் குறிப்பு.]

***

சீதை சிறை வந்து எத்தனையோ மாசங்கள் ஆகிவிட்டன. அவளுடைய முகத்தில் ஏக்கம், தேட்டம் எல்லாம் நிறைந்து நிற்கின்றன. வெகு தூரத்தை எட்டி நிற்கிற மாதிரி இருக்கின்றன கண்கள் — ராமன் இருக்கும் இடத்தை நாடித்தான். ராவணன் வந்ததும் பயம் வேறு வந்து மேலிடுகிறது அந்த முகத்தில். இதைப் பார்த்துக் கொண்டான் அநுமன். அதோடு எதிரில் நிற்கும் ராவணனது அடங்கி ஒடுங்கி நிற்கும் நிலையையும் பார்த்துக் கொண்டான். விஷயம் தெரிந்து விட்டது. அக்கினியை நெருங்க அஞ்சுகிறான் அரக்கன் என்பதையும் உணர்ந்து கொண்டான். ஓரே ஆனந்த வெறிக்கு உள்ளாகிறான்.

வாழி சானகி
வாழியி ராகவன்
வாழி நான்மறை
வாழியர் அந்தணர்
வாழி நல்லறம்
என்றுற வாழ்த்தினன்
ஊழி தோறும்
புதிதுறும் கீர்த்தியான்.

[ஊழி தோறும் புதிது உறும் கீர்த்தியான்: உலகத்தில் தன்னைப் பரித்தியாகம் செய்து தொண்டியற்றும் அற்புத ஆன்மாக்கள் தோன்றியும் இருந்திருக்கின்றனர்; இனியும் பிறக்கப் போகின்றனர். அந்த ஆன்மாக்களின் சேவைகளை அனுபவிக்குந் தோறும் அநுமனை நினைப்பார்கள், புதிய ஆர்வத்தோடெல்லாம் புகழ்வார்கள் உலகத்தார்.]

***

தர்ம தேவதை உலகத்தையே அல்லவா காத்துக் கொண்டிருக்கிறது. சீதையைக் காத்துக் கொண்டிருக்கிறது. ராமனைக் காத்துக் கொண்டிருக்கிறது! வேதங்களையும் வேதியர்களையும் காத்துக் கொண்டிருக்கிறது. (அரக்கர்களால் பாதிக்கப்படவில்லை) அந்த தர்ம தேவதையும் என்றென்றும் வாழ்க! இந்த விதமான பாவம் செய்யுளில் அழகாய்த் தொனிக்கிறது.

கைத்தடி எங்கே?

காந்திஜி எரவாடா சிறையிலிருந்து விடுதலையானதும் ஸ்ரீமதி தாகர்ஸேயின் இல்லத்தில் கொஞ்ச காலம் தங்கி யிருப்பதற்காகப் பம்பாய்க்கு வந்தார். அன்று மாலை அவர் உலாவப் புறப்பட்டபோது தம்முடைய கைத்தடியைத் தேடிப் பார்த்தார், அதைக் காணோம். அது எங்கே என்று தம்முடைய சிஷ்யர்களைக் கேட்டார்.

"அது சிறையிலிருந்து வந்த மற்றச் சாமான்களுடன் கலந்திருக்கும். தேடிக் கண்டுபிடித்துக் கொடுக்கிறோம்" என்று அவர்கள் சொல்லி விட்டார்கள்.

ஆனால், உண்மை அதுவல்ல. அந்தத் தடி எரவாடா சிறையிலேயே இருந்தது. அதை எடுத்துக் கொண்டுவர அவர்கள் மறந்து விட்டார்கள். இதை காந்திஜியிடம் சொன்னால், தங்கள் ஞாபக மறதிக்காக அவர் கோபித்துக் கொள்வார் என்று பயந்தே அவர்கள் அவ்விதம் சொன்னார்கள்.

காந்திஜி உலாவிவிட்டுத் திரும்பி வந்த பிறகு, "தடி எங்கே? தேடிக் கண்டுபிடித்து விட்டீர்களா?" என்று கேட்டால் என்ன செய்வது? சிஷ்யர்கள் யோசித்தார்கள். கடைசியில், ஒரு வாடகை மோட்டார் வைத்துக்கொண்டு, காந்திஜிக்குத் தெரியாமல் எரவாடாவுக்குப் போனார்கள்.

ஆனால், இதற்குள் காந்திஜியின் கைத்தடி காணமற் போன செய்தி எரவாடா சிறை அதிகாரிகளுக்கு எப்படியோ எட்டி விட்டது. அவர்கள் சிறையில் இருந்த தடிகளை எல்லாம் சேர்த்து ஒரு கட்டாகக் கட்டிக் கொண்டுவந்து காந்திஜியிடம் கொடுத்து, "இதில் உங்கள் தடியைப் பார்த்து எடுத்துக்கொள்ளுங்கள்!" என்றார்கள்.

காந்திஜி அந்தக் கட்டிலிருந்து தம்முடைய கைத்தடியை எடுத்துக் கொண்டார்.

* * * *

எரவாடா சிறைக்கு வாடகை மோட்டாரை வைத்துக்கொண்டுபோன காந்திஜியின் சிஷ்யர்கள், சிறைச்சாலைக்குப் போய்த் தடியைக் கேட்டார்கள்.



"நாங்கள் அப்போதே கொண்டு போய்க் காந்திஜியிடம் கொடுத்து விட்டோமே!" என்றார்கள் சிறையதிகாரிகள். காந்திஜியின் சிஷ்யர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திரும்பி வந்தார்கள்.

காந்திஜி அவர்களைப் பார்த்து, "நீங்கள் அப்போதே உண்மையைச் சொல்லி யிருக்கலாம். ஒரு சிறு பொய் சொன்னதற்காக இப்போது மோட்டார் வைத்துக்கொண்டு எரவாடாவுக்குப் போகும்படி நேர்ந்திருக்கிறது, பார்த்தீர்களா?" என்றார்.

இங்கிலாந்தில் ராஜாஜி

[ஸ்ரீ ஆதிநாகப்பன், ஆசிரியர், "தமிழ்நேசன்", குலாலம்பூர்]

ராஜாஜி சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்றிருப்பது, தமிழ்நாட்டுக்கே ஒரு பெரிய கௌரவமாகும். இக் கௌரவத்தை வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் விசேஷமாக அனுபவிக்கின்றனர்.

ஒரு மாதத்துக்கு முன் நான் இங்கிலாந்தில் காடிவ் என்னும் நகரிலிருந்தேன். அது வேல்ஸ் மாகாணத்தின் தலைநகர். அதற்கருகில் பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் பிரதானமானது நிலக்கரிச் சுரங்கம். நிலக்கரிச் சுரங்கம் எவ்வாறு இருக்கும்; அங்கு தொழில்கள் எவ்வாறு இயங்குகின்றன ;—இவற்றை அறியும் பொருட்டு பெனுல்டா என்னும் நிலக்கரிச் சுரங்கத்துக்குள் சென்றேன். இது பிரிட்டனிலுள்ள பெரிய சுரங்கங்களில் ஒன்று. 2000 அடி பூமிக்குக் கீழ் அங்கு கரி எடுக்கிறார்கள். அனுபவம் புதிதாகவும் திகிலாகவும் இருந்தது. அப்போது நிலக்கரிச் சுரங்க உத்தியோகஸ்தர்களில் ஒருவரை அங்கு நான் பார்க்க நேர்ந்தது.

அவர் நீண்ட காலம் இந்தியாவிலிருந்தவர். "காந்திஜியின் பக்தர்களில் நானும் ஒருவன்" என அவர் கூறினார். இந்தியாவின் விவரங்களைப் பற்றிப் பேசினோம். அப்போது அவர் ராஜாஜியைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். "மவுண்ட்பாட்டனுக்குப் பிறகு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரே கவர்னர் ஜெனரல் பதவியை வகிக்கத் தகுந்தவர்" என்றார். "உங்கள் வாக்குப் பலிக்கட்டும்" என்று பதிலளித்தேன். அவர் வாக்குப் பலித்தே விட்டது.

* * *

சில தினங்களுக்கு முன் எடின்பரோவிலிருந்தேன். எடின்பரோ ஸ்காட்லாந்தின் தலைநகர். நல்ல அழகான நகர். "ஸ்காட்ஸ்மன்" என்னும் தினசரிப் பத்திரிகை அங்கிருந்து வெளியாகிறது. அந்தப் பத்திரிகையின் மே மீ 8 உ இதழில் டி. ஏ. மெக்ரி என்பவர், 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்ற பகுதியில் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தார் :—

"ஐயா, உங்களுடைய செவ்வாய் இதழில் நீங்கள் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரை (இந்தியாவில் பெரும்பாலோர் அவரை 'ஸி. ஆர்.' என அழைக்கின்றனர்) 'கூரிய ராஜதந்திரி, வக்கீல், நிர்வாகி' என வர்ணித்திருக்கிறீர்கள். நான் அதைவிடச் சிறிது அதிகம் கூற விரும்புகிறேன்.

"இந்தியாவிலேயே 'ராஜதந்திரி' என்று கூறத் தகுதி வாய்ந்தவர் ஸி. ஆர். ஒருவர் தான் என்பது பொதுவாக இந்தியாவில் வாசம் செய்த ஐரோப்பியர்கள் கருத்து. ஸி. ஆர். எதிரியின் நோக்கத்தை அறிய வல்லவர்; அறிய விரும்புகிறவர். அந்த எதிரி ஜின்னாவாகத்தான் இருக்கட்டும்; ஸி. ஆர். பொறுமையுடன் நோக்குவார். முரண்பட்ட கருத்துகளுக்கிடையே சமரசம் உண்டாக்கும் விவேகம் அவரிடம் உண்டு.

"ஸி. ஆர். வங்க மொழி பேசுபவர் அல்ல. எனினும் வங்க மாகாண கவர்னராக அவர் வெற்றி சம்பாதித்துள்ளார். அதே போல, அவர் ஹிந்தி சுமாராகப் பேசினாலும், இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக வெற்றி பெறுவார் என்பது எனது நம்பிக்கை.

"அவர் மது ஒழிப்பில் அபார ஆர்வமுடையவர். மதுபானக் கடைகளுக்குப் பதிலாக அவர் தேநீர்க் கடைகளைப் பிரபலப்படுத்தியுள்ளார். அதனால் சில காலத்துக்குப் பிறகு இந்தியாவிலிருந்து வரும் தேயிலை நமக்குக் கிட்டாமல் போகலாம்."

* * *

ராஜாஜியின் நியமனம் இங்கிலாந்தில் பொதுவாக மிகவும் சிலாகிக்கப்படுகிறது. லண்டனில் பார்லிமெண்டரி அங்கத்தினரான ஸ்ரீ கம்மன்ஸுடன் சம்பாஷித்தேன். அவர் ராஜாஜியின் நியமனத்தைப் பாராட்டினார்.

சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ராஜாஜி. அவரை இந்தியாவுக்கு அர்ப்பணம் செய்த முதல் மாகாணம் தமிழ் நாடு. ராஜாஜி பிறந்த தமிழ்நாடு நீடூழி வாழ்க!

புதிய கோட்டு

பட்டு

பத்மாவின் கன்னத்தில் 'பளீர்' 'பளீ' ரென்று நான்கு அறைகள் விழுந்தன. அவளுடைய தளிர் மேனி பயத்தினால் நடுங்கியது. நீலகண்டன் ரௌத்ராகாரமான கோபத்தோடு வினவினான்.

"பொய்! என்னிடமா பொய் சொல்லுகிறாய்! அவ்வளவு துணிச்சலா உனக்கு?" என்று உறுமினான் அவன்.

அவள் ஏதோ கூற வாயெடுத்தாள். ஆனால் கோபக்கனல் ஜொலிக்கும் அவனுடைய கண்களைப் பார்த்ததும், அவளுக்குப் பேச தைரியம் வரவில்லை.

* * *

நீலகண்டன் அன்று பகல் மூன்று மணிக்கெல்லாம் ஆபீசிலிருந்து வந்து விட்டான். "ஏது, சீக்கிரம் வந்து விட்டீர்கள்; ஆபீஸ் அரை நாள் லீவா?" என்று கேட்டாள் பத்மா.

"இல்லை, பத்மா, தலையை வலிக்கிறது. அதனால்தான் வந்து விட்டேன். 'ஸ்ட்ராங்'காக ஒரு கப் காபி போட்டுக் கொடு" என்றான்.

பத்மா அடுப்பை மூட்டிவிட்டு, "இதோ வந்து விட்டேன்" என்று வெளியே போனாள். நீலகண்டன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் பத்மா திரும்பி வந்தாள். அவள் தன்னுடைய இடது கையைப் புடவைத் தலைப்பினால் மறைத்துக் கொண்டு வந்தாள். இதை நீலகண்டன் பார்த்தான்.

"என்ன பத்மா, அது?"

"ஒன்றும் இல்லை!" என்று சொல்லிக் கொண்டே ஒரு அசட்டுச் சிரிப்புடன் உள்ளே போனாள் அவள்.

நீலகண்டன் அதோடு விட்டிருந்தால் ஒன்றுமில்லாமற் போயிருக்கும். ஆனால், பத்மாவின் பொல்லாத காலம் அவன் நாற்காலியை விட்டு எழுந்தான்.

"என்ன பத்மா, சொல்ல மாட்டாயா? கையில் என்ன?"

"நான் மாட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே அவள் சமையலறைக்குப் போக முயன்றாள்.



நீலகண்டன் வழிமறித்து அவளுடைய இடக்கையை 'வெடுக்' கென்று பிடுங்கிப் பார்த்தான். அந்தப் பேதை தன் கையில் ஒளித்து வைத்திருந்த ஒரு சிறிய கிண்ணத்திலிருந்து காப்பிப் பொடி கீழே கொட்டியது. அவள் வெலவெலத்து நின்றாள்.

அவள் எங்கேயோ போய்க் காப்பிப் பொடி கடனாக வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாள். நீலகண்டனுக்குத் திகைப்பாக இருந்தது.

"ஏன் பத்மா, காப்பிப் பொடி கடனாகவா வாங்கிக் கொண்டு வந்தாய்?"

"கடன் இல்லை! பக்கத்து வீட்டில் நமக்குத் தரவேண்டியதை வாங்கிக் கொண்டு வந்தேன்!"

நீலகண்டனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

"எங்கே, நம் வீட்டிலிருக்கும் காப்பிப் பொடியைக் காட்டு, பார்க்கலாம்!"

"உங்களுக்கு ஏன் அந்தக் கவலை எல்லாம்?"

நீலகண்டன் எழுந்துபோய்க் காப்பிப் பொடி டப்பாவைத் திறந்து பார்த்தான். அவன் சந்தேகப்பட்டது போலவே அது காலியாக இருந்தது!

"காப்பிப் பொடி இருக்கிறது என்று சொன்னாயே, கொஞ்சங்கூடக் காணோமே! மூந்தாநாள்தானே காப்பிப் பொடியும் எண்ணெயும் வாங்க வேண்டுமென்று என்னிடமிருந்து மூன்று ரூபாய் வாங்கினாய்? அதற்கு எவ்வளவு பொடி வாங்கினாய்?"

"அரைப் பவுண்டு!"

"இதற்குள்ளாகவா அரைப் பவுண்டு தீர்ந்து விட்டது?"

பத்மா தயங்கிக் கொண்டே என்ன சொல்லுகிறோமென்பது தெரியாமல் ஏதோ சொன்னாள்.

பத்மா பதில் பேசவில்லை. நீலகண்டன் ஒரு நிமிஷத்தில் என்னென்னவோ நினைத்தான். அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. பணத்தை என்ன செய்தாள்? ஒரு வேளை வாங்கியதை யாருக்காவது......நேற்று அவளுடைய அக்காள் வந்திருந்தாளல்லவா?...... அப்படித்தானிருக்கும்!

"என்ன, கேட்கிறேன்: பதில் பேசாமல் இருக்கிறாய்?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டான் நீலகண்டன்.

அவனது கோபத்தைக் கண்டு அவள் பயந்தாள். அவளுடைய கண்களில் நீர்

ததும்பியது. அவள் தயங்கிக் கொண்டே பதில் சொன்னாள்:

"காப்பிப் பொடி வாங்கவில்லை!"

அவ்வளவுதான். நீலகண்டன் ருத்ர மூர்த்தி யானான். வந்த கோபத்தில் பத்மாவை நாலு அறை அறைந்து விட்டான்.

"மூதேவி! பொய்யா சொல்லுகிறாய்! இப்போது சொன்னாயே அரைப் பவுண்டு வாங்கினேனென்று! எது நிஜம், எது பொய்? வாங்கா விட்டால் பணம் எங்கே?"

எதிரே சுவரில் மாட்டப்பட்டிருந்த அவனுடைய பழைய கிழிந்த கோட்டு அவனைப் பார்த்துப் பரிகசித்தது. புதிதாக ஒரு கோட்டு தைத்துக் கொள்ள வேண்டுமென்று அவனும் ஆறுமாத காலமாக முயன்று வருகிறான், முடியவில்லை. ஒவ்வொரு மாதமும் பற்றாக் குறைதான். இந்த லட்சணத்தில் முழுசாகப் பத்து ரூபாய் செலவழித்துக் கோட்டு தைத்துக் கொள்ளுவது எப்படி?

உள்ளே எட்டிப் பார்த்தான். பத்மா கரி யடுப்பை விசிக் கொண்டிருந்தாள். அவன் மேல் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

நேராக ஓட்டலுக்குச் சென்று காப்பி சாப்பிட்டபின் எங்கெங்கேயோ சுற்றி அலைந்து விட்டு மாலை சுமார் ஆறு மணிக்கு வீட்டுக்குத் திரும்பினான். வாசற்படி ஏறும்போதே கூடத்தில் பேச்சுக் குரல் கேட்டது. பத்மா, தையற்காரக் கிருஷ்ணனிடம் பேரம் பண்ணிக் கொண்டிருந்தாள்!

இப்படியும் நடக்கலாம்!



விமான ஓட்டியும் சிப்பந்திகளும் (விமானத்திலிருந்து கீழே இறங்கிக் கொண்டே பிரயாணிகளைப் பார்த்து):— திடீரென்று ஸ்டிரைக் செய்யும்படியாக எங்கள் சங்கத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. ஆகையால் நாங்கள் போய் வருகிறோம். நமஸ்காரம்!

"என்னப்பா, சரியாகத் தைத்திருக்கிறாயா?"

"ரொம்ப நல்லாத் தைச்சிருக்கேனம்மா!"

நீலகண்டன் உள்ளே நுழைந்தான். தையற்காரன் அவனைக் கண்டதும், "இதோ அவரே வந்து விட்டார். — இந்தாங்க ஸார்! அளவு சரியா இருக்கா என்று பார்த்துச் சொல்லுங்க" என்று அவனிடம் ஒரு கோட்டைக் கொடுத்தான்.

நீலகண்டனுக்கு ஒரே திகைப்பா யிருந்தது. அவன் பத்மாவின் முகத்தைப் பார்த்தான். அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவனுக்கு விஷயம் ஒருவாறாகப் புரிந்து விட்டது.

"ஏது இந்தக் கோட்டு பத்மா?"

அவள் மென்று விழுங்கிக் கொண்டே மெதுவாக, "நான் தான் வாங்கித் தைக்கக் கொடுத்தேன்!" என்றாள்.

"பணம் ஏது?"

அவள் என்ன பதில் கூறுவதென்று தோன்றாமல் கால் கட்டை விரலால் தரையைக் கீறிக் கொண்டு மௌனமாக நின்றாள். அவளுடைய பட்டுப் போன்ற ரோஜாக் கன்னத்தில் இன்னும் மறையாம லிருந்த விரல் அடையாளத்தைக் கண்டு அவனுடைய மனம் நெகிழ்ந்தது.

"பத்மா, என்னை மன்னித்து விடு" என்றான் நீலகண்டன்.

சுகுணாவின் சந்தேகம்

எஸ். லீலா

அன்று மாலை விசேஷம் எதுவும் இல்லை. வழக்கம் போலக் கலாசாலையில் ஐந்து மணிவரை இருந்து விட்டு, அப்புறம் இந்திய மாணவர் சங்கத்தில் நடைபெறும் ஒரு சொற்பொழிவுக்குப் போகலாம் என்ற எண்ணத்துடன் 'சாரிங் க்ராஸ்' ஸ்டேஷனுக்குப் புறப்பட்டேன். லண்டன் நகரத்தின் பிரசித்தி பெற்ற மூடு பனி எல்லாவற்றையும் மறைத்து, சிறிது தூரத்துக்கு அப்பால் உள்ள பொருளைக் கூடப் பார்க்க முடியாமல் செய்தது. ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் போனதும், சற்று நின்றேன். அப்போது பின்னால் வந்த யாரோ என்னை இடித்துத் தள்ளுவதுபோல் இருந்தது. திரும்பிப் பார்த்தேன் — என் சிநேகிதி சுகுணா.

"என்ன சுகுணா, உன் கோபத்தையெல்லாம் என்மீது தானா காட்டவேண்டும்? நீ இடித்த இடியில் என் முதுகு சுளுக்கிக் கொண்டு விட்டது" என்றேன் நான்.

சொற்பொழிவுக்கு இருவரும் சென்றோம். அது சாதாரணமானதுதான். இந்தியர்களுக்கும், பிரிட்டிஷாருக்குமிடையில் எப்போதும் நட்பு இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய அச் சொற்பொழிவில் என் மனம் செல்லவில்லை. நான் சுகுணாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். அவள் ஏதோ நிலைகுலைந்தவள் போலக் காணப்பட்டாள். அது என்ன நிலை? எப்போதிருந்து அப்படி? எதற்காக?

இங்கிலாந்துக்கு வந்த பிறகுதான் சுகுணாவிடம் எனக்குப் பரிச்சயம் உண்டாயிற்று. மஹாராஷ்டிரப் பெண் அவள். அவளுடைய பாட்டனார் புனாவுக்கு அருகிலுள்ள மஹாபலேஷ்வரில் இருக்கும் ஒரு பெரிய மனிதர் என்றும், தாயார் - தகப்பனார் இருவரும் அவள் சிறுவயதாயிருக்கும்போதே காலமாய் விட்டார்கள் என்றும், அவள் தகப்பனார் ஏதோ ஒரு கலாசாலையில் ரசாயன சாஸ்திர புரொபஸரா யிருந்தார் என்பதுமே எனக்குத் தெரியும். இங்கு பொருளாதார சாஸ்திரத்தில் ஒரு பெரிய பட்டம் பெற அவள் வந்திருக்கிறாள் என்பதும் தெரியும். வேறொன்றும் அவள் சொல்லவில்லை. நானும் வற்புறுத்திக் கேட்கவில்லை. நல்ல அழகி. அடக்கமானவள்.

சொற்பொழிவாளரும் பேசிக்கொண்டே இருந்தார். என் மனதோ சுகுணாவைச் சுற்றிக் கொண்டே வந்தது. அப்போது, அவ்வறையில் திடீரென்று பீடர் டேவிஸ் நுழைந்தார். அவர் என் கணவருடன் ரஸாயன சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்பவர். கல்கத்தாவில் ஒரு பிரபல குடும்பத்தில் பிறந்தவர். மொத்தத்தில், லண்டனில் எனக்குத் தெரிந்த இந்தியர்களுக்குள் மிகவும் நல்லவர்.

அவர் உள்ளே நுழைந்தபோது சுகுணா பின் திரும்பி, பீடர்டேவிஸை உற்று நோக்கினாள். டேவிஸும் அவளை உற்று நோக்கினார். இதன் அர்த்தம் முதலில் எனக்கு விளங்கவில்லை. சுகுணாவும் டேவிஸும் எவ்வளவு நாளாக இவ்வளவு சிநேகிதமானார்கள் என்று நான் யோசித்துக் கொண்டேயிருக்கையில், சொற்பொழிவும் முடிந்து விட்டது. நாங்களும் வெளியே வந்தோம்.

வெளியே ஒரே குளிர். மூடு பனியும் விலகவில்லை. நான் சுகுணாவைப் பார்த்து, "என்னுடன் வருகிறாயா, சுகுணா? சிறிது டீ சாப்பிட்டுவிட்டு சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்" என்றேன். அவள் பீடருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். உடனே என் பக்கம் திரும்பி "சரி, வருகிறேன்" என்று சொல்லி விட்டு எழுந்தாள்.

இருவரும் 'அண்டர்க்ரவுண்ட்' ரயில் ஸ்டேஷன் பக்கம் நடக்க ஆரம்பித்தோம்.

• • •

வீட்டுக்குச்சென்று, மின்சார அடுப்பை மூட்டி அந்த அடுப்பின்மேல் டீ 'கெட்டி'லை வைத்தேன். சுகுணாவும் தன்னுடைய மேல் கோட்டைக் கழற்றிவிட்டு உட்கார்ந்தாள்.

"உன்னிடம் வெகுநாளாக ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்றிருக்கிறேன், லீலா! அதற்குப் பதிலளிக்க

முடியுமா உன்னால்? நீ மனித சுபாவத்தைப் பற்றி எவ்வளவோ படித்திருக்கிறாய்; பத்திரிகைகளுக்கும் கட்டுரைகள் எழுதுகிறாய் அல்லவா?" என்று கேட்டான்.

"இந்தப் பூர்வாங்க மெல்லாம் எதற்கு, கருணா? என்ன விஷயம் அது? என்னால் முடிந்தவரை அதற்குச் சரியான பதில் கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டு, இரண்டு கோப்பைகளில் டீயையும், ஒரு தட்டில் சில 'கேக்' துண்டுகளையும் எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தேன்.

கோப்பையி லிருந்த டீயைச் சாப்பிட்டுக் கொண்டே கருணா பேச ஆரம்பித்தான்:

"தாயார் தகப்பனார் குணாதிசயங்கள் குழந்தைகளுக்கு எவ்வளவு தூரம் பிதிரார்ஜிதமாக வரக்கூடும் லீலா? சில வியாதிகள் போல் சில குரூர சுபாவங்களும், சில தீமைகளும் பரம்பரையாக வரமுடியுமா?" என்று கேட்டான்.

"இம்மாதிரி பொதுவாகக் கேட்டால் எப்படி பதிலளிக்க முடியும் கருணா? அது எவ்வளவோ சந்தர்ப்பங்களைப் பொறுத்திருக்கிறது. விஷயம் என்ன, சொல்! மனதில் மூடி வைத்திருப்பதைவிட, வெளியே சொன்னால், உன் பீதியும் துக்கமும் வெகுவாக அடங்கிவிடும்" என்றேன்.

"எப்படிச் சொல்லுவேன், லீலா? எதைச் சொல்லுவேன்? அதுவே ஒரு பெரிய கதை. இரண்டு பேர் உயிரைக் கொடுத்த தோடு நிற்காது போலிருக்கிறது. இப்போது என் உயிரையும் பாழாக்கும் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது" என்று பெருமூச்சுடன் ஆரம்பித்தான் அவன் தன் கதையை.



"புரொபஸர் திவாகர் என்று நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?—கேள்விப் பட்டிருக்க மாட்டாய். பதினாறு பதினேழு வருடங்களுக்கு முன் இந்தியாவிலிருந்த ரஸாயன சாஸ்திரிகளில் புகழ் பெற்றவர் அவர். இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் மேல் படிப்புக்காகச் சென்று, அங்கெல்லாம் பெரிய பட்டங்கள் பெற்று இந்தியாவுக்குத் திரும்பினார்.

"அவர் இந்தியாவை விட்டுப் போகும் போதே அவருக்கு விவாகமாகி ஒரு குழந்தையும் இருந்தது. அந்தக் குழந்தைதான் நான். என் தாயார் நோயாளி. அவளுக்கு என்ன வியாதி என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. என் பாட்டனார் நல்ல பணக்காரர்.

"கதையை வளர்த்துவானேன்? நாலு வருடங்கள் கழித்து, அவர் இந்தியாவுக்குத் திரும்பினார். மனைவியின் தேக நிலை முன் போலவே இருந்தது. இவரோ வாழ்க்கையில் மிகவும் பற்று உள்ளவர். படிப்பு, வேலை, விளையாட்டு, வேடிக்கை எல்லா வற்றையும் விரும்புகிறவர். ஆகவே, படுக்கையோடு படுக்கையாகயிருந்த தம் மனைவியைக்கண்டவுடன் அவருக்கு ஒரு வெறுப்புத் தோன்ற ஆரம்பித்து விட்டது. இருந்தாலும் நேரில் ஒன்றும் செய்ய முடியவில்லை. அம்மா நல்ல பணக்காரி. என் பாட்டியின் சொத்தெல்லாம் அவள் பேரிலேயே இருந்தது. சில கஷ்டங்களுக்குக் குறைவாது. அப்படிப் பட்ட பணக்கார மனைவியைத் தள்ளி வைக்க அவருக்குத் தைரியம் வரவில்லை.

"காசிக்கு அருகிலுள்ள ஒரு பெரிய கலாசாலையில் அப்பாவுக்கு புரொபஸர் வேலை கிடைத்ததாம். முதலில் போவதா, வேண்டாமா என்ற பிரச்னை. அப்புறம் வைத்தியர்கள் காசி

போன்ற வரண்ட இடம் அம்மாவுக்கு நல்லது என்று கூறிய பிறகு, அம்மாவை யும் கராச்சிக்கு அழைத்துச் சென்றார். அங்கு நல்ல வீடாம். ஆமாம். இதைப்பற்றி யெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. நான் தாத்தாவுடன் பம்பாயில் இருந்தேன்.

"கராச்சியில் ஒரு வருடகாலம் கழிந்தது. என் பாட்டனருக்கு ஒரு நாள் திடீரென்று ஒரு தந்தி வந்தது, 'என் தாயார் இறந்து போய் விட்டாள்' என்று.

"நாங்கள் கராச்சிக்கு ஓடினோம். ஆனால் என்ன பிரயோஜனம்? அம்மாவின் சவத் தைக் கூடப் பார்க்க முடியவில்லை. பத்துப் பதினைந்து நாள் அங்கே யிருந்த பிறகு நானும் என் தாத்தாவும் பம்பாயுக்குத் திரும்பி வந்தோம்.

"நான்கு வருஷங்கள் கழிந்து விட்டன. நடு நடுவே எவ்வளவோ வதந்திகள் கராச்சி யிலிருந்து வந்தனவாம். என்னுடைய தந்தை கராச்சியிலுள்ள சில ஐரோப்பிய ஹோட்டல்களிலும், நாட்டிய சாலைகளிலும் ஒரு யௌவன ஆங்கிலோ-இந்தியப் பெண் ணுடன் காணப்படுகிறார் என்ற சமாசாரம் அவைகளில் ஒன்று. அப் பெண் அப்பா புரொபஸராயிருந்த கலாசாலையிலே ஒரு 'டைபிஸ்'டாம். அடிக்கடி அவர்கள் இரு வரும் கூட இருப்பது கலாசாலையிலேயே பேச்சுக்கிடமாய் விட்டதாம். கடைசியில் பேச்சும், வதந்திகளும் மிகவும் பலமாய் விடவே, அவள் கலாசாலை வேலையை ராஜினாமா செய்து விட்டாளாம். அப்புறம் அப்பாவே அவளைக் கராச்சிக்குச் சிறிது தூரத்துக்கு வெளியே இருந்த ஒரு 'காலனி'யில் கொண்டுபோய் வைத்தாராம்.

"மறுபடியும் ஒரு வருஷம் சென்றது. ஒரு நாள் முன்போல மீண்டும் ஒரு தந்தி வந்தது தாத்தாவுக்கு. அந்த ஆங்கிலோ இந்தியப் பெண்ணைக் கொலை செய்ய முயற் சித்ததாக அப்பாவைக் கைது செய்து விட்டார்களாம். இந்தத் தடவை அவர் என்னைக் கராச்சிக்கு அழைத்துச் செல்ல வில்லை. நான் ஓரே அழுகையாக அழுத ஞாபகம் இன்று கூட என் கண்முன் நிற் கிறது. அப்பாவின் கதி என்ன ஆயிற்று என்று கூட தாத்தா என்னிடம் சொல்லவில்லை. நானே ஊகிக்க வேண்டி யிருந்தது. வயதான பிறகு அதாவது நான் பதினேழு, பதினெட்டு வயதா யிருக்கும் போது, இக் கதை பூராவும் என்னிடம் சொன்னார் தாத்தா. அதைத்தான் நான் இப்போது உன்னிடம் சொல்லுகிறேன்.

"அந்த வாரம் கராச்சிக்கருகிலுள்ள ஹைதராபாத் கலாசாலையில் நடந்த பரீட்சைகளுக்குப் பரிசோதகராக அப்பா போகவேண்டி யிருந்ததாம். ஆனால் எதிர் பார்த்த தினத்துக்கு முன்பே திரும்பி வந்து விட்டாராம். வந்த அன்று மாலை வழக்கம்போல், சாயங்காலம் ஏழு மணிக்கு காரில் அந்த ஆங்கிலோ இந்தியப் பெண் ணின் வீட்டுக்குச் சென்றாராம். வீட்டின் சாவி இவரிடமும் ஒன்று இருந்தது. கத வைத் திறந்து உள்ளே சென்றவுடன், அங்கு அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிடச் செய்ததாம். மற்றொரு புருஷ னுடன் குலாவிக் கொண்டிருந்த அப் பெண்ணைக் கண்டவுடன், இவருடைய கோபம் உச்ச நிலைமையை அடைந்தது. அவன்மீது பாய்ந்து, அவன் குரல்வளையை அமுக்கி அவனைக் கொல்ல ஆரம்பித்தாராம். அங்கிருந்த இளைஞன் உடனே இவர்மீது பாய்ந்து, இவரைக் கீழே தள்ளப் பார்த் தானாம். இருவருக்கும் குத்துச் சண்டை ஆரம்பித்ததாம். கடைசியாக அவன் இவ ரைக் கீழே வீழ்த்தி, போலீஸுக்கு டெலி போன் செய்தானாம். அங்கேயே கைது செய்யப் பட்டாராம் அப்பா.

"சிறையிலிருந்த முதல் இரண்டு தினம் ஒன்றும் பேசவே யில்லையாம். மூன்றாவது





அப்பா:—இந்த டம்ளரில் இருப்பது சமுத்திர ஜலமா? குழாய் ஜலமா?
மகள்:—குழாய் ஜலம், அப்பா!
அப்பா:—எப்படித் தெரிந்தது உனக்கு?
மகள்:—அதில் அலை இல்லை, அப்பா! அதனால் சமுத்திர ஜலமாய் இருக்க முடியாது.

தினம் தானாகவே இந்தக் குற்றத்தை ஒப்புக் கொண்டதோடு மட்டுமல்லாமல், தன் மனைவியைக் கொலை செய்ததும் தானே என்று அப் போலீஸ் அதிகாரியிடம் சொன்னாராம். முதலில் அந்த அதிகாரி இதை நம்ப வில்லையாம். அவருக்குச் சித்த சுவாதீனம் தவறி விட்டது என்று எண்ணினாராம். அப்புறம், அப்பாவே போலீஸ் அதிகாரி, ஒரு டாக்டர், ஒரு மாஜிஸ்டிரேட்—மூவர் முன்பு ஒரு வாக்கு மூலம் கொடுத்தாராம். பிறகுதான் எல்லோரும் அதை நம்பினார்கள்.

“என் குற்றமற்ற என் தாயைக் கொன்றார் என்று அவர் சொல்லவே யில்லை. ஒரு வேளை, என் தாய் உயிரோடிருந்தால் அவர் நினைத்த இன்பங்களை எல்லாம் அனுபவிக்க முடியாதோ என்னவோ? விசாரணை இரண்டு மாதம் நடந்தது. அப்புறம் சில வாரங்கள் கழித்துத் தூக்கிலிடப்பட்டார்” என்று சற்று கதையை நிறுத்திய கருணா நாற்காலியின் கைமீது தலையை வைத்து ‘ஓ’ வென்று புலம்பவும் ஆரம்பித்தாள். எவ்வளவோ சொல்லி அவளைச் சமாதானப் படுத்தினேன். சற்று அழுகை ஓய்ந்தது. மறுபடியும் தன் கதையை ஆரம்பித்தாள்.

“இதில் என்ன ஆச்சரியம் என்றால் அவருடைய குற்றங்களையும் அடாத செய்கைகளையும் நான் உணர்ந்தபோதும் கூட அவரிடம் எனக்கு இருந்த பாசம் இன்னும் போகவில்லை, லீலா! என் மனிதன் கொலையாளியாகவோ, கொள்ளைக்காரனாகவோ, நியவனாகவோ மாறுகிறான்? அவன் கொலையாளியாகப் பிறப்பதில்லை. எவ்வளவோ தப்புக்கள் சமூகத்திலும் சுற்றி நிற்கும் சகபாடிகளிடமும் இருக்கின்றன. இவை யெல்லாம் அவனை எப்படியோ பற்றிக் கொண்டு விடுகின்றன.

“இரண்டு வருஷங்களுக்கு முன்பு அப்பாவின் போட்டோ ஒன்று இருந்தது என்னிடம். அதை வெளியே காண்பிப்ப தில்லை. என் அறையில் வைத்திருந்தேன். ஒரு நாள் சாயங்காலம், தாத்தா ஏதோ ஒரு புஸ்தகம் தேடும்போது அந்தப் போட்டோவைப் பார்த்துவிட்டார். உடனே ருத்தாகாரம் எடுத்துவிட்டார்.

“தாத்தா மறு நாள்வரை என்னிடம் பேசவே யில்லை. அன்று காலை ஆகாரம் முடிந்த பிறகு, அவருடைய அறைக்கு என்னைக் கூப்பிட்டார். ‘இதோ பார், கருணா! உனக்கோ வயது இருபது ஆகிறது. நீ இன்னமும் இம்மாதிரி பிடிவாதம் பிடிக்கக் கூடாது. உன் அம்மாவையே கொன்றுவிட்ட அவனிடம் அவ்வளவு பாசம் இருக்கக்கூடாது. அவன் உன் தகப்பனாயிருந்திருக்கலாம். அப்படி நேர்ந்தது என் தப்பு. அவன் இல்லாவிடில் வேறு யாராவது என் பெண்ணை மணக்க முன்வந்திருக்க மாட்டார்களா, என்ன? ஒன்று மட்டும் நான் எச்சரிக்கிறேன். ‘கொலையாளியின் மகள்’ என்ற பெயர் உனக்குத் தங்கிவிடும், இம்மாதிரி பிடிவாதம் பிடித்து, உன் தகப்பனுக்குப் பரிந்து பேசினால். அப்பா மனம்போல் பெண் மனமும் மாறிவிடும். அப்புறம் என்னவாகுமோ யாருக்குத் தெரியும்? உனக்குப் பிறக்கும் குழந்தையை நீயே கிணற்றில் தூக்கி எறிந்தாலும் எறிவாய்—தாலி கட்டிய புருஷனுக்குப் பாஷாணத்தைப் பாலில் கலந்து கொடுத்தாலும் கொடுப்பாய். ஆகையால், ஜாக்கிரதை! இம்மாதிரி எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதே’ என்றார்.

“அன்றிருந்து இன்றுவரை எனக்கு மனச்சாந்தி கிடையவே கிடையாது, லீலா! நான் அப்படிப்பட்டவளா? என் தகப்பனும் குற்றவாளியாயிருந்த போதிலும், அவரை நிரபராதி என்று என் மனம் ஏன் கருதுகிறது? தாத்தா எச்சரித்தாரே, அப்படி அப்பாவின் மனப்பான்மை என்னிடமிருந்தால், நான் உலகத்துக்கு எவ்விதத்திலும்

பிரயோசனமில்லை. என் படிப்பு வீண் தான். நான் மணந்து, குடித்தனம் நடத்துவது கூட வீண்தான்" என்று மறுபடியும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

விஷயம் எனக்கு விளங்கியது. அவன் பீடரைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறுள்.

கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. என் கணவரும், அவரைப் பின் தொடர்ந்து பீடர்டேவிஸனும் உள்ளே வந்தார்கள்.

"இது என்ன? என் கருணு? என்ன நடந்துவிட்டது?" என்று கேட்டார் பீடர். அவள் பதிலளிக்கவில்லை. அவள் என்னைக் கட்டிக் கொண்டு மறுபடியும் அழ ஆரம்பித்து விட்டாள். என்ருல் முடிந்தவரை அவளை ஆசுவாசப் படுத்திக் கொண்டே "கருணு, இதோ பார் நீ மிகவும் களைத்துப் போயிருக்கிருய். இன்றிரவு இங்கேயே படுத்துக்கொள். நாளைக் காலை வீட்டுக்குப் போகலாம்" என்று நான் அவளைத் தேற்றினேன்.

"லீலா, என் மனப்பான்மை கொலையாளியின் மனப்பான்மை போல் தோன்றுகிறதா?" என்று அவள் மறுபடியும் தன் பேச்சை ஆரம்பித்தாள்.

"பைத்தியம் மாதிரி பேசாதே, கருணு! நீ எவ்வளவோ படித்தவள். மனித சுபாவத்தையும், மனித இயல்பையும் அறிந்தவள். கொலையாளியின் மகளாயிருந்தால் என்ன? நீ கொலையாளியா? உலகம் உன்னைக் கொலையாளியாக மாற்றி விடுமா என்ன? மற்றவர் குற்றங்களை உன் தலையில் சுமந்து கொள்ள முடியுமா, என்ன? நீ தூங்கு. நாளைக் காலையில் நீ பீடருக்குச் 'சரி' என்று சொல்லி விடு" என்று சொல்லிவிட்டு, அவள் மீதிருந்த போர்வையை இழுத்துப் போர்த்திவிட்டு, வெளியே வந்தேன்.

ஹாலில் என் கணவரும், பீடரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

என் கணவர் சிரித்துக் கொண்டே, "வீடு தேடவேண்டியதுதான், பீடர்! இனி உன்னைப் பார்ப்பதென்ருல் அபூர்வம்தான்" என்று அவனைக் கேலிபண்ணினர்.

பீடர் கோட்டை அணிந்து கொண்டு, "'குட்நைட்!' நாளைக் காலையில் பார்க்கிறேன் உங்களை!" என்று சொல்லிக் கொண்டே வெளியே கிளம்பிஞன்.

* * *

"அப்பா! என்ன ஒரு நாளைய சம்பவங்கள—இவ்வளவும்?" என்று களைத்துப் போய் நான் ஜன்னல் வழியாக வானத்தை நோக்கினேன். மூடுபனி நன்ருகக் கலைந்திருந்தது. பிறைச் சந்திரனும் உதித்திருந்தான்.

"என்ன யோசனை, லீலு?" என்று கேட்டார் என் கணவர்.

"ஒன்றுமில்லை. பீடரும் கருணுவும் ஒருவரை யொருவர் எவ்வளவு காதலிக்கிருர்கள் தெரியுமா?" என்றேன் நான்.

"எனக்கு அது முன்பே தெரியும். மூன்று வருடங்களுக்கு முன் நாமும் அம்மாதிரி இல்லையா, லீலு?" என்று சொல்லிக்கொண்டே அவர் என்னை நெருங்கினர். எனக்குச் சிரிப்பு வந்தது.

★ ★ நேருவின் சீற்றம் ★ ★

காலஞ்சென்ற பண்டித மோதிலால் நேரு அவர்களிடம் காங்கிரஸ் ஊழியர்களுக்கு எவ்வளவு மதிப்பு இருந்ததோ அவ்வளவு பயமும் இருந்தது.

ஒரு முறை நடந்த காங்கிரஸ் மகாநாட்டுக்கு எல்லாத் தலைவர்களும் வந்து விட்டார்கள். பண்டித மோதிலால் நேரு மாத்திரம் வரவில்லை. எல்லோரும் அவருடைய வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில், மோதிலால் நேருவும் வந்தார். 'நேரு வந்து விட்டார்' என்ற செய்தி ஒரு வினாடிக்குள் மகாசபை முழுவதும் பரவிற்று. அவ்வளவுதான்! சற்று நேரத்துக்கு முன்பு வரை மகாசபையில் கலகல வென்று எழுந்து கொண்டிருந்த சத்தம் 'கப்' பென்று அடங்கிவிட்டது. எல்லோரும் வாய் பேசாமல் மௌனமாக ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு நின்றுர்கள். அவர்களுடைய சப்தநாடிகளும் அடங்கி ஒடுங்கிவிட்டன.

இது ஜவாஹர்லால் நேருவுக்குப் பிடிக்கவில்லை. அவருக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. அவர் விரைந்து எழுந்து மேடைக்கு வந்தார். "மோதிலால் நேரு என்ன பேயா, பிசாசா? நீங்கள் எதற்காக இப்படிப் பயப்பட வேண்டும்?" என்று மேஜைமேல் அறைந்து கேட்டார்.

கூட்டத்தில் மெதுவாக மீண்டும் கலகலப்பு உண்டாயிற்று.

மோதிலால் நேருவுக்குப் பயப்பட்டாலும் பயப்படா விட்டாலும், ஜவாஹர்லால் நேருவுக்கு அவசியம் பயப்பட்டாக வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்களோ என்னவோ?

அதிசயக் குழந்தை

எஸ். கே. எம்.

"என்ன ஸார், சௌக்கியமா?"

"சௌக்கியம்! உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகி விட்டது."

"ஆமாம், ஸார்! மோஹன் பிறப்பதற்கு முன் பார்த்தது; அப்புறம் பார்க்க முடியவில்லை. மோஹனுக்கு ஒரு வயது இருக்கும் அல்லவா?"

"ஒரு வயதுக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கிறது ஸார்!"

"அப்படியா? மோஹனுடைய தாய் இறந்து போன விஷயத்தைக்கேட்டு நான் ரொம்பத் திடுக்கிட்டுப் போய் விட்டேன், ஸார்! நீங்கள் ரொம்ப வருத்தப்பட்டு உடம்பைக் கெடுத்துக்காதேங்கோ!"

"சும்மாலே என்ன ஸார் செய்ய முடியும்? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்."

இவ்விதமாக 'பீச்'சில் நான் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களில் உள்ளூர்க்காரர் என்று எனக்குத் தோன்றியவருடைய மனைவி ஒரு குழந்தையைப் பிரசவித்து விட்டு இறந்துபோயிருக்க வேண்டும் என்று ஊகித்தேன். அவருடைய முகத்தில் துக்கத்தின் சாயை படர்ந்திருந்தது. அவருடைய பரிதாபமான நிலைமையைக் கண்டு நானும் இரண்டு சொட்டுக் கண்ணீர் உகுத்தேன். அவர்களுடைய சம்பாஷணையை மேலும் கவனமாகக் கேட்க ஆரம்பித்தேன்.

"மோஹன் இப்போது நன்றாகப் பேசுகிறானா, ஸார்?"

"ஆஹா, பேஷாகப் பேசுகிறான். நீங்கள் ஒரு நாள் அவசியம் வந்து பார்க்க வேண்டும், ஸார்! நான் தான் பேசச் சொல்லிக் கொடுக்கிறேன். தாயில்லாக் குழந்தையை எவ்வளவு அன்புடன் நன்றாக வளர்க்க முடியுமோ அவ்வளவு நன்றாக வளர்க்கிறேன். 'அப்பா, வா!' என்று சொல்லுகிறான்; 'போ' என்கிறான்; 'சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் போ' என்கிறான். இன்னும் எவ்வளவோ பேசப் பேசுகிறான், ஸார்!"

"என்னென்ன உணவு கொடுக்கிறீர்கள், ஸார்?"

"பழங்கள், சாதம், பிஸ்கோத்து எல்லாம் கொடுக்கிறேன். தினம் இரண்டு மாம்பழம், வாழைப்பழம், கொடுக்கிறேன். அதைத் தவிர முந்திரிப் பருப்பு, நிலக்கடலை எல்லாம் கொடுக்கிறேன்."

"நன்றாகக் குதித்து விளையாடுகிறானா, இப்போது?"

"ஓ! நன்றாகக் குதிக்கிறான். இங்கேயும் அங்கேயும் தத்தித் தத்தி ஓடுகிறான். ஆனால் நான் அவனை வெளியிலே விடுவதில்லை."

இதையெல்லாம் கேட்டதும் எனக்கு நான் இருப்பது பூலோகமா, கைலாசமா என்று சந்தேகம் ஏற்பட்டு விட்டது. பேசிக் கொண்டிருக்கிறவருக்கு ஒருவேளை சித்தப் பிரமையோ, அல்லது அவர் மந்திரவாதியோ என்றுகூட என் மனம் குழம்ப ஆரம்பித்து விட்டது. ஒரு வயதுக் குழந்தையாம்! நன்றாகப் பேசுகிறானாம்! பழங்கள், சாதம் எல்லாம் நிறைய சாப்பிடுகிறானாம்!

வெகுநேரம் வரை அவர்கள் பேசிக் கொண்டிருந்த பிறகு புறப்பட்டார்கள்.

புறப்படும்போது, மனைவியை இழந்தவர் என்று நான் யூகித்த அந்த மனிதர் தம்முடைய நண்பரைப் பார்த்து, நாளை 'பீச்'சுக்கு வருகிறீர்களா? மோஹனையும் வேண்டுமானால் அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்றார்.

"அப்படியானால், நானும் வருகிறேன். இந்த இடத்திற்கே வந்து விடுகிறேன்" என்றார்.

* * *

இதைக் கேட்ட பிறகு நானும் அங்கே போகாமலிருப்பேனா? அந்த விநோதமான குழந்தையைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு உண்டான ஆவல் கொஞ்ச நஞ்சம் அல்ல. மாலை ஐந்து மணிக்கே 'பீச்'சுக்குப் போய் முன்பு உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தேன். அவர்கள் இருவரும் வந்தார்கள். குழந்தையைக் காணோமே என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் "டேய், மோஹன்!" என்ற சத்தத்தைக் கேட்டதும், ஒரு நாய்க்குட்டி அவர்களுக்கு முன்னால் குதித்துக் கொண்டு ஓடி வந்தது.

எனக்கு உண்டான வியப்பும் சிரிப்பும் கொஞ்ச நஞ்சம் அல்ல.


LUX
LUX TOILET SOAP
பி. எஸ். ஸரோஜா
தனது மிருதுவான அழகிய
மேனியை லக்ஸ் டாய்லட் சோப்
பினால் காப்பாற்றிக்கொள்கிறார்.
லக்ஸ் டாய்லட் சோப்
LTS. 181-111 TM
★ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



KALKI ஜூன் 6, 1948 4 அணா

REGD. NO. M. [illegible]



RAJA SNOW'S HAIR OIL
RAJA (REGD) SNOW
MANYAM & CO
ராஜாஸ்னோ
ஹேர் ஆயில்
கஸ்தூரி சோப்
FAS 20
MANYAM & CO.,
BANGALORE, MADRAS,
MADURA, BOMBAY.
RAJA SNOW'S
Kasturi Soap
MANYAM & CO
BANGALORE.